
August 2009
Issue : 20

# செங்கதிர்

இலட்சியம் இல்லாமல் இலக்கியம் இல்லை




அமரர்.வ.நல்லையா



கலாபூஷணம் புன்னியாமீன்

**2009ம் ஆண்டின் நூற்றாண்டு விழா நாயகர்கள்**



அல்ஹாஜ் ஆ.மு.ஷரிபுத்தீன்

50/=

இலங்கையிலிருந்து வெளிவரும்
கலை-இலக்கிய-பண்பாட்டுப் பல்சுவைத் திங்களிதழ்

ஆவணி : 2009
வீச்சு : 20

## அன்பானவர்களே!

* இவ்வருடத்திற்குரிய (2009) சந்தாவை இதுவரை செலுத்தாதவர்கள் சந்தாத் தொகையான ரூ.750/= ஐச் செலுத்தி உதவுங்கள்.

* அன்பளிப்புக்களை வழங்க விரும்பும் நலன்விரும்பிகள் அதனை நடைமுறைப்படுத்தி உதவுங்கள்.

* **வங்கி :** மக்கள் வங்கி (நகரக்கிளை), மட்டக்களப்பு.
  **கணக்கு இல :** 113100138588996 (நடைமுறைக்கணக்கு)
  **காசுக்கட்டளை :** அஞ்சல் அலுவலகம், மட்டக்களப்பு.

* பணத்தைத் தொகையாக ஆசிரியரிடம் நேரிலோ/ காசுக்கட்டளையாகவோ / காசோலையாகவோ / வங்கி வைப்பு மூலமாகவோ செலுத்தலாம்.

* காசோலைகள் / காசுக்கட்டளைகளை **த. கோபால கிருஸ்ணன்** என்று பெயரிடுக.

* உங்கள் ஆதரவை அளித்து 'செங்கதிர்' இன் வரவுக்கும் வளர்ச்சிக்கும் உதவுங்கள்.

### மலையகத்தில் 'செங்கதிர்' கிடைக்குமிடங்கள்

**ஹட்டனில்**
**கிருஸ்ணா ஸ்ரோர்ஸ்**
86, சைட் வீதி,
ஹட்டன்.

**பதுளையில்**
**V.அந்தனிஸ்**
120/2, கனுபெலலல் வீதி,
பதுளை.

"இலட்சியம் இல்லாமல்
இலக்கியம் இல்லை"

# செங்கதிர்

▶ தோற்றம் : 30.01.2008 ◀

**20**

ஆவணி 2009 (தி.வ ஆண்டு 2040)

▶ 2வது ஆண்டு ◀


**ஆசிரியர் : செங்கதிரோன்**

**துணை ஆசிரியர் : அன்பழகன் குரூஸ்**

தொ.பேசி / Tel : 0777492861

மின்னஞ்சல் / E-mail : croos_@yahoo.com

**தொடர்பு முகவரி :**

திரு.த.கோபாலகிருஸ்ணன்

இல.19, மேல்மாடித்தெரு,

மட்டக்களப்பு, இலங்கை.

**Contact :**

**Mr.T.Gopalakrishnan**

19,Upstair Road,

Batticaloa, Sri Lanka.

**தொலைபேசி / Telephone**

*065-2223950 077-2602634*

**மின்னஞ்சல் / E-mail**

senkathirgopal@gmail.com


**ஆக்கங்களுக்கு ஆக்கியோரே பொறுப்பு.**


ஆசிரியர் பக்கம் .................... 02

அதிதிப்பக்கம் .................... 03

மனங்கள் (சிறுகதை) .................... 11

கதிர்முகம்

★ என் நினைவில் அமரர் வ.நல்லையா ... 15

★ அல்ஹாஜ் ஆ.மு.ஷரிபுத்தீன் ............ 18

விளைச்சல் – 16 (குறுங்காவியம்) .... 21

பழமொழிகளும் புது விளக்கங்களும் .... 24

அவள் யோசிக்கிறாள் (கவிதை) .......... 25

ஒரு படைப்பாளனின் மனப்பதிவுகள் – 7 .................... 26

நானாக நான் (கவிதை) .................... 32

பாரதியியலுக்கும் கல்வியியலுக்குமான ஒரு புதிய பங்களிப்பு .................... 33

மட்டுநகரின் மருத்துவச் சமூகம் பேசப்படாத வரலாறு .................... 38

மூக்கறுந்த கடைகள் (கவிதை) .......... 39

எனக்குப்பிடித்த என் கதை .......... 40

பகிர்வு .................... 45

துணிவு (குறுங்கதை) .................... 46

நல்லூர் பிரதேச செயலகத்தின் "கலைஞானம்" பதிவேடு ஒரு முன்னோடி முயற்சி .................... 47

செங்கமலம் –7 (தொடர் நாவல்) .......... 48

மலையகத்தில் சிறுகதை வரலாறும் வளர்ச்சியும் – 4 (தொடர் கட்டுரை) .... 53

அடிமை வாழ்க்கை (சிறுகதை)

சென்றமாதத் தொடர்ச்சி .................... 57

சொல்வளம் பெருக்குவோம் – 5 .......... 58

விளாசல் வீரக்குட்டி .................... 61

வானவில் (வாசகர் பக்கம்) .................... 62

# ஆசிரியர் பக்கம்

இவ்வாண்டு, மட்டக்களப்பு மாநிலம் முக்கிய இரு ஆளுமைகளின் நூற்றாண்டு விழாவினைக் கண்டுள்ளது. அந்த இரு ஆளுமைகளும், அமரர்களாகிவிட்ட வ.நல்லையா மற்றும் அல்ஹாஜ் ஆ.மு.ஷரிபுத்தீன் ஆகியோரே.

திரு.வ.நல்லையாவோடு வாழ்ந்து அவரோடு பழகிய மட்டக்களப்பின் மூதறிஞர் திரு.வ.சிவசுப்பிரமணியம் **BA** அவர்கள் **'என் நினைவில் அமரர் நல்லையா'** என்ற கட்டுரையை **'செங்கதிர்'** இன் இவ்விதழில் (பக்கம் 15) எழுதியுள்ளார்.

அல்ஹாஜ் ஆ.மு.ஷரிபுத்தீன் அவர்கள் பற்றிய விபரங்களும் இவ்விதழில் (பக்.18) தரப்பட்டுள்ளன.


மட்டக்களப்பின் அரசியல் மற்றும் கல்வி வரலாற்றையும் வளர்ச்சியையும் ஆய்வுசெய்ய முனைவோருக்கு அமரர் வ.நல்லையாக அவர்கள் பற்றிய கட்டுரையும்; மட்டக்களப்பின் கவிதைப் பாரம்பரியத்தின் வேர்களைத் தேட விழைவோருக்கு அல்ஹாஜ் ஆ.மு.ஷரிபுத்தீன் பற்றிய குறிப்புக்களும் பயனுடையதாகும் என நம்புகின்றோம். மட்டுமல்ல, இவ்வாளுமைகளின் தடத்தில் எதிர்காலக் கல்விமான்களும், இலக்கியவாதிகளும் செயற்படுவார்களேயானால் இன்றைய இளைய சமுதாயம் எதிர்காலத்தில் செழுமையுறும் என்பதும் **'செங்கதிர்'** இன் நம்பிக்கை.

**- செங்கதிரோன்.**

## அதிதிப்பக்கம்

'செங்கதிர்' இதழின் இம்மாத அதிதி இதுவரை நூற்றைம்பது தமிழ்மொழி மூல நூல்களை எழுதி வெளியிட்டு எழுத்துலகில் சாதனை படைத்துள்ள எழுத்தாளரும் - வெளியீட்டாளருமான **கலாபூஷணம் ஜனாப் புன்னியாமீன்** அவர்களாவர்.





# 150 தமிழ்மொழி மூல நூல்கள் எழுதியுள்ள இலங்கை எழுத்தாளர் கலாபூஷணம் புன்னியாமீன்

**- அன்புமணி**

இலங்கையின் மத்திய மலைநாட்டின் தலைநகர் கண்டி மாநகருக்கு அருகேயுள்ள கட்டுகஸ்தோட்டை எனும் பிரதேசத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட **'பீர்மொஹம்மட் புன்னியாமீன்'** அவர்கள் மூத்த எழுத்தாளரும், பன்னூலாசிரியரும், வெளியீட்டாளரும், ஊடகவியலாளருமாவார். பழகுவதற்கு இனிய சுபாவம் கொண்ட இவர், கர்வமின்றி சாதாரண வாழ்க்கை வாழ்பவர். சமூக உணர்வுமிக்கவர். தனது சமூகத்துக்காகவும், ஒடுக்கப்பட்ட மக்களுக்காகவும் என்றும் எழுத்தின் மூலம் குரல்கொடுத்து வருகின்றவர்.

1960ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11 ஆம் திகதி பீர்மொஹமட், சைதா உம்மா தம்பதியினரின் புதல்வராகப் பிறந்த புன்னியாமீன் க/ஜாமியுல் அஸ்ஹர் மத்திய கல்லூரி, க/மடவளை மதீனா தேசிய கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவராவார். பேராதனைப் பல்கலைக்கழக கலைமாணிப் பட்டதாரியான இவர், ஊடகவியல் துறையில் டிப்ளோமாப் பட்டத்தினையும் பெற்றுள்ளார்.

தொழில் ரீதியாக 1983 ஆம் ஆண்டில் ஆசிரியர் சேவையில் இணைந்த புன்னியாமீன், பின்பு கல்லூரி முதல்வராகவும், மத்திய மாகாண சபையின் கல்வி, கலாசார அமைச்சின் இணைப் பதிகாரியாகவும், மத்திய மாகாண கலாசார அமைச்சின் உதவிப் பணிப்பாளராகவும், சேவையாற்றி 2004 ஆம் ஆண்டில் சுயவிருப்பின் பேரில் ஓய்வுபெற்றார். தற்போது வரையறுக்கப்பட்ட **'சிந்தனைவட்டம்'** தனியார் கம்பனியின் முகாமைத்துவப் பணிப்பாளராகக் கடமையாற்றிக் கொண்டு முழுநேர ஊடகவியலாளராகவும், தமிழ் இலக்கிய ஆய்வாளராகவும் செயலாற்றிக் கொண்டிருக்கின்றார்.

1999 ஆம் ஆண்டில் இவர் இலங்கையில் மத்திய மாகாண கலாசார அமைச்சின் உதவிப் பணிப்பாளராகப் பணியாற்றிக் கொண்டிருந்த காலகட்டங்களில் மத்திய மாகாணத்தில் முஸ்லிம் சாகித்திய விழாவொன்றினை மிகவும் திறன்பட நடத்தி முடித்ததுடன், அவ்விழா வில் 15 முஸ்லிம்களையும், 3 தமிழர்களையும், 2 சிங்களவர்களையும் கௌரவிக்க ஏற்பாடு செய்தி ருந்தார். 1987 ஆம் ஆண்டு மாகாண சபை முறை இலங்கையில் அறிமுகம் செய்யப்பட்டதை யடுத்து மாகாண மட்டத்தில் முஸ்லிம் சாகித்திய கலாசார விழாவொன்று நடைபெற்றமை இவரது மற்றொரு சாதனையாகும்.

இலக்கிய ஆர்வம் இவருக்கு இயல்பாகவே ஏற்பட்டது. இவர் பாடசாலையில் கற்கும் காலங்களில் (1973/1974) **'இளங்கதிர்'**, **'இளங்காற்று'**, **'இளந்தென்றல்'** ஆகிய கையெழுத்துச் சஞ்சிகைகளின் ஆசிரியராக நின்று வெளியிட்டுள்ளார். தொடர்ந்து வாசிப்புத் துறையில் ஆர்வம் காட்டி வந்த இவரின் சுய ஆக்கமான முதல் உருவகக் கதை **'அரியணை ஏறிய அரச மரம்'** எனும் தலைப்பில் 1976 ஜூலை 02ஆம் திகதி தினகரன் வாரமஞ்சரியில் பிரசுரமானது. அதேநேரம், இவர் ஒரு நாடக நடிகரும்கூட. பாடசாலையில் கற்கும்போது இவரால் நடிக்கப்பட்ட நாடகங்கள் பல பரிசில்களை வென்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

160க்கும் மேற்பட்ட சிறுகதைகளையும், 1000க்கும் மேற்பட்ட சமூக, இலக்கிய, அரசியல், திறனாய்வு, கல்விசார் கட்டுரைகளையும் எழுதியுள்ளார். இத்தகைய இவரின் ஆக்கங்கள் இலங்கையின் தேசிய பத்திரிகைகள், சஞ்சிகைகளிலும், இந்தியாவில் **'கலைமகள்'**, **'தீபம்'**, **'தாமரை'** உட்பட புலம்பெயர் நாட்டு இலக்கிய ஏடுகளிலும் பிரசுரமாகி உள்ளன. இலங்கை வானொலியிலும் ஒலிபரப்பாகியுள்ளன.

இவரின் முதலாவது சிறுகதைத் தொகுதியை **'தேவதைகள்'** எனும் தலைப்பில் 1979.11.11 ஆம் திகதி கட்டுகஸ்தோட்டை **'இஸ்லாமிய சேமநல சங்கம்'** எனும் சமூக சேவையமைப்பு வெளியிட்டது. இச்சிறுகதைத் தொகுதி இவரின் 19வது வயதில் வெளி வந்தது. இத்தொகுதியில் 14 சிறுகதைகள் இடம்பெற்றிருந்தன. அதைத் தொடர்ந்து புன்னியாமீன் இதுவரை 150 நூல்களை தமிழ்மொழி மூலம் எழுதி வெளியிட்டுள்ளார். இலங்கையில் தமிழ் மொழி மூலம் ஆகக்கூடுதலான நூல்களை எழுதியுள்ளவர் இவரெனவே கருதப்படுகின்றது.

இவரால் எழுதப்பட்ட 150 நூல்களுள் 07 சிறுகதைத் தொகுதிகள் அடங்கும். அவை **'தேவதைகள்'**, **'நிழலின் அருமை'**, **'கரு'**, **'நெருடல்கள்'**, **'அந்தநிலை'**, **'யாரோ எவரோ எம்மை ஆள'**, **'இனி இதற்குப் பிறகு'** என்பனவாகும். இவரின் இரண்டாவது சிறுகதைத் தொகுதியான **'நிழலின் அருமை'** 1982-1986 ஆம் ஆண்டுகளுக்கு இடைப் பட்ட காலகட்டத்தில் இலங்கையின் முஸ்லிம் எழுத்தாளர்களால் எழுதப்பட்ட சிறுகதைத் தொகுதிகளுள் சிறந்ததொன்றாக முஸ்லிம் சமய, கலாசார அமைச்சினால் தேர்ந்தெடுக்கப் பட்டு விருதும், பணமுடிச்சும் வழங்கப்பட்டது. புன்னியாமீனின் சிறுகதைகளில் தான் வாழும் சமூகத்தின் பிரச்சினைகளை கருப்பொருளாகக் கொண்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது. தனது சமூகத்தின் அரசியல் பிரச்சினைகள், சமூகப் பிரச்சினைகள், மூட நம்பிக்கைகள், இன்றைய காலகட்டத்தில் இலங்கையில் அவசியமாகத் தேவைப்படும் இன நல்லுறவுகள்

ஆகியன முக்கியம் பெறுவதையும் காணமுடிகின்றது. அதேநேரம், இவரின் சிறுகதைகளில் ஆற்றொழுக்கான எழுத்து நடையும், மென்மையான இலகு முறையில் கதையை நகர்த்திச் செல்லும் பாணியும் தனித்துவமாக அமைந்து காணப்படும்.

புன்னியாமீன் இதுவரை **'அடிவானத்து ஒளிர்வுகள்'** எனும் ஒரேயொரு நாவலை மாத்திரமே எழுதியுள்ளார். 1983ஆம் ஆண்டு எழுதப்பட்ட நாவல் 1987 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் தென்னிந்தியாவில் **'அல்-பாஸி பப்ளிகேஷன்'** வெளியீடாக வெளிவந்தது. பின்பு இதன் 2ம் பதிப்பு சிந்தனைவட்ட வெளியீடாக 2003 ஆம் ஆண்டு ஜூலை மாதம் வெளிவந்தது. இலங்கை முஸ்லிம்களுக்கு தனியானதோர் அரசியல் கட்சி அவசியம் என்பதை இந்நூலினூடாக புன்னியாமீன் வலியுறுத்தியிருந்ததுடன், இலங்கையில் மாகாணஎ அதிகாரப் பரவலாக்கம் பற்றிய வியூகங்களை அடிப்படையாகக் கொண்டு இந்நூலினை எழுதியிருந்தார். இலங்கை அரசியல் பிரச்சினைகளை மையமாகக் கொண்டு எழுதப்பட்ட முதல் நாவலாக இது கருதப்படுகின்றது.

2002 ம் ஆண்டு இலங்கையில் நடைபெற்ற உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டு ஆய்வரங்கக் கோவையில் தென்னிந்தியாவைச் சேர்ந்த பேராசிரியர் மு.அப்துல்சமது **'அடிவானத்து ஒளிர்வுகள்'** நாவலைப் பற்றியும் **'இஸ்லாமிய சமூகம் பின்புல நாவல்களில் சமூக முரண்பாடுகள்'** எனும் ஆய்வுக் கட்டுரையில் விரிவாக ஆராய்ந்துள்ளார். அதேநேரம், 2008ம் ஆண்டு பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை சிறப்புக் கற்கையில் மேற்கொள்ளும் ஒரு மாணவியும், **'அடிவானத்து ஒளிர்வுகள்'** நாவலை தனது ஆய்வுக் கருப்பொருளாக எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

தனது ஆரம்ப காலகட்டங்களில் படைப்பிலக்கியத் துறையில் அதிக ஆர்வமும், ஈடுபாடும் காட்டிவந்த புன்னியாமீன், 1990களில் இறுதிப் பகுதியில் படைப்பிலக்கியத் துறையிலிருந்து ஒதுங்கியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். 1996 ஆம் ஆண்டின் பின்பு படைப்பிலக்கியத் துறையிலிருந்து இவர் விலகி ஆய்வு அடிப்படையிலான நூற்றுக்கணக்கான கட்டுரைகளையும், குறிப்பிடத்தக்க புத்தகங்களையும் எழுதியிருப்பது அவதானிக்கத்தக்கதாகும். 1994 ஆம் ஆண்டிலிருந்து அரசியல் ரீதியான பல ஆய்வுக் கட்டுரைகளை இவர் எழுதியுள்ளார். அரசியலை மையமாகக் கொண்டு 1994 ஆகஸ்ட் மாதம் இவர் எழுதிய **'இலங்கையில் தேர்தல்கள் (அன்றும், இன்றும்)'** இதேயாண்டில் இவர் எழுதிய **'94 பொதுத் தேர்தலும் சிறுபான்மையினங்களும்'**, **'94 ஜனாதிபதித் தேர்தலும் சிறுபான்மையினங்களும்'** ஆகிய நூல்கள் பல்கலைக்கழக மட்டத்திலும், இலங்கை அரசியல் மட்டத்திலும் அதிகமாகப் பேசப்பட்டன. இதைத் தொடர்ந்து 2000 ஜனவரியில் **'21 ஆம் நூற்றாண்டில் இலங்கைத் தலைமைத்துவம்'**, 2000 நவம்பரில் **'2000 பாராளுமன்றத் தேர்தலும் சிறுபான்மை சமூகத்தினரும்'**, 2002 ஜனவரியில் **'சிறுபான்மை பிரதிநிதித்துவ விகிதாசாரம் பேணும் 12வது பாராளுமன்றம்'**, 2002 ஜூனில் **'மத்திய மாகாண சபையில் முஸ்லிம் அமைச்சுப் பதவிக்கு சாவுமணி'** ஆகிய அரசியல் நூல்கள் இலங்கையின் சிறுபான்மை சமூகங்களின் அரசியல் நிலைப்பாடுகளையும், எதிர்காலங்களையும்

தெளிவுபடுத்துவதாக அமைந்துள்ளன. இந்த அரசியல் நூல்களில் பல மறுபதிப்பாக வெளிவந்தும் உள்ளன. இவற்றுக்கும் மேலதிகமாக அரசறிவியல் தொடர்பாகவும் குறிப்பாக உயர்தரம், பல்கலைக் கழக பட்டப்படிப்பு மாணவர்களுக்காக வேண்டி 14 அரசறிவியல் நூல்களை எழுதியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதேபோல பொது அறிவு சார்ந்த அடிப்படையிலும் புன்னியாமீன் இதுவரை 8 நூல்களை வெளியிட்டுள்ளார். இலங்கையில் தொழில் வாய்ப்புகளுக்காக வேண்டி நடாத்தப்படும் போட்டிப் பரீட்சைகள், நிர்வாக சேவை, கடல் கடந்த நிர்வாக சேவை, கடல் கடந்த நிர்வாக சேவை, கல்விச் சேவை தெரிவுக்கான போட்டிப் பரீட்சைகள் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு இந்த அறிவு நூல்கள் அமைந்துள்ளதைக் காண முடிகின்றது.

புன்னியாமீனின் 100வது நூலான **'புலம்பெயர்ந்த ஈழத்து எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்கள் விபரத்திரட்டு - பாகம் 01'** எனும் நூல் ஜெர்மனியில் டியுஸ்-பேச் நகரில் ஜேர்மன் தமிழ் எழுத்தாளர் சங்கத்தினால் வெளியிடப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. இவரின் 150வது நூலான **'இவர்கள் நம்மவர்கள் பாகம் - 4'** 2008 டிசம்பர் 28ஆந் திகதி இலங்கையில் வெளியிடப்பட்டது.

இலங்கையைப் பொறுத்தமட்டில் 19ஆம் நூற்றாண்டுக் காலப்பகுதியிலிருந்து இலங்கையில் தமிழ்மொழி வளர்ச்சிக்காக வேண்டியும் தமிழ்மொழியினூடாக சமய, கலாசார, தேசிய உணர்வுகளை ஏற்படுத்தக்கூடிய வகையிலும் ஆயிரக்கணக்கான எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்கள் தமது பங்களிப்புக்களை நல்கி வந்துள்ளனர். ஆனால், இன்றுள்ள தலைமுறையினருக்கும், நாளைய தலைமுறையினருக்கும் அவர்கள் யார்? என்ன செய்தார்கள், அவர்களின் பணிகள் எத்தகையவை என்ற விபரங்கள் தெரியாமல் இருக்கின்றது. பல்கலைக் கழக மற்றும் உயர்மட்ட ஆய்வுகளில் கூட, இத்தகைய தகவல்களைப் பெற முடியாதிருப்பது வேதனைக்குரிய ஒரு விடயமாகும். இதற்கான காரணம், இவர்கள் பற்றிய தரவுகள், விபரங்கள், குறிப்புக்கள் இன்மையே.

இதுபற்றி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும், அவை பதிவு செய்யப்பட்டு ஆவணப்படுத்தப்பட வேண்டுமெனவும், நீண்ட காலமாக பலரும் கூறிவந்தாலும்கூட, தொடர்ச்சியாக அம்முயற்சிகளில் யாரும் ஈடுபடவில்லை. முயற்சிகளை மேற்கொண்வர்களும் குறிப்பிட்ட சிலரின் விபரங்களைத் திரட்டி ஆவணப்படுத்தியதுடன், அவற்றைத் தொடரவில்லை. இந்நிலையில் புன்னியாமீன் 2002ஆம் ஆண்டிலிருந்து இலங்கையில் எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரங்களைத் திரட்டி அவற்றை முதல் கட்டமாக தேசிய பத்திரிகையொன்றில் பிரசுரித்து பின்பு நூலுருப்படுத்தி இணையத்தளத்தில் பதிக்கும் நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றார். 2008 டிசம்பர் வரை இலங்கைச் சேர்ந்த 325 எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரங்களைத் திரட்டி 14 தொகுதி நூல்களாக இவர் வெளியிட்டுள்ளார். அத்துடன், நூலகம் டொட்நெட் இணைத்தளத்திலும் இவை பதிவாக்கப்பட்டுள்ளன.

மேலும், இலங்கையிலுள்ள 14 பல்கலைக்கழகங்களிலும், தேசிய நூலகங்கள், தேசிய ஆவணக்காப்பகம் மற்றும் சுமார் 13 நாடுகளைச் சேர்ந்த தமிழ் நூல் ஆவணக்காப்பகங்களிலும் இவற்றை ஆவணப்படுத்தி வருகின்றார். இம்முயற்சியை தற்போதும் தொடர்ந்துகொண்டிருக்கிறார். தற்போது இலங்கையிலிருந்து வெளிவரும் முன்னணிப் பத்திரிகைகளில் ஒன்றான 'ஞாயிறுதினக்குரலில்' **'இவர்கள் நம்மவர்கள்'** எனும் தலைப்பில் இந்தக் கட்டுரைத் தொடர் பிரசுரமாகி வருகின்றது. தனது ஆயுட்காலத்துக்குள் குறைந்தபட்சம் 1000 **'இலங்கை எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்கள்'** விபரங்களையாவது திரட்டி ஆவணப்படுத்த வேண்டும் என்பதே இவரின் இலட்சியமாகும். இந்த அடிப்படையில் தற்போது இப்பணியிலேயே தன்னை முழுமையாக அர்ப்பணித்துள்ளார்.

**'இலங்கை எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்கள் விரபத் திரட்டு'** எனும் தலைப்பில் இவரது 14 தொகுதிகளில் இலங்கையைச் சேர்ந்த 325 எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்கள் விபரங்களும், புலம்பெயர் நாடுகளைச் சேர்ந்த 44 எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரங்களும் பதிவாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

புன்னியாமீன் அவர்களினால் எழுதப்பட்டுள்ள முதல் 110 நூல்களும் ஐக்கிய இராச்சியத்திலிருந்து திரு.என்.செல்வராஜா அவர்கள் தொகுத்து வெளியிட்டுவரும் ஈழத்துத் தமிழ் நூல்களின் சர்வதேச ஆவணக் களஞ்சியமான **'நூல் தேட்டத்தில்'** பதிவாக்கப்பட்டுள்ளன. அந்த 110 நூல்களினதும் பதிவினைத் தொகுத்து திரு.செல்வராஜா **'நூல் தேட்டத்தில் கலாபூஷணம் புன்னியாமீன்'** எனும் நூலினை எழுதியிருந்தார். நூல்தேட்டம் துணை நூல்வரிசை 01 ஆக இந்நூல் 2007 மார்ச்சில் வெளிவந்தது.

இவரது எழுத்துத் துறையைப் போலவே வெளியீட்டுத் துறையும் முக்கியத்துவம் பெறுகின்றது. 1981.11.11 இல் இவரின் வெளியீடு அமைப்பான **'சிந்தனை வட்டம்'** உருவாக்கம் பெற்றது. 1988 ஜனவரியில் **'பிரித்தானிய அரசாங்க முறை'** எனும் புத்தகத்தை வெளியிட்ட சிந்தனைவட்டம் இதுவரை (2008 டிசம்பர்) 300 புத்தகங்களை வெளியிட்டுள்ளது. சிந்தனைவட்டத்தின் 300வது வெளியீடு இவரின் **'இவர்கள் நம்மவர்கள் பாகம் -4'** ஆகும்.

இலங்கையைப் பொறுத்தமட்டில் தமிழ்நாடு வெளியீடு என்பது ஒரு கடினமான பணியாகும். இந்தியாவைப் போல வெளியீட்டகங்கள் வெளியிடக்கூடிய நூல்களின் குறிப்பிட்ட பிரதிகளை நூலக சபைகளோ, அரசோ கொள்வனவு செய்யக்கூடிய எவ்வித சிறப்பு ஏற்பாடுகளும் இங்கில்லை. எனவே, இலங்கையில் எழுத்தாளனே வெளியீட்டாளனாகவும் செயற்படக்கூடிய ஒரு துர்ப்பாக்கியமான நிலை காணப்படுகின்றது. இந்த அடிப்படையில் புன்னியாமீனின் விடாமுயற்சியினால் இதுவரை 300 நூல்களை வெளியிட்டுள்ளமை ஒரு சாதனை என்றே குறிப்பிட வேண்டும். சிந்தனைவட்டத்தால் வெளியிடப்பட்ட 275 நூல்களின் பதிவுகளை திரு.என்.செல்வராஜா **'நூல்தேட்டத்தில் சிந்தனைவட்டம்'** எனும் பெயரில் நூல்தேட்டம் துணை நூல் வரிசை இலக்கம் 02 ஆக 2007 நவம்பரில் வெளியிட்டிருந்தார். இந்நூலில் சிந்தனைவட்டத்தால் வெளியிடப்பட்ட 275 நூல்களும் நூலியல் பகுப்பாக்கத்துக்கமைய

தொகுக்கப்பட்டிருந்ததுடன், புத்தகங்களின் முகப்பட்டைப் புகைப்படங்களும் இணைக் கப்பட்டிருந்தன.

வளர்ந்த எழுத்தாளர்களைவிட வளர்ந்துவரும் எழுத்தாளர்களின் நூல்களை சிந்தனை வட்டத்தின் மூலமாக வெளியிட்டு ஒரு புதிய எழுத்தாளர் தலைமுறையை உருவாக்குவதில் புன்னியாமீன் அதிகளவில் ஆர்வம் காட்டி வருவதைக் காணமுடிகின்றது. இந்த அடிப்ப டையில் சிந்தனை வட்டத்தின் மூலமாக அறிமுகப்படுத்தப்பட்ட பல எழுத்தாளர்கள் இன்று இலங்கையில் புகழ்பெற்று விளங்குவதையும் காணக்கூடியதாக இருக்கின்றது.

அதேநேரம், தனது சிந்தனைவட்ட வெளியீட்டகத்தின் மூலமாக தேசிய ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் புகழ்பெற்று விளங்கும் மூத்த எழுத்தாளர்களையும், கலைஞர்களையும், ஊடகவியலாளர்களையும் இனங்கண்டு மிகவும் சிறப்பான முறையில் விருது வழங்கிக் கௌர வித்து வருகின்றமையும் இவரின் விசேடத்துவமான பண்புகளில் ஒன்றாகக் குறிப்பிடலாம். சிந்தனைவட்டத்தின் 100வது புத்தக வெளியீடு 2000 நவம்பர் 11ம் திகதி கண்டி **சிட்டிமிஷன்** மண்டபத்தில் மிகப் பிரமாண்டமான முறையில் நடைபெற்றது. இவ்வைபவத்தில் இலங்கை யின் மூத்த வானொலி அறிவிப்பாளர் **திருமதி. இராஜேஸ்வரி சண்முகம்** இலங்கையின் மூத்த எழுத்தாளரும் **'மல்லிகை'** சஞ்சிகையின் ஆசிரியருமான **டொமினிக் ஜீவா,** இலங்கையின் மற்றுமொரு மூத்த எழுத்தாளரும், ஆய்வாளரும், கல்விமானும், பன்னூலாசிரிய ருமான **எஸ்.எச்.எம்.ஜெமீல்,** இலங்கையின் தமிழிலக்கியக் காவலரும், பூபாலசிங்கம் புத்தக நிலைய உரிமையாளருமான **ஸ்ரீதர்சிங்** ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர்.

2004 செப்டம்பர் 11ஆந் திகதி சிந்தனைவட்டத்தின் 200வது நூல் வெளியீட்டுவிழா நடைபெற்றது. இந்த விழாவில் இலங்கையின் மூத்த முஸ்லிம் பெண் எழுத்தாளர் **நயீமா சித்திக்,** மூத்த கவிஞரும், பன்னூலாசிரியருமான கல்ஹின்னை **ஹலீம்தீன்,** இலங்கையின் சிரேஷ்ட நூலகவியலாளரும், தற்போது ஐக்கிய இராச்சியத்தில் வசித்து வருபவரும், பன்னூலா சியரும், அயோத்தி நூலக சேவைகள் ஸ்தாபகருமான **திரு. என். செல்வராஜா,** இலக்கிய ஆய்வளரும், இலக்கியக் காப்பகருமான **என்.எல்.ரசீன்** ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர்.

சிந்தனைவட்டத்தின் 300வது நூல் வெளியீட்டு விழா கடந்த 2008 டிசம்பர் 28ந் திகதி வத்தேகெதர முஸ்லிம் மகா வித்தியாலக கேட்போர்கூடத்தில் வெகு விமரிசையாக நடைபெற்றது. இவ்விழாவில் முதுபெரும் எழுத்தாளரும், பன்னூலாசிரியருமான **அன்புமணி,** மூத்த கவிஞர் **ஏறாவூர் அனலக்தர்,** இலங்கையில் தமிழ், சிங்கள இலக்கிய உறவுக்குப் பாலமமைத்து வரும் சிரேஷ்ட மொழிபெயர்ப்பாளரும் 52 நூல்களை எழுதியுள்ள சிங்கள நூலாசிரியருமான **மடுளுகிரிய விஜயரத்ன,** மூத்த எழுத்தாளரும், பன்னூலாசிரியரும், ஞானம் சஞ்சிகையின் ஆசிரியருமான **டாக்டர் ஞானசேகரன்,** மூத்த தமிழ் இலக்கியக் காவலரும், ஆசிரியருமான **ஐ. ஹாஜிதீன்** ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர். அதேநேரம், 2003 ஆம் ஆண்டு சிந்தனை வட்டத்தின் **'நிழல்களின் நிஜம்'** கவிதை நூல் வெளியீட்டு விழாவில் இலங்கையின் சிரேஷ்ட வானொலி அறிவிப்பாளரும், சர்வதேச புகழ் தமிழ் அறிவிப்பாளருமான **பி.எச்.அப்துல்ஹமீத்** கௌரவிக்கப்பட்டார்.

புன்னியாமீன் 1979 ஆம் ஆண்டு **'விடிவு'** எனும் இலக்கிய சஞ்சிகையையும், 1980களில் **'அல்ஹிலால்'** எனும் பத்திரிகையையும் ஆசிரியராகவிருந்து நடத்திவந்தார். இலங்கையில் தேசிய பத்திரிகைகளில் நிருபராகப் பணியாற்றியுள்ளார். தற்போது ஐக்கிய இராச்சியத்திலிருந்து வெளிவரும் **'உதயன்'** **'லண்டன் குரல்'** ஆகிய பத்திரிகைகளிலும், **'தேசம்'** சஞ்சிகையினதும் இலங்கைச் செய்தியாளராகப் பணியாற்றிவரும் அதேநேரத்தில் ஐக்கிய இராட்சியத்தைத் தளமாகக் கொண்டியங்கும் முன்னணி இணையத்தளமொன்றின் செய்தியாசிரியராகவும் பணியாற்றுகின்றார்.

இவரது பல இலக்கியப் பேட்டிகள் இலங்கையில் **'ஐ'** தொலைக்காட்சி, பிரித்தானியாவில் **'தீபம்'** தொலைக்காட்சி, பிரித்தானியாவின் சர்வதேச ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் **'(ஐ.பீ.ஸி) வானொலி'**, **'லண்டன் தமிழ் வானொலி'**, ஜெர்மனியில் **'ஐரோப்பிய தமிழ் வானொலி'** ஆகியவற்றில் நேரடி ஒளி/ஒலிபரப்பாக இடம்பெற்றுள்ளன.

இவரின் இத்துறை சாதனைகளுக்காக மத்திய மாகாண இந்து கலாசார அமைச்சு 1995 ஆம் ஆண்டுக்கான மத்திய மாகாண சாகித்திய விழாவில் பொற்கிழியும், விருதும் வழங்கிக் கௌரவித்தது. மேலும், மக்கள் கலையிலக்கிய ஒன்றியம் கண்டியில் நடாத்திய இலக்கிய விழாவொன்றில் பேராசிரியர் துரைமனோகரன், பேராசிரியர் க.அருணாசலம், பேராசிரியர் அம்பலவாணன் சிவராசா ஆகியோர் முன்னிலையில் அப்போதைய பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் தில்லைநாதன் அவர்களினால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார். மேலும், இரத்தின தீப விருது இவருக்கு இரு தடவைகள் வழங்கப்பட்டுள்ளன.

ஸ்ரீலங்கா அரசு கலைஞர்களுக்கும், இலக்கியவாதிகளுக்கும் வழங்கும் அதிஉயர் விருதான **'கலாபூஷணம்'** விருதினை 2004ம் ஆண்டு இவருக்கு வழங்கியது. இலங்கையில் **'கலாபூஷணம்'** விருது 60 வயதுக்கு மேற்பட்டோருக்கே வழங்கப்படுவதுண்டு. இலங்கையில் அரசால் வழங்கப்படும் இவ்வுயரிய விருது 100 புத்தகங்கள் எழுதியமைக்காக புன்னியாமீனுக்கு சிறப்பு அனுமதிப்படி 44 ஆம் வயதிலே வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். இதுவரை கலாபூஷணம் விருது பெற்றுள்ள வயதில் குறைந்தவரும் இவரே. அதேநேரம், பல்வேறுபட்ட பிரதேச இலக்கிய விழாக்களில் விருதுகள், பட்டங்கள் வழங்கப்பட்டு இவர் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

மேலும், இவரின் இலக்கிய சேவையைக் கருத்திற்கொண்டு கிழக்கிலங்கையிலிருந்து வெளிவரும் **'தடாகம்'** எனும் இலக்கியச் சஞ்சிகை 1999 நவம்பர் - டிசம்பர் இதழில் இவரின் புகைப்படத்தை முகப்பட்டையில் பிரசுரித்துக் கௌரவித்தது. அதேநேரம், இலங்கையிலிருந்து நான்கு தசாப்த காலங்களுக்கும் மேலாக வெளிவரும் தரமான இலக்கிய சஞ்சிகையான **'மல்லிகை'** 2005 மார்ச் இதழிலும், மற்றொரு தரமான இலக்கிய சஞ்சிகையான **'ஞானம்'** தனது 102வது (2008 நவம்பர்) இதழிலும் இவரின் புகைப்படத்தை முகப்பட்டையில் பிரசுரித்து கௌரவித்துள்ளன. மேலும், கிழக்கிலங்கையிலிருந்து வெளிவரும்

'சமாதானம்' இலக்கிய சஞ்சிகையின் 2007 அக்டோபர் இதழும், இந்தியாவிலிருந்து வெளிவரும் 'ஏழைதாசன்' (இதழ் எண் : 159) 2008 மே இதழும் இவரின் புகைப்படத்தை அட்டைப்படத்தில் தாங்கிவந்தன.

தன்னுடைய இலக்கிய ஈடுபாட்டுக்கு அடிப்படை வழங்கிய தனது அன்புப் பெற்றோரையும், ஆசான்களான திருவாளர்கள் யோ.பேனடிக்பாலன், ஐ.ஹாஜிதீன் ஆகியோரையும் அன்புடன். நினைவுகூர்ந்து வரும் இவரின் அன்புப் பாரியார் எம்.எச்.எஸ்.மஸீதா ஆவார். இவர் தென்னிலங்கையின் காலியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவரும் ஒரு கவிஞரும், எழுத்தாளருமாவார். புன்னியாமீனின் எழுத்துத்துறை மற்றும் வெளியீட்டுத்துறை செயற்பாடுகளுக்கு இவரின் பாரியார் பக்கபலமாக இருந்து வருகிறார். புன்னியாமீனுடன் இணைந்து பல நூல்களை இவர் எழுதியுள்ளார். இவரால் எழுத்தப்பட்ட சிறுகதைத் தொகுதி 'முடுதிரை' என்பதாகும். புன்னியாமீன் – மஸீதா தம்பதியினருக்கு சஜீர் அஹமட், பாத்திமா சம்ஹா ஆகிய இரண்டு அன்புச் செலவங்களுளர்.

**குறிப்பு** : இந்தியா உட்பட புலம்பெயர் நாடுகளில் வாழக்கூடிய இலங்கையைப் பிறப்பிடமாகக் கொண்ட எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்கள் தங்கள் பற்றிய குறிப்புக்களை '**இலங்கை எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்கள் விரபத்திரட்டு**'க்கு வழங்க விரும்பினால் உரிய விபரத்திரட்டுப் படிவங்களைப் பெற பின்வரும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.

P.M.Puniyameen
14, Udatalawinna Madige,
Udatalawinna,
Sri Lanka.
Tel : 0094-812-493 892
Fax : 0094-812-493 746
E-mail : pmpuniyameen@yahoo.com

**தயாராகிறது! எழுதுங்கள்!!**

# "இலக்கியப்பூக்கள் -II"

[ஈழத்து அமர எழுத்தாளர் பற்றிய கட்டுரைகளின் தொகுதி]

* யாரும் எழுதலாம்.
* கட்டுரைகள் முழுத் தகவல்களுடன் 4/5 பக்கங்களுக்கு குறையாமல், புகைப்படங்களுடன் இருத்தல் வேண்டும்.
* கட்டுரைகள் புதிதாய், எங்கும் பிரசுரமாகாமல், எழுத்துக்கள் தெளிவாகவும் இருத்தல் வேண்டும்.
* கட்டுரைகளுக்கு ஆக்கதாரரே பொறுப்பு.
* கட்டுரையாளர்கள் தங்கள் புகைப்படத்துடன் தங்களின் தகவல்களையும் தருதல் வேண்டும்.

**அனுப்பவேண்டிய முகவரி :**

**R.Mahendran,** 34, Red Riffe Road, Plaistow, London E13 0JX, U.K.

சிறுகதை



# மனங்கள்

தி.காயத்திரி
வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரி
(3ம் வருடம்)

இயற்கையின் கிருபையோ தெரியவில்லை அந்தப் பாடசாலைக்கு பயிற்சிபெற நான் சென்றது. "முதன்முதற் பயிற்சி". மனதில் ஒருவித பதட்டங்கலந்த சந்தோஷம். முதலாம் நாள் பாடசாலைக்கு கல்லூரி பஸ்சில் பயணித்துக் கொண்டிருந்தேன். பஸ் ஒரே சீராக அமைதியாகப் போய்க்கொண்டிருந்தது. என் மனமோ பல மைல்களைக்கடந்து எங்கேயோ தொலைவில் கற்பனையில் தாண்டவமாடியது.

நாங்கள் இறங்கவேண்டிய இடத்தில் பஸ் நின்றது. இறங்கி நடந்து போனோம். ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாய் பேசிப்பேசிக் கிண்டலடித்துக் கொண்டு வந்தார்கள். ஒருவன் என்னைப் பார்த்துச் சொன்னான் "காயத்திரி பதினைஞ்சு நாள் ரீச்சிங்பிறக்ரிஸ். பிள்ளையளை பார்த்துக் கொலை செய்யுங்கோ" என்றான். அதற்கு நானும் "ஏன்? நான் மட்டுமா கொலை செய்யப்போறன். நீங்களும்தான், நீங்களும் பார்த்துக் கொலைசெய்யுங்கோ" என்று சொல்லி சிரித்துக்கொண்டு போனபோதே பாடசாலையின் வாசல் வந்துவிட்டது.

சிறு தயக்கத்துடன் உள்ளே கால்பதித்தோம். பாடசாலையின் முன் பகுதியில் ஆரம்பப் பிரிவு வகுப்புக்கள்தான் காணப்பட்டன. எங்களைக் கண்டதும் "கொலிச் ரீச்சர் வந்திருக்கா, கொலிச் ரீச்சர் வந்திருக்கா" என்று பல குரல்கள் தூரத்தே ஒலித்தன. அதையும் மீறி சிலர் கிட்ட ஓடி வந்து கை தந்து "குட்மோர்னிங் ரீச்சர்" என்று சொன்னார்கள். தொடர்ச்சியாக பல பிஞ்சுக்கரங்கள் என் கையை வருடின. அந்தக் கணத்தில் எனக்கு உலகமே ஒரு நிமிடம் என்னைச் சுற்றுவது போல இருந்தது. ஒருவித கூச்சமும் என்னைப் பீடிக்க நானும் எல்லோருக்கும் குட்மோர்னிங் சொல்லிவிட்டு அப்பாலே அகன்றேன். நாங்கள் சென்ற நாளில் அங்கே ஆசிரியர் தின விழாக் கொண்டாட்டம் நடைபெற்றது. நாங்களும் அதிலே கலந்து கொண்டோம்.நாங்கள் கொஞ்சம் கூட எதிர்பார்க்காத ஒரு சம்பவம் அங்கே நடைபெற்றது. அதிபர் உட்பட எல்லா ஆசிரியர்களும் மேடையில் வீற்றிருந்தார்கள். நாங்களும் நெளிந்துகொண்டு வீற்றிருந்தோம். ஆசிரியர்களை கௌரவிக்கின்ற நிகழ்வு இடம் பெற்றது. அதிலே எல்லா ஆசிரியர்களையும்விட கல்லூரியில்

இருந்து சென்ற எங்களுக்குத்தான் முதலில் மாலையிட்டு கௌரவித்தார்கள். இச்செயல் எங்களையும் சந்தோஷத்தில் ஆழ்த்தியது. அதேவேளை அங்கே இருந்தவர்களின் மனங்களையும் படம்போட்டது. அந்தச் சந்தோஷம் நீங்காமலே வகுப்பறைக்குச் சென்றேன். என் கொண்டையை சுற்றி மலர்கள்.

ஆறுபேர் மட்டுமே உள்ள வகுப்பறையில் எல்லோரது பெயரும் மனதில் பதிந்துவிட்டது. கற்பித்தேன். அவர்களும் கற்றார்கள். அமைதியோடு இருந்தார்கள். அடுத்த வகுப்பிற்குச் சென்றேன். அங்கேயும் என் கையை பல பிஞ்சுக் கரங்கள் பற்றின. அறிமுகங்கள் முடிந்தவுடன் கற்பித்தல் நடைபெற்றது.

ஐந்தாறு நாட்கள் இப்படியாக சென்றன. ஒவ்வொரு மாணவராக உறவாடிக் கதைக்க ஆரம்பித்தேன். எல்லோரது விபரங்களும் வேதனையை பிழிந்தது. இப்போது அவர்களிடம் அதிக நெருக்கமாகிவிட்டேன். அவர்களும் என்மீது அதிக கவனம். கையில் ஒரு சிறிய பையை கூட என்னைத் தூக்க விடமாட்டார்கள். நெருக்கங்கள் அதிகமாக என் கையின் பற்றுதல்களை அவர்கள் தீவிரப்படுத்தினர். அதேவேளை குறும்புத் தனங்களும் செய்ய ஆரம்பித்தனர். பாடம் கற்பிக்கும்போது குழப்பம் செய்வது எனக்கு சிறிதான கோபத்தையும் உண்டாக்கியது.

கோபித்துக்கொண்டு நான் பேசாமல் இருந்தபோது "டேய் ரீச்சருக்கு கோபம் வந்திட்டுதடா. பேசாமல் இருங்கோடா" என்று ஒருவன் கூறுவான். பின்பு கிட்டவந்து என் கன்னத்தைக் கிள்ளி ரீச்சர் எங்களோடை கோபமா? என்று கெஞ்சும் போது என்னையறியாமலே சிரித்து விட்டேன். உடனே லக்ஷனாவின் கீச்சுக்குரல் சிரிப்பு வகுப்பறை முழுவதையும் அலங்கரிக்கும். தன்னை கேள்வி கேட்கவில்லை என்று முகத்தைத் தூக்கி வைத்துக்கொண்டு என்னுடன் கோபித்துக் கொண்டிருக்கும் பிறின்சி, குழப்படி செய்துவிட்டு நான் பார்க்கும்போது அப்பாவியாய் இருக்கும் சங்கீத், கேள்வி கேட்கும் போது எழும்பிப் பதில்கூறாது கதிரையிலே சோம்பேறியாக இருக்கும் குண்டுதனுசன், குழப்படி செய்தால் அடிப்பேன் என்று நான் கூறும்போது "ரீச்சர் அடியுங்கோவன்" என்று கையை நீட்டி கெஞ்சலாக கேட்கின்ற சுமன், என்ன சொன்னாலும் அமைதியாக கேட்கின்ற யேகிஷா.

இவர்கள்தான் அந்த வகுப்பறையில் மொத்த மாணவர்கள். நாளாக நாளாக இவர்களுடனான நெருக்கம் அதிகரித்தது. வாங்கோ, போங்கோ என்று கூப்பிட்டு இன்று வாடா, வாடி என்கின்ற அளவிற்கு வந்துவிட்டது. அவை மரியாதை இல்லாத சொற்களா?

அடுத்த வகுப்பிற்கு சென்றேன். அங்கே அதிக மாணவர்கள் காணப்பட்டார்கள். ஒரு மாணவி வகுப்பை குழப்பிக் கொண்டிருந்தாள். அவளைக் கட்டுப்படுத்த முடியவில்லை. "குழப்படி செய்யவேண்டாம்" என்றேன். அவளோ கேட்டதாய் இல்லை. அடித்துவிடுவேன் என்றேன்.

"அடியுங்கோ" என்று கேட்டுவிட்டுச் சிரிப்பாள். அதற்கு பிறகு என்னால் என்ன செய்ய முடியும். ஒருநாள் குழுச்செயற்பாட்டில் மாணவர்களை ஈடுபடுத்துவதற்கு சோடாமுடிகளை எல்லோரிடமும் கொடுத்தேன். உடனே அவள் அக்கா எனக்குச் சோடாமுடி தரேல்லை என்றாள். எனக்கு என்ன செய்வதென்று தெரியாமல் என்ன அக்காவோ? என்றேன்.

ஓ, நீங்கள் அக்காதானே என்று துடுக்காகச் சொன்னாள். அவளது செயல் எனக்கு கோபத்தை உண்டாக்கவில்லை. நாளாக நாளாக அவளது குழப்படி தாங்கமுடிய வில்லை. உன்னோட கதைக்கமாட் டேனடி என்றேன். அவளும் அதற்கு "அதற்கென்ன நானும் கதைக்கமாட் டன்" என்று முகத்தை தூக்கி வைத் துக்கொண்டு பேசாமல் இருப்பாள். மற்றைய மாணவர்களையும் குழப் பிக் கொண்டிருப்பாள்.

நான் இனி வகுப்பிற்கு வர மாட்டேன் என்று சொன்னேன். உடனே எல்லா மாணவர்களும் ஏன் ரீச்சர் வரமாட்டிங்கள். நாங்கள் குழப்படி செய்யமாட்டம். ஒவ்வொருநாளும் வாங்கோ என்றார்கள். அதில் ஒரு மாணவன் "ஜனனி நீ குழப்படி செய்யுறதால்தான் ரீச்சர் வகுப்பிற்கு வரமாட்டாவாம்" என்றான்.

ஏன் "நான் வகுப்பிற்கு வர வேண்டாம் என்று சொல்லவில்லை தானே. நீங்கள் வகுப்பிற்கு வாங்கோ ஆனால் என்னோட கதைக்கவேண் டாம்" என்று ஜனனி சொன்னாள். ஏதோ தன்னால தான் நான் வகுப்பிற்கு வரமாட்டன் என்ற நினைப்பு அவவிற்கு.

பின்பு நான் கற்பித்துக்கொண் டிருக்கும் போது மறுபடியும் ஒரு தடவை என்னை அக்கா என்று கூப் பிட்டுவிட்டாள். ஒரு ஆசிரியராக அல்லாமல் அவள் கூறுவதுபோல அக்காவாக இருந்து பார்க்கும் போது அவளது குறும்புத்தனங்கள் என்னை சந்தோஷப்படுத்தினதான்.

ஒருநாள் படிப்பித்துக்கொண் டிருக்கும் போது கதவைத்திறந்து வெளியில் அவள் போய்விட்டாள். உடனே நான் போய் கையிலே பிடித்துக்கொண்டு வந்து வகுப்ப றையில் இருத்திவிட்டேன்.

நான் கரும்பலகையில் எழு தும்போது தானும் வந்து எழுதுவாள். கேள்விகள் வேறொருவரிடம் கேட் டால்கூட தானே பதிலை கூறிவிட்டு எங்கேயோ பார்த்துக் கொண்டிருப்பாள்.

இப்படியாக என்னுடைய ஒவ்வொருநாள் பயிற்சியும் பல தடங் கல்களுடனும் சந்தோஷங்களுடனும் கழிந்தது. கடைசிநாள் வந்தது. மன திலே ஏதோவொரு நெருடல். நான் கையில் கொண்டு சென்ற ஆவணங்கள் எல்லாம் வாங்கப்பட்டு வகுப்ப றைக்கு கொண்டு செல்லப்பட்டது. வகுப்பறைக்குச் சென்றேன். பாடங் கள் தொடங்கமுதல் எல்லோருட னும் நின்று புகைப்படம் எடுத்தேன். அன்று ஜனனி வரவில்லை. காரணம் தெரியவில்லை. அவள் சொன்ன வார்த்தை எதிரொலித்தது.

"நான் உங்களோட கதைக்கமாட்டன்"

குற்ற உணர்வு முள்ளாகத் தைப்பது போல இருந்தது. புகைப் படம் எடுத்து முடித்து பாடங்களும் கற்பித்து முடித்து ஓய்வு நேரம் கொஞ்சம் இருந்தது. அந்த மூன்றாம் வகுப்பு என்னிடம் கேட்டது, "ரீச்சர் போகமுதல் எங்களுக்கு சோறு ஊட்டிவிடுங்களன்" என்றார்கள். ஆம் அந்தப் பாடசாலையில் மதிய உணவு கொடுக்கப்படுவதுண்டு. சோற்றினை ஊட்டிவிட்டேன். வீட்டிலே சுட்டிப் பெண்ணாக நான். ஆனால் இங்கே ஒரு தாய்க்கு ஈடாக.... எப்படி திடீரென்று ஒரு பதவி உயர்வு! பாடசாலையை விட்டு வெளியேறுகின்ற நேரம் வந்துவிட்டது. எல்லோரிடமும் இருந்து ஒவ்வொருத்தராக விடைபெறச் சென்றேன். என்னிலும் பெரியவர்கள் ஆசீர்வதித்தார்கள். அறிவுரை கூறினார்கள். என்னிலும் சிறியவர்கள் காலில் விழுந்து ஆசீர்வாதம் கேட்டார்கள். அதற்குரிய தகுதி என்னிடம் இருக்கா தெரியவில்லை. ஆனாலும் மனசார வாழ்த்தினேன்.

பல கைகள் என் கையை ஓயாமல் பிடித்துக்கொண்டே இருந்தன. நான் பாடம் எடுக்காத மாணவர்களும் கூட அதில் அடங்குவர். ஏன் இப்படி? நான் அவர்களுக்கு என்ன செய்தேன். ஒரு "குட்மோர்னிங்" சொல்லி கையை கொடுப்பேன். இத்துடன் இரண்டு வார்த்தைகள் மேலதிகமாக பேசுவேன். இந்தச் செயல் அவர்களை என்மேல் ஈடுபாடு கொள்ளச் செய்துவிட்டதா?

என் சேலைத்தலைப்பை பிடித்துக்கொண்டு கொஞ்சவால்கள் என் பின்னாலேயே வந்தன. எனக்கு வெட்கமாய் இருந்தது. "சாறியை விடுங்கோ" என்றேன். அவர்கள் விட வில்லை. அதைப் பார்த்த ஆண்டு பத்தில் படிக்கும் மாணவன் "ரீச்சர் சாறியை பிய்க்கப் போறாங்கள்" என்றான். நானும் சிரித்துவிட்டுப் போனேன்.

ரீச்சர் நீங்கள் இங்கேயே இருங்கோவன் எங்களுக்குப் படிச்சுக்குடுங்களேன் என்று பல குரல்கள் என் மௌனத்தைக் கலைத்தன. வேறொரு நாள் வருகிறேன் என்று நானும் மெய்போன்ற பொய்யை சொல்லிவிட்டு முகவரியை கொடுத்துவிட்டு பாடசாலையை விட்டு வெளியேறினேன்.

என் கையில் எந்தப் பொருட்களும் இல்லை. அவற்றை காவிக் கொண்டு பல கால்கள் என்னுடன் நடந்தன. வழியிலே லக்ஷனாவும், பிறின்சியும்

"ரீச்சர் இந்த ஒழுங்கைக்குள்ள தான் எங்கடை வீடு. நீங்கள் இதில கேட்டா காட்டுவினம். லீவுக்கு வாங்கோவன் என்றார்கள்"

"ஓம்" என்று தலையாட்டி விட்டு நடந்தேன்.

நான் பஸ் ஏறுகின்ற இடத்திற்குச் சென்றுவிட்டேன். தூரத்திலிருந்து பல கைகள் எனக்கு கை அசைத்தன. பல கண்கள் உற்றுப் பார்த்தன. கண்களில் ஏக்கம். என் நெஞ்சினில் நெருப்பு. போகும்படி கையை காட்டினேன். பஸ் வந்து விட்டது. ஏறிவிட்டேன். எனக்குள் பல கேள்வி அலைகள்.

நான் அவர்களது மனங்களை வென்றுவிட்டேனா? கொன்றுவிட்டேனா? என்னுடன் கூட வந்தவர்களும் ஆளுக்கொரு திசையில் மௌனமாய்... ■

# என் நினைவில் அமரர் வ.நல்லையா



– வ.சிவசுப்பிரமணியம் B.A. –

01.07.1909 – 22.12.1976

மட்டக்களப்பு புளியந்தீவு, சிங்களவாடியில் வாழ்ந்த வல்லிபுரம் – வள்ளியம்மா தம்பதிகளின் ஏக புதல்வனாக 01.07.1909 இல் பிறந்தார். புனித மிக்கேல் கல்லூரியில் கல்வி கற்றுக்கொண்டிருந்த காலத்தில் 1925 இல் சுவாமி விபுலானந்த அடிகளார் இராமகிருஸ்ண சங்கப் பணிகளைப் பொறுப்பேற்க மட்டக்களப்பிற்கு வந்து ஆனைப்பந்தி பாடசாலையில் தங்கியிருந்தார். சிறிது காலத்தின் பின் அவருக்கு உதவியாக இந்தியாவிலிருந்து வந்து சுவாமி அவிநாதானந்தா அவர்களும் இணைந்துகொண்டார்.

மாலை வேளைகளில் மட்டக்களப்பு இளைஞர்கள் பலர் ஆனைப்பந்திப் பாடசாலையில் சுவாமி விபுலானந்தர் அவர்களைச் சந்தித்து அவரின் வழிகாட்டல் களைப் பெற்றனர். இவர்களுள் நல்லையா, அம்பலவாணர், தட்சணாமூர்த்தி ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

சுவாமி விபுலானந்தர் காட்டிய வழியில் நல்லையா லண்டன் பல்கலைக்கழ கத்து கலைப்பட்டதாரி (B.A.) ஆனார். அம்பலவாணர் விஞ்ஞானப் பட்டதாரி (B.Sc.) ஆனார்.

1929 இல் மட்டக்களப்பு சிவானந்தா வித்தியாலயம் ஆரம்பிக்கப்பட்டதும் அங்கு இவர்கள் இருவரையும் சுவாமி விபுலானந்தர் ஆசிரியர்களாக நியமித்தார்.

இக்காலத்தில் சுவாமி விவேகானந்தர் அவர்களின் உரைகளும் எழுத்துக்களும் மட்டக்களப்பு – திருகோணமலைப் பிரதேசங்களில் சமயம், கல்வி ஆகிய துறைகளில் புத்துணர்ச்சியை உண்டாக்கியிருந்தன. மக்கள் விவேகானந்தசபை, சைவ மகாசபை ஆகிய பெயர்களில் ஒன்றுகூடி கிராமங்கள் தோறும் பாடசாலைகளை அமைத்தார்கள். எனினும் போதிய ஆசிரியர்கள் இல்லாமை பெருங் குறையாக இருந்தது. அப்பாடசாலை களை நிர்வகிப்பதிலும் பல சிரமங்கள் இருந்தன. சுவாமி விபுலானந்தர் அவர்கள் மட்டக்களப்பு வந்ததும் இச்சபைகள் தங்கள் மேற்பார்வையின் கீழிருந்த பாடசாலை களை சுவாமி அவர்களிடம் ஒப்படைத்தன. இப்பாடசாலைகள் எல்லாம் இராமகிருஸ்ண மிசன் பாடசாலையாக மாற்றப்பட்டன.

அப்பொழுது (1938) அரசாங்க சபையில் மட்டக்களப்பு தெற்குத் தொகுதியின் பிரதிநிதியாக இருந்தவர் திரு.சபாபதிப்பிள்ளை உடையார் தர்மரட்ணம் அவர்களாவார். சுவாமி அவர்கள் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை ஒன்றை நிறுவும்படி திரு.எஸ்.தர்மரட்ணம் அவர்களைக் கேட்டுக்கொண்டார். சுவாமியின் வேண்டுகோளை ஏற்ற திரு.எஸ். தர்மரட்ணம் அவர்கள் மட்டக்களப்பு தெற்கிலே அட்டாளைச்சேனையில் தமது சொந்த நிலத்தை வழங்கி அதிலே ஆசிரிய பயிற்சிக் கலாசாலையை நிறுவினார். அவ் ஆசிரிய பயிற்சிக் கல்லூரிக்கு அதிபராக திரு.வ.நல்லையா அவர்களே நியமிக்கப் பட்டார். அச்சமயம் திருகோணமலையையும் உள்ளடக்கியிருந்த மட்டக்களப்பு வடக்குத் தொகுதியின் அரசாங் சபை உறுப்பினராகவிருந்த ஈ.ஆர்.தம்பிமுத்து அவர்கள் பதவி நீக்கம் செய்யப்பட்டதால் எழுந்த இடைத்தேர்தலில் (நவம்பர் 1943) நல்லையா அவர்கள் போட்டியிட்டு அரசாங்க சபைக்குத் தெரிவானார். அதற்கு முன்பு மட்டக்களப்பு நகரசபை உறுப்பினராகவும் இருந்துள்ளார். அக்காலத்தில் அரசாங்க சபை உறுப்பினர்கள் குழுக்களாகப் பிரிக்கப்பட்டு குழுத் தலைவர்கள் நியமிக்கப்பட்டனர். குழுத் தலைவரே மந்திரியாவார். நல்லையா அவர்கள் கல்விக் குழுவில் இடம்பெற்றிருந்தார். கல்விக் குழுவின் தலைவராக சி.டபிள்யூ.கன்னங்கரா விளங்கினார். அவரே கல்வி மந்திரி. நல்லையா அவர்கள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி மட்டக்களப்பில் கிராமங்கள் தோறும் அரசாங்கப் பாடசாலைகளைக் கட்டினார். அப்போதிருந்த கல்வி ஆலோசனைச் சபையில் சுவாமி விபுலானந்தர் அவர்களும் உறுப்பினராக இருந்தமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறு தோற்றுவிக்கப்பட்ட பாடசாலைக்கு பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் தேவைப்பட்டனர். இத்தேவையை உணர்ந்த நல்லையா அவர்கள் ஆண்களுக்கும் பெண்களுக்குமாக என இரு ஆசிரியப் பயிற்சிக் கல்லூரிகளை மட்டக்களப்பில் நிறுவினார். அதுமட்டுமல்லாமல் மட்டக்களப்பிலே சைவப் பிள்ளைகளுக்கென ஒரு உயர்தரப் பாடசாலையை அரசினர் கல்லூரி என்ற பெயரில் (தற்போது இந்துக்கல்லூரி) நிறுவியதுடன் ஆண், பெண் ஆகிய இரு ஆசிரியப் பயிற்சிக் கல்லூரிகளையும் இணைத்து ஒரு ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியை (தற்போதைய மட்டக்களப்பு ஆசிரிய பயிற்சிக் கலாசாலை) நிறுவினார். இதன் மூலம் மட்டக்களப்புச் சமூகம் அப்போது வேண்டிநின்ற இரு முக்கியமான தேவைகளை நல்லையா அவர்கள் நிறைவேற்றி வைத்தார்கள்.

பின்னர் சோல்பரி அரசியலமைப்பின் கீழ் 1947 இல் நடைபெற்ற இலங்கையின் முதலாவது பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் கல்குடாத் தேர்தல் தொகுதியே போட்டியிட்டு பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவானார். அப்போது எஸ்.டபிள்யூ.ஆர்.டி.

பண்டாரநாயக்கா அவர்கள் சுகாதாரம் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரானார். இந்த அமைச்சின் பாராளுமன்றக் காரியதரிசியாக நல்லையா அவர்கள் நியமிக்கப்பட்டார். இப்பதவி தற்போதைய பிரதி அமைச்சர் பதவிக்குச் சமனானது. இக்காலத்தில் மட்டக்களப்பு வைத்தியசாலையை புதிய கட்டடங்கள் அமைத்துச் சிகிச்சை வசதிகளைக் கூட்டியும் தரமுயர்த்தினார். இன்று இது போதனா வைத்தியசாலையாகத் தரமுயர்ந்துள்ளது. பின் அடுத்த தேர்தலிலும் (1952) கல்குடாத் தொகுதியில் வெற்றியீட்டினார். இக்காலத்தில் வந்தாறுமூலையில் மத்திய மகா வித்தியாலயம் ஒன்றினை விடுதி வசதிகளுடன் ஏற்படுத்தினார். கிழக்கு மாகாணம் முழுவதிலும் 5ம் ஆண்டு புலமைப் பரிசில்கள் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் யாவரும் விடுதிகளில் தங்கியிருந்து இப்பாடசாலையிலேயே கல்வி கற்றனர். இப்பாடசாலைக் கட்டிடத் தொகுதியே பின்னாளில் கிழக்குப் பல்கலைக்கழகமாகியது.

மேலும், நல்லையா அவர்கள் ஆற்றிய பிறிதொரு சேவையையும் இங்கு குறிப்பிடுதல் அவசியம். அன்று மட்டக்களப்பிலிருந்து கொழும்புக்குச் செல்வதாயின் பதுளையூடாகவே பயணிக்க வேண்டியிருந்தது. நல்லையாவின் முயற்சியில் மன்னம்பிட்டிப் பிரதேசத்தில் தாம்போதிகளும் பாலங்களும் நிர்மாணிக்கப்பட்டு மட்டக்களப்பிலிருந்து கொழும்புக்குச் செல்ல பொலநறுவையூடு பாதை அமைக்கப்பட்டது.

டட்லி சேனநாயக்கா பிரதமராக இருந்த மந்திரி சபையில் தபால், தந்தி, போக்குவரத்து அமைச்சராகப் பதவிவகித்த காலத்தில் அரசியல் சதி ஒன்றின் மூலமாக இவர் இராஜினாமாச் செய்யும் நிலை இவரது அரசியல் எதிரிகளால் வேண்டுமென்று தோற்றுவிக்கப்பட்டதையும் வரலாறு குறித்துக்கொண்டுள்ளது.

அரசியல் வாழ்க்கையைத் துறந்த நல்லையா அவர்கள் பின் நியாயதுரந்திரர் பரீட்சையில் சித்தியடைந்து வழக்கறிஞராகத் தொழில்புரிந்து 22.12.1976 இல் கொழும்பில் காலமானார்.

**மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலைத் தாபகர்**
**(அமரர்.வ.நல்லையா) நூற்றாண்டு விழா - 01.07.2009**
**அன்று மட்டக்களப்பு அரசினர் ஆசிரிய கலாசாலையில்**
**விபுலானந்தர் மண்டபத்தில் கலாசாலை முதல்வர்**
**திரு.வே.லக்ஷ்மிசுந்தரம் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.**

# அல்ஹாஜ்

# ஆ.மு.ஷரிபுத்தீன்



04.05.1909 – 16.11.2000

04.05.1909இல் மட்டக்களப்பு மாவட்டத்தின் தென் பகுதியிலே (தற்போது அம்பாறை மாவட்டம்) மருதமுனை எனும் கிராமத்தில் ஆதம்பாவா – பாத்திமா தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்து தனது தொண்ணூற்றிரண்டு அகவை வரை சுகதேகியாக நிமிர்ந்து நின்று 16.11.2000 அன்று மரணமெய்தியவர் தமிழறிஞர் அல்ஹாஜ் ஆ.மு.ஷரிபுத்தீன் அவர்கள்.

தனது ஆரம்பக்கல்வியை மருதமுனை அல்மனார் வித்தியாலயத்தில் தொடங்கிய இவரின் ஆசான்களாக ஜே.எஸ்.வேலுப்பிள்ளை, கே.எஸ்.வைரமுத்து ஆகியோர் விளங்கினர். சுவாமி விபுலானந்த அடிகளாரின் மாணவன் என்ற பெருமையும் இவருக்குண்டு.

கிழக்கு மாகாணத்தின் முதல் முஸ்லிம் தமிழ் ஆசிரியரான இவர் 1924இல் மாணவ ஆசிரியராகக் கடமையேற்று பின் 1927 இல் உதவி ஆசிரியராகி 1942இல் தலைமை ஆசிரியராக கண்டி உடத்தலவின்னவில் பதவியேற்று 1947இல் முதலாம்தர தலைமை ஆசிரியராக அக்கரைப்பற்று ஆண்கள் பாடசாலைக்கு மாற்றம் பெற்று 1961இல் வட்டாரக் கல்வியதிகாரியாகப் பதவியுயர்வுப் பெற்றுப் பணிபுரிந்து தனது 42 வருடகால அரசாங்க சேவையின் பின் ஓய்வுபெற்றார்.

### கல்விச் சேவைகள் :

தனது 42 வருடகால அரசாங்க சேவையில் இவர் தனது கிராமத்தின் முன்னேற்றத்துக்கு மிகுந்த பாடுபட்டார். சமூகப்பணிக்காக கிராம முன்னேற்ற சங்கம், சனசமூக நிலையம், கூட்டுறவு இயக்கம், வாசிகசாலை, முதியோர் வகுப்புகள், ஐக்கிய நாணய சங்கம் என பல்வேறு அமைப்புக்களை உருவாக்கி அதன் செயலாளராக, தலைவராக, இயக்குனராக இருந்து சமூகப்பணி செய்தார்கள். அத்துடன் தம் சந்ததிக்கு ஆங்கிலம் அவசியம் என அன்றைய தலைவர் சேர் ராசிக் பரீத் அவர்களை கண்டு கனிஷ்ட ஆங்கில பாடசாலை மருதமுனைக்கு வேண்டுமென கோரிக்கை விடுத்தார். அத்துடன் இவருடைய காலத்தில் அவருடைய கல்வி வட்டாரத்தில் பல புதிய பாடசாலைகளை உருவாக்கினார்.

### சமூகப்பணிகள் :

1935ல் இவர் மருதமுனை கிராமிய முன்னேற்ற சங்கத்தின் தலைவராக கடமையாற்றினார். இஸ்லாமிய ஆசிரியர் சங்கத்தின் மருதமுனை கிளையின் தலைவராக பதவியேற்றார். 1953ல் அவர் ஒரு மத்ரஸாவையும் **'அல்பாக்கியத்துஸ் ஸாலிஹாத்'** என ஒரு பள்ளிவாசலையும் உருவாக்கி அதன் ஆயுட்கால போஷகராக இருந்தார்.

- 1972ல் கரவாகு வடக்கு இணக்க சபையின் தலைவராக நியமனம் பெற்றார்.
- 1985ல் சமாதான நீதவானாக நியமனம் பெற்றார்.

**கிடைத்த கௌரவங்களும் பட்டங்களும் :**

- 1953ல் மருதமுனை கிராமத்தின் மக்களால் உவந்தளிக்கப்பட்ட **'ஆசிரியமணி'** என்னும் பட்டம்.
- 1969ல் பிரபல தமிழ் அறிஞர் வித்துவான் **F.X.C.** நடராஜா அவர்களால் சாஹித்திய மண்டல பரிசளிப்பு விழாவில் **'புலவர்'** என்னும் பட்டம் வழங்கப்பட்டது.
- 1969ல் மட்டக்களப்பு தமிழ் சங்கத்தினால் கௌரவிக்கப்பட்டார்.
- 1976ல் தமிழறிஞர் ஏ.பெரியதம்பிப்பிள்ளை அவர்களால் **'புலவர்மணி'** என்னும் பட்டம் வழங்கப்பட்டது.
- 1979ல் தமிழ்நாட்டின் பாராளுமன்ற உறுப்பினர் ஜனாப் ஆ.கா.அப்துஸ்ஸமது அவர்களால் இலங்கையில் நடைபெற்ற நான்காவது உலக இஸ்லாமிய தமிழாராய்ச்சி மகாநாட்டில் **'வெண்பாவில் புலி'** என்னும் பட்டம் வழங்கப்பட்டது.
- 1987ல் இந்து கலாசார அமைச்சர் செ.இராசதுரை அவர்களால் **'இலக்கிய மாமணி'** என்னும் பட்டம் வழங்கப்பட்டது.
- 1987ல் இஸ்லாமிய சோனகர் கலாசார நிலையத்தினரால் கௌரவிக்கப்பட்டார்.
- 1991ல் முஸ்லிம் கலாசார அமைச்சர் அல்ஹாஜ் ஏ.எச்.எம்.அஸ்வர் அவர்களால் **'நூருல் பன்னான்'** என்னும் பட்டம் வழங்கப்பட்டது.
- 1993ல் இந்து கலாசார அமைச்சர் கௌரவ பீ.பீ.தேவராஜ் அவர்களால் **'தமிழ் ஒளி'** என்னும் பட்டம் வழங்கப்பட்டது.
- 1999ல் இலங்கை அரசாங்கத்தினால் **'கலாபூஷணம்'** என்னும் விருது வழங்கப்பட்டது.

**இலக்கியப் பணிகள் :**

- 1952ல் உமறுப்புலவரின் புதுகுஷ்ஷாம் என்னும் நூலின் **'பகுறு படலம்'** என்னும் பகுதிக்கு உரை எழுதினார்.
- 1967ல் **'நபி மொழி நாற்பது'** என்னும் கவிதை நூலுக்கு இலங்கை சாஹித்திய மண்டலப் பரிசு பெற்றார்.
- 1968ல் இவருடைய **'வீராங்கனை சாஹிதா'** என்னும் கவிதை நூல் வெளியிடப்பட்டது.

- 1972ல் கல்விப்பொதுத் தராதரத்திற்காக 'புது குஷ்ஷாம் மனை நான்கு' காண் டங்களுக்கு உரை எழுத இலங்கையில் பண்டாரநாயக்கா சர்வதேச ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்ற நான்காவது இஸ்லாமிய தமிழாராய்ச்சி மகாநாட்டில் **'இசைவருள் மாலை'** யும் மக்களுக்கு **'இதோபதேசம்'** என்னும் நூலுடன் வெளியிடப்பட்டது.
- 1979ல் கல்வி பொது தராதர (பொது) பாடத்திட்டத்திற்கான ஒரு நூல் வெளியிடப்பட்டது.
- 1985ல் **'கனிந்த காதல்'** என்னும் நாட்டார் பாடல் நூல் வெளியிடப்பட்டது. (இது கிழக்கிலங்கையின் நாட்டார் பாடல் பற்றிய ஒரு ஆராய்ச்சி நூலாகும்.)
- 1997ல் **'உலகியல் விளக்கமும் நம்நாட்டின் நானிலக் காட்சிகளும்'** என்னும் கவிதைத் தொகுப்பு நூல் வெளியிடப்பட்டது.
- 1998ல் **'முதுமொழி வெண்பாவும் சூறாவளிப் படைப்போரும்'** என்னும் கவிதை நூல் வெயிடப்பட்டது.
- 2002ல் கொழும்பில் நடைபெற்ற உலக இஸ்லமிய தமிழ் இலக்கிய மாநாட்டில் **'புலவர்மணி ஷரிபுத்தின் செய்த தமிழ்'** என்னும் கவிதைத் தொகுப்பு வெளியிடப் பெற்றது.

மற்றும் அவரது தன்னலமற்ற சேவையின் அறுவடை தற்போது அவரது மக்கள், பேரர்கள், கல்லூரி அதிபராக, டாக்டர்களாக, பொறியியலாளர்களாக, வங்கியாளர்களாக, பல்தொழிற் தொழில் விற்கன்னர்களாகத் திகழ்கின்றனர். தனது தொண்ணூற்று இரண்டு வயதிலும் நிமிர்ந்து நின்ற புலவர்மணி தான்பெற்ற அனைத்துப் பட்டங்களையும்விட புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை வழங்கிய **'புலவர்மணி'** என்னும் பட்டமே தனக்கு போதும் என்ற நிறைவுடன் வாழ்ந்து மறைந்தார்.

**-த.கோ.**

### புலவர்மணி ஆ.மு.ஷரிபுத்தீன் அவர்களின் இரு கவிதைகள்

துன்புறுத்தப் பட்டோர் துயர்களைக் அஃதன்றித்
துன்புறுத்து வோர்க்குந் துணையாக - அன்புசெய்தே
துன்புறுத்தும் தன்மை துடைத்தே சீராக்கல்
துன்புறுத்து வோர்க்காம் துணை

(1) நாகம் பூத்த நடுநிசியில்
(2) நாகம் இரைக்கு நடமாட
(3) நாகம் நெளிந்தே அசைந்துவர
(4) நாகம் மிதிப்ப நசுங்குண்ணும்
(5) நாக மணிநி லாச்செய்ய
(6) நாகக் கொம்பர் மீதமர்ந்து
(7) நாகம் குழலிக் கமுதூட்டும்
(8) நாகம் நாப்பண் செறிநாடே

1. நட்சத்திரம் 5. நாகமணி
2. யானை 6. புன்னைமரம்
3. நாகபாம்பு 7. குரங்கு
4. யானை 8. மலை

செங்கதிரோன் எழுதும்



# விளைச்சல்

16 குறுங்காவியம்

(கவிஞர் நீலாவணனின் 'வேளாண்மை'க் காவியத்தின் தொடர்ச்சி...)

அன்னம்தன் முலை யிரண்டும்
ஐந்திலே கறுத்தாள்; ஆறில்
அன்னத்தின் வயிறு மெல்ல
அடியிலே கனத்து மேலும்
எண்ணியே ஏழில் எட்டில்
இருந்தெழும் பேலாதாகி
ஒன்பதாம் மாதம் தன்னில்
ஓயாத நோக்காடுற்றாள்!

மாதங்கள் பத்து ஓடி
மறைந்தன. மேலும் உப்பி
ஊதிய வயிற்றுள் பிள்ளை
உதைப்பதும் உணர்ந்தாள் அன்னம்.
காதலில் கணவன் கூடி
கனியொன்றைப் பெற்றுக்கொள்ள
மாதவம் செய்தேன் என்று
மகிழ்ந்தது தாய்மை உள்ளம்.

# கனி பிறந்தது

சாய்ந்தரம் ஓர் நாள் அன்னம்
சாடையாய் நோகுதென்று
சாய்ந்தனள் வயிற்றைத் தொட்டு
சாயவும் கனகம் ஓடி
மாய்ந்தனள்; மருத்து விச்சி
மணி ஆச்சி அனுபவங்கள்
வாய்ந்தவள். அவளைச்செல்லன்
வண்டியில் கூட்டி வந்தான்.

அன்னமோ 'மஞ்சு' வீட்டுள்
அனுங்கினாள்; அவதிப்பட்டாள்
உன்னியே எழும்பி ஏகும்
உபாதையில். மருத்துவிச்சி
பண்ணினாள் பரிகாரங்கள்
பார்வதிப் பெத்தா கூட.
பன்னீர்க் குடமுடைந்து
பாலகன் வெளியில் வீழ்ந்தான்.

பார்வதிப் பெத்தா ஓடி
பரிகாரம் பண்ணலானாள்.
வேர்க்கொம்புக் கோப்பியோடு
வெதுப்பிய 'வாட்டுரொட்டி'
சோர்வினைப் போக்க அன்னம்
சுவைத்துண்ணத் தந்தாள். மற்றோர்
ஆரைப்போல் பிள்ளையென்று
ஆளுக்காள் அலசலுற்றார்.


கூரான மூக்கு செல்லன்
குமிழ்நாடி அன்னம் என்றார்.
நேரான மேவாய்; கால்கள்
நீளமாய் என்றார். மேலும்
ஏர்போலும் ஏறு நெற்றி;
இவன் பின்னர் எதிர்காலத்தில்
பேரான பிள்ளையாவான்.
பெற்றாளைப் பார்த்துச் சொன்னார்.

தெள்ளிய தவிட்டில் பிள்ளை
தேகத்தைப் பிரட்டி நன்கு
மெல்லிய சூட்டில் நீரால்
மேனியைக் கழுவினார்கள்.
"செல்லனைப் போல நல்ல
சிவப்புத்தான் பிள்ளை" என்று
சொல்லவும் பெத்தா கேட்டுச்
சோர்வெலாம் நீத்தாள் அன்னம்.

■ இன்னும் விளையும்.


வரவு

கலாநிதி.நா.சுப்பிரமணியன் அவர்களின்
**'ஈழத்துத் தமிழ் நாவல் இலக்கியம்'**
(1978 ஆம் ஆண்டில் வெளிவந்த நூலின் மீள்பதிப்பு - பிற்பட்ட காலகட்ட வரலாற்றுச் செல்நெறிகளை இனங்காட்டும் பின்னிணைப்புகளுடன்)



வெளியீட்டு விழா 12.07.2009 அன்று கொழும்புத் தமிழ்ச்சங்கம். விநோதன் மண்டபத்தில் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் நடைபெற்றது.

**தொடர்பு :** 'குமரன் புத்தக இல்லம்'
361, ½, டாம் வீதி,
கொழும்பு - 12.
தொலைபேசி : 060-2097608
E-mail : kumbhlk@gmail.com

**விலை :** 700/-


கலாநிதி
நா.சுப்பிரமணியன்

# பழமொழிகளும் புது விளக்கங்களும்

## "அடி உதவுவதுபோல் அண்ணன் தம்பி உதவார்"

குழப்படி செய்பவர்களை அடித்து தண்டித்தால் தான் திருந்தி நடப்பார்கள் என்றுதான் கருத்துச் சொல்வார்கள் நம்மவர்கள். ஆனால் ஒரு பெரியவர் அதற்கு வேறொரு விதமான நற்கருத்தைக் கூறினார்.

திக்குத் தெரியாத காட்டில் அண்ணன் முன்னால் நடக்கிறான். பின்னால் தம்பி தொடர்கிறான். அடர்ந்த காடு, முட்புதர்கள், கொடுமையான மிருகங்கள்! ஆனால் எதற்கும் அஞ்சாத அண்ணன் அடி எடுத்துக் கொடுக்கிறான். தம்பி தொடர்கிறான்.

## "அரசனை நம்பி புருஷனைக் கைவிடாதே!"

" அரசனை நம்பி புருஷனை விட்டு விட்டு ஓடிவிடாதே" என்றுதான் நம்மில் பலர் கருதிவந்தோம். அண்மையில் தமிழகத்திலிருந்து வந்த ஒருவர் இதற்கு அருமையான கருத்தொன்றைச் சொன்னார்.

" குழந்தை தரிக்காத பெண்கள் அரசமரத்தைச் சென்று சுற்றி வந்து வணங்குவார்களாம். அரசமரத்திற்கு எப்படி அப்பெண்ணிற்கு குழந்தை கொடுக்க முடியும்?"

அதுதான் கூற்றின் விளக்கம். அரசமரத்தை நம்பி புருஷனைக் கைவிட்டுவிடாதே!

## "இன்னும் பூச்சி, புழு ஒன்றுமில்லையோ?!"

திருமணமாகி சில வருடங்கள் சென்றபின் அப்பெண்ணைப்பார்த்து குழந்தைகள் இல்லாவிடின் இப்படிக்கேட்பது எம்மவர் வழக்கம்! இதற்கு அண்மையில் ஒருவர் ஒரு புதுக்கருத்தைச் சொன்னார்.

பூச்சி என்றால் பெண்குழந்தை. பிறந்து சில காலம் பெற்றோருடனிருந்து வாழ்ந்துவிட்டு திருமணம் செய்தபின் வேறொருவரைத் திருமணம் செய்துவிட்டுப் பறந்து விடுவதால் அது பூச்சி! வயிற்றுக்குள் நெளிந்து நெளிந்து இருந்துவிட்டு பிறந்ததும் அங்குமிங்கும் ஓடிவிளையாடிவிட்டு இறுதிக் காலத்திலும் பெற்றோரைக் காப்பவன் மகன். அவனைப் புழுவுக்கு ஒப்பிடுகிறார்கள்.

பூச்சி, புழு இல்லையோ என்று கேட்டால் பெண் குழந்தை, ஆண் குழந்தை ஒன்று மில்லையோ? என்பதுதான் அர்த்தமாம்.

■ இறுவை இரகு



# அவள் யோசிக்கிறாள்!

யோசிக்கவேண்டியிருக்கின்றது!
பேசுமுன்
யோசிக்கவேண்டியிருக்கின்றது!
கணவருடன் பேசுமுன்
யோசிக்கவேண்டியிருக்கின்றது!
கணவருடன் பேசும்போதுதான்
அதிகம் யோசிக்கவேண்டியிருக்கின்றது!
எனக்கும் கோபம் வரும்!
இருந்தாலும் நான்
யாருடனும் கோபிப்பதில்லை!
சில சமயங்களில்
குமுறிச் சிதறும் எரிமலையாய்
வெடிக்க நினைக்கின்றேன்!
இருந்தாலும் யோசிக்கின்றேன்!
எனது கோபம்!
எனது தீக்கணைகள்!
எனது சகோதரிகளை எரித்துவிட்டால்?
யோசித்தேன்!
அடக்கமில்லாதவள்!
இவள் குடும்பமும் அப்படித்தான்
இப்படியான பழிச்சொற்களை
என் சகோதரிகளுக்கும் சுமத்திவிட்டால்?
இப்பொழுது
எனது கோபங்கள் அடங்கி
எனக்கு பயம் வந்துவிட்டது!
மனதிற்குள் வெம்பி விம்முகின்றேன்!
குளிக்கும்போதுதான் மனம் விட்டு அழுகின்றேன்!
அப்பொழுதுதான்
என் கண்ணீர் எவருக்குந் தெரிவதில்லை.

**வன்னை தெய்வம்**
**பிரான்ஸ்**

# ஒரு படைப்பாளனின் மனப் பதிவுகள் - 7

■ கவிவலன்

அண்மைக்காலமாக நமது இலக்கிய உலகிற்குள் குறிப்பாகக் கவிஞர்களது சாம்ராஜ்யத்திற்குள் இருந்துவருகிற "ஆளுக்காள் குறைசொல்லும்", அல்லது "ஆளை ஆள் மட்டம் தட்டும்" போக்கு இன்றுவரை கொஞ்சம் கூடக் குறைந்திருப்பதாகத் தெரியவில்லை, குறைவதற்கான அறிகுறியும் தென்பட வில்லை. அது அங்கிங்கென பிசுபிசுத்துக் கொண்டும், கசிந்து கொண்டும், நுரையெழுப்பிக் கொண்டும் இருப்பதுதான் கலப்படமில்லாத உண்மை.

மரபை ஏன் மறுதலிக்க வேண்டும்? என்று கேட்கிறது ஒரு கூட்டம். மரபு மரணித்துவிட்டது, ஆகவே புதிதை ஏன் அங்கீகரிக்க முடியாது? என்று திருப்பிக் கேட்டுக்கொண்டிருக்கிறது இன்னொருகூட்டம். இவை இரண்டுக்குமிடையில் சிண்டுமுடிந்து, பிரச்சினையைச் சிக்கலாக்கி, திரியைத் தூண்டிவிட்டுக்கொண்டிருக்கிறது இன்னுமொரு விலாசம் தேடுகிற விமர்சன வித்தகர்கள் கூட்டம்.

இப்படி, தீர்க்கப்படாத பிரச்சினையோடேயே திக்குமுக்காடிக்கொண்டிருக்கிறது கவிதை. இது இப்படியிருக்க, இதற்குள் இன்னுமொரு வேடிக்கையான நிகழ்வுச் சுழியோடல் ஒருபக்கம் கனகச்சிதமாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அதாவது அந்தப் பக்கம் சொல்வதும் என்னவென்று தெரியாமல், இந்தப் பக்கம் கூறுவது என்னவென்றும் புரியாமல் சில கத்துக்குட்டிகள் எதையெதையோவெல்லாம் எழுதி வெளியிட்டு, அவற்றிற்கு கவிதை அந்தஸ்து தேடி, அணிசேர்ந்து தங்களைப் பெரிய சிகரங்களாக மிக உயரத்திலேயே இருத்தி வைக்க வறிதே முயன்றுகொண்டிருக்கிறார்கள்.

## கவலைக்கிடமான நிலையில் கவிதை

கவிதையை அறியாத, கவிதையின்மேல் அக்கறையில்லாத இந்த நோஞ்சான்களால் மரணபரிசோதனைக்கு உட்படவேண்டிய கட்டத்தில் கவிதை.

இப்போது கவிதை எழுதுகின்ற எல்லோரிடமும் தனித்தனியாக கேட்க வேண்டிய கேள்வியொன்றிருக்கிறது, அது என்ன தெரியுமா? ஐயா! கவிதையாளர்களே! கவிதையென்றால் என்ன? நீங்கள் இதுபற்றி விளங்கி வைத்திருப்பது எப்படி?

இன்றைய கவிதையியலாளர்களுக்கு கவிதை பற்றிய தெளிவும், திறனும் இல்லாதிருப்பது போலவே எண்ணத்தோன்றுகிறது. ஏனென்றால் முரட்டுத்தனமாக கவிதையைக் கடத்திக்கொண்டு எங்கோ போய்க்கொண்டிருக்கிறார்கள் இவர்கள்.

அவன் சொன்னான், இவன் சொன்னான் என்று இவர்களுக்கே புரியாத புறநடைகளை தங்களது வழிப்பயணத்தின் துணைச்சக்கரங்களாகப் பிடித்துக்கொண்டு கண்மண் தெரியாது கவிதையை அசிங்கப்படுத்திக்கொண்டிருக்கிறார்கள்.

இவர்கள் எழுதுவது இவர்களுக்கு விளங்குதோ என்னவோ, அல்லது கவிதையென்றால் விளங்கக்கூடாது என்று நினைக்கிறார்களோ என்னவோ ஆனால், ஆனானப்பட்ட தமிழறிந்த ராசாமார் எவருக்குமே இவர்களது சூத்திரத்தை விளங்கிக்கொள்ள முடியவில்லை. சில முடிச்சுகளை, சுருக்குகளை இழுத்தால் அவிழ்ந்துவிடும். ஆனால் இவர்களது கவிதைச் சூத்திரத்தை எந்தப்பக்கம் பார்த்தாலும் "ஒரு மண்ணாங்கட்டியும்" விளங்கவில்லை. பல்லி என்கிறார்கள், பல்லி மூத்திரம் பனிக்கிறது என்கிறார்கள். அணில் மரத்தில் ஏறுகிறது, ஏறும்போது எச்சம் பீச்சுகிறது என்கிறார்கள். ஒன்றுமே விளங்கவில்லை.

இதற்கான விளக்கத்தை கவிதை அறிந்த பத்துப் பதினைந்துபேரிடம் உங்களுக்காவது புரிகிறதாவென்று கேட்டுப்பார்த்தேன். ம்ம்ம்... அவர்களாலும் புரிந்துகொள்ள முடியவில்லையென்றே சொன்னார்கள். இந்தத்தெய்வப் புலமையை என்னவென்று சொல்வது?

கவிஞர்களாலேயே விளங்கிக்கொள்ளமுடியாத கவிதையை சாதாரணமான, கொஞ்சம் 'கற்றறிவுள்ள' வாசகனால் எப்படி விளங்கிக் கொள்ளமுடியும்? இங்கே சிலபேர் விளங்கிக்கொண்டது போல சொல்லிக்கொண்டிருப்பதற்கும் காரணம் தங்களை இந்தக் கவிதைச் சிருஷ்டிகள் புறக்கணித்து விடுவார்களோ, அல்லது ஒதுக்கிவைத்து விடுவார்களோ என்ற பயம்தான், அந்தப் பயத்தோடுதான் சும்மா தலையாட்டி பொம்மைபோல "ஆமாம் சாமி" போடு

வதற்கு காரணமாயிருக்கவேண்டுமென நினைக்கிறேன். இதுவரை, மூத்தவர்கள் எவருமே 'இதெல்லாம் விளக்கமில்லாத கவிதைகள்' என்று வாய்திறக்கவேயில்லை. ஆனால் இன்றெழுதப்படும் பல கவிதைகள் விளங்கிக் கொள்ளமுடியாத சூத்திரங்கள்தான்.

**"காக்காப்பீ வாய்க்குள்ள", "சூத்துக்க கை", "அணில் மரத்திலேறி பீபேலுது"** இப்படியான வார்த்தைகளைச் சாதாரண மனிதன்கூடப் பேசக் கூச்சப்படுவான். ஆனால் இந்தக் கவிஞன் பேச்சோசை, படிமம் என்ற பெயரில் சரளமாகத் தமது கவிதைகளில் இப்படியான, ஊத்தையான வார்த்தைகளை அள்ளி வீசுகிறான். இந்தக் கவிஞனுடைய நோக்கம் என்ன? இது ஒரு பிழையான முன்போதல் அல்லவா?

இவர்களுக்கு கவிதையென்றால் என்னவென்று புரியாமைதான் இதற்குக் காரணமாயிருக்க வேண்டும். அத்தோடு முதன்மைபெறும் தன்னார்வம், மிகவும் பிழையான பாதைக்கு கவிதையை கயிறுபோட்டு இழுத்துக் கொண்டல்லவா இவர்கள் போகின்றார்கள். உண்மையாக கவிதைபற்றிய அக்கறை இவர்களிடமில்லை.

கவிதை எது? கவிதையென்றால் என்னவென்று கேட்டால், பெரிய கவிதா சிருஷ்டிகளாலும் உடனடியாகப் பதில் சொல்லிவிட முடியாது. ஒரு சிறந்த கவிஞனின் படைப்புக்களைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளுகிறபோதுதான் கவிதையின் குணம், வளம், நலம் நமக்குப் புலப்படுகிறது. கவிதை கருத்துடனும், அந்தக் கவிஞன் வெளிப்படுத்துகின்ற உத்திமுறையுடனும் சம்மந்தப்பட்டிருப்பதைப் புரிந்துகொள்ளமுடிகிறது. கருத்து, அந்தக் கருத்தின் வெளியீட்டுமுறை இரண்டும்தான் ஒரு நல்லகவிஞனை இனங்காட்டும் மச்சங்களாகும்.

கருத்து என்பது, கவிதைச் சிந்தனை, உள்ளடக்கம், அர்த்தம், உட்பொருள், பாடுபொருள், கருப்பொருள் என்ற பலவற்றின் மொத்தவடிவமாகும். பொதுவாக எதை எழுதினாலும், கருத்தில்லாமல் கவிதை உருவாக்கம் பெறமுடியாது. மொழி என்பது கருத்துக்களின் குறியீடுதான். குறியீடு மட்டும் கவிதையாகி விடாது. ஆனால் இவை எதையுமே புரிந்துகொள்ளாமல், புரிந்து கொள்ள முயற்சிக்காமல், விளங்காமல், எதையெதையோவெல்லாம் கவிதைகளாகப் புனைந்து கொண்டிருக்கிறது அவசர, அவசரமாக கவிஞராகவேண்டுமென்ற அவாவுள்ள ஒரு கூட்டம்.

எடுத்துக்காட்டாக அப்படியான இரண்டு கவிதைகளைப் பார்ப்போம்.

I

"உனக்கும் காமம் இருக்கிறது
உண்மைதான்.

ஒன்றுக்குப் பின்னால் ஒன்றாக
துரத்தி துரத்தி
ஓய்வில்லாமல் அரைகுறையாக
அனுகி அனுகி ஏன்
ஏறி இறங்குகிறாய்.

இதைமனிதன் பார்த்தால்
உன்னைப் போலவே
துரத்திப் பிடித்து
நின்றும் படுத்தும்
தெருவிலும் - வீட்டிலும்
புணர்ந்து திரிவான்"

II

"இனிஉன் மனைவியின்
கருவறையில் சிசுவளராது.

உன் ஆண்மைச் சுரப்பிகளை
அப்பம் நொதிக்கும் பானைக்குள் இடு.
ஆறுமணிநேரம் இருளில் மூடி உறையவை.

கொழுக்கத் தேவையானால்...
கொஞ்சம் முலைப்பால் கறந்து ஊற்று.
ஆண் - பெண் என்றபால் அவதிவேண்டாம்.
நீ விரும்பும் சாதியை பானை அருகிலிருந்து
உச்சாடனம் செய்.
பதினெட்டு மணி நேரத்தில்
உன்பானைக்குள் சிசு கத்தும்"

இது என்ன கவிதைகளா? அல்லது லேகிய விளம்பரங்களா? மனிதனை, அவனது சிந்தனையைக் குழப்பி மழுங்கடிக்கும் "மசுவாதைச்" சிந்தனை ஊக்கிகளா?

இதெல்லாம் கவிதையென்றால் இப்படியொரு கவிதை முயற்சி தேவைதானா? அல்லது இந்தக் கவிதைகள் மூலம் இந்தக் கவிஞர் பெருமக்கள் வாசகனுக்குச் சொல்லுகிற செய்தி என்ன?

இவர்கள் சொன்னமுறையில்கூட பாதுகாக்கப்படவேண்டிய எமது கலாசாரம், பண்பாடு துவம்சம் செய்யப்பட்டு குப்பையாக்கப்பட்டிருக்கிறது. ஊத்தையான வார்த்தைகள் கோர்க்கப்பட்டிருப்பது மொழி நாகரீகத்தைக்கூட தகர்த்தெறிந்திருக்கிறது. இதைப் படிமம், குறியீடு என்றா இந்தக் கவிஞர்கள் சொல்லப் போகிறார்கள்? அல்லது யதார்த்தம், பின் நவீனத்துவம் என்றா வரைவிலக்கணம் தரப்போகிறார்கள்?

இதைத்தான், இந்த அதிமேதாவித்தனத்தைத்தான், கவிதையை நேசிப்பவர்கள் வெறுக்கிறார்கள். இதை இல்லாதொழிக்கவேண்டுமென கருத்துப் பரிமாறுகிறார்கள். ஏனெனில் இது கவிதையை கொச்சைப்படுத்தும் முயற்சி. இதைத்தான் கவிஞர் செங்கதிரோன்...

"பூப்படையாப் பெண்களெல்லாம் பிள்ளைபெற வந்ததுபோல்
யாப்பறியாப் பேர்களெல்லாம் பாப்புனைய வந்துவிட்டார்.
யாப்பே வேண்டாமாம், யதார்த்தக் கவிதைகளாம்.

ஓசை, உருவம், உணர்ச்சி, உள்ளடக்கம்
ஒன்றுமே வேண்டாமாம்.
புற்றுக்குள் ளிருந்தீசல் புறப்பட்டு வந்ததுபோல்
புதுக்கவிதைப் புலவர்கள்.

கொட்டும் குளவிக் கூட்டைக் கலைத்தது போல்
எட்டுத்திக்கெங்கும் இவர்கள்தான் ஏராளம்.

வெற்றுத் தகரத்தில் வீணை ஒலிக்குமா? – இக்
கற்றுக்குட்டிகளால் தமிழ்க் கவிதை செழிக்குமா?

வாக்கியத்தை முறித்து, பின் வரிசையிலே வைத்தெழுதி
ஆக்கியதால் வந்தசொல் லடுக்கைத்தான் அதிகம்பேர்
சோக்கான கவிதையெனச் சோடித்துக் காட்டுகிறார்"

என்று மிகுந்தகோபத்தோடும், கவிதா நேசத்தோடும் தனது கருத்தை வெளிப்படுத்தினார்.

"கூர்வாளை உருவி குத்துதற்கு நாம் கொடுத்தோம்
நீரோ....
வாளை வளைத்து வளையல்களாய்ப்போட்டுவிட்டீர்.

வேலியைக் கொஞ்சம் விலக்கியது எதற்கென்றால்...,
தாலி புதிதாகத் தமிழுக்குத் தருவதற்கே.

போதுமய்யா போதும் புதுக்கவிதை எழுதாதீர்"

என்று, புதுக்கவிதை வளர்ச்சிக்காகவும், வளத்திற்காகவும் தனது கவிதைகளை உரமாகப்போட்டு அதன் வளத்தைப் பெருக்குவதற்காக உழைத்த புதுக்கவிதையாளர் மேத்தா, இன்றைய புதுக்கவிதையின் செப்பமில்லாத வாரோட்டத்தைப்பார்த்து, வெறுத்து சொன்ன கருத்துக்களே இவை.

இலக்கில்லாப் பயணம், எலும்பும் தோலுமாகக் கவிதை. இலக்கியம் வாழ்க்கை அனுபவங்களூடாக வெளிப்படவேண்டும். அப்படி வெளிப்படும்போதுதான் இதுவரை உய்த்துணராத புதியவடிவமாக, ஒரு புதிய செய்தியைப் பரிமாறும் கடிதமாக அது அமையும். இதைத்தான் இன்றைய வாசகன் எதிர்பார்க்கின்றான்.

ஆனால் கொடுக்கப்படுவதெல்லாம் குப்பைகள், மதனகாமராஜன் கதைகள்.

இதற்கெல்லாம் காரணம் என்னவென்று சிந்தித்துப்பார்த்தால், இதற்கெல்லாம் காரணம், கட்டுப்பாடில்லாமை, கட்டுப்படுத்த எவருமில்லாமை, வாழ்க்கைக்கு கட்டுப்பாடு அவசியம் என்பதற்கு பெரிய விளக்கங்கள் தேவையில்லை.

புதுமை வளர்ச்சியின் அறிகுறிதான், அதற்காகப் புரியாத வார்த்தைகள், அருவருக்கத்தக்க காமச்சேட்டைகளையெல்லாம் கவிதையாக்கிக் கொடுப்பதுதான் புதுமையா? அப்படியொரு புதுமை தேவையா? அவசியமா?

கவிதைக்கு யாப்புக் கட்டுப்பாடு வேண்டும். புதுக்கவிதைக்கும் சில வரையறை வேண்டும்.

நமது கவிதையை நையப்புடைக்கும் அல்லது நல்ல பயிர்களுக்கிடையில் முளைத்து அசிங்கப்படுத்தும் 'நச்சுப்பயிர்களை', 'புல்லுருவிகளை' இனங் கண்டு களையெடுக்கவேண்டும். இந்த நச்சுப்போக்கை நமக்குள்ளிருந்து அகற்றவேண்டும்.

இந்தக் கட்டுரையின் நோக்கம் புதுக்கவிதையை, புதுக்கவிதையாளர்களை, புதிய கவிதா சிந்தனையை எதிர்ப்பதல்ல, நச்சுகளை, நாசகாரிகளை உடனடி யாக அகற்றி அவற்றை எரித்தழிப்பதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

மரபோ, புதிதோ கவிதையாக எது தன்னை அடையாளங்காட்டுகிறதோ, அதை அள்ளி அணைத்து அரவணைப்பதுதானே கவிதையை நேசிப்பவர்களின் தலையாய கடமை.

குப்பைகளைக் குடைசாய்த்து, நல்ல நல்ல உற்பத்திகளை அரங்கேற்ற கவிஞனே! சபதமேற்பாயா? அது உன் சமுதாயக் கடமை நண்பனே!

■ **மீண்டும் சந்திப்போம்.**

# நானாக நான்!



–ஷெல்லிதாசன்–

பஞ்ச வர்ணக் கிளியாகி
பறந்து வர ஆசைப்பட்டேன்.
கூண்டுக்குள்ளே எனையடைத்து
குதூகலிக்க அவனும் வந்தான்!

கலாப மயிலாகமாறி
களி நடனம் புரிய வந்தேன்.
நீண்ட தோகை அதைப் பறித்து
நிர்வாணமாக்க வந்தான்!

புள்ளி மானாய் நானும் மாறி
துள்ளி விளையாட வந்தேன்.
ஊனாக்கி என் உடலை
(உ)ருசி பார்க்க அவனும் வந்தான்!

மாங்குயிலாய் நானும் மாறி
மானுடத்தைப் பாட வந்தேன்.
பக்கப் பாட்டு பாடி நல்ல
பணம் பண்ண அவனழைத்தான்!

என்னவாக நான் மாறி
இவன் பிடியிற் சிக்காமல்
துன்பமின்றி தினம் வாழ
தூர நோக்கிற் சிந்தித்தேன்!

நானாக நான் மாறி
தலை நிமிர்த்தி நான் நின்றேன்!
தானாக அவன் விலகி
தலை தெறிக்க ஓடிவிட்டான்!



# பாரதியியலுக்கும் கல்வியியலுக்குமான ஒரு புதிய பங்களிப்பு

— லெனின் மதிவானம்

நவீன தமிழ் இலக்கிய உலகில் பாரதியார் எல்லாத் துறைக்கும் முன்னோடியாகத் திகழ்ந்தவர் என்பதில் இரு நிலைப்பட்ட கருத்துக்களுக்கு இடமில்லை. தமது சமகாலப் பிரச்சினைகள் குறித்து கவிதை, கட்டுரை, சிறுகதை வாயிலாகப் பல்வேறு கருத்துக்களை வெளியிட்டுள்ளார். அரசியல், பொருளியல், மெய்யியல், சமூகவியல், அறிவியல் முதலிய துறைகளையும் தமதாக்கி அதன் பின்னணியிலே சமூகம் குறித்தும், தேசம் குறித்தும் கருத்துத் தெரிவிக்கக் காண்கின்றோம். இத்தகைய ஆளுமைமிக்க யுக புருஷனின் படைப்புக்களும் எழுத்துக்களும் நாளுக்கு நாள் தொகுக்கப்பட்டு வந்துள்ளதை அறிகின்றோம். அவ்வாறே அவரது பன்முகப்பட்ட ஆளுமைகள் குறித்த ஆய்வுகள், ஆக்கபூர்வமான நூல்கள் வெளிவரவில்லையாயினும் சில குறிப்பிடத்தக்க நூல்கள் வெளிவந்துள்ளன என்பதை இவ்விடத்தில் மனங்கொள்ளல் வேண்டும்.

இவ்வாறிருக்க, பாரதியாரின் முக்கிய பணிகளில் ஒன்றான அவரது கல்விச் சிந்தனை குறித்த ஆய்வுகளோ, அல்லது அவரது கல்வி சார்ந்த கட்டுரைகளைத் தொகுத்து முழுநிறைவான தொகுப்பொன்றோ இதுவரை வெளிவந்ததாகத் தெரியவில்லை. இவ்வாறானதோர் சூழலில் பாரதியின் வரலாற்று முக்கியத்துவத்தினையும் இலக்கிய கதியில் அவனது ஆக்கங்கள் செலுத்தும் தாக்கத்தினையும் இயக்கவியல் பொருள் முதல்வாத அடிப்படையில் ஆய்வுகளை வெளிக்கொணர்ந்த கலாநிதி ந.இரவீந்திரன் அவர்கள் பாரதியாரின் கல்விக் கட்டுரைகளில் முக்கியமானவற்றைத் தொகுத்து ‘கல்விச் சிந்தனைகள்’ என்ற தலைப்பில் வெளியிட்டுள்ளார். கல்வியியல் தொடர்பில் பல ஆளுமைகளின் கல்விச் சிந்தனைகளையும் மற்றும் இன்றைய கல்வி முறையின் சுயத்தைத் தோலுரித்துக் காட்டியதுடன் மக்கள் சார்பான மாற்றுக் கல்விச் சிந்தனைகளையும் வெளிக்கொணர்ந்ததில் இந்திய மாணவர் சங்கத்திற்கு தனியிடமுண்டு. மாற்றுக் கல்வி குறித்து ஒரு பன்முகப்பட்ட பார்வையையும் விவாதங்களையும் ஏற்படுத்தும் நோக்கோடு இந்திய மாணவர் சங்கம் பாரதி புத்தகாலயத்துடன் இணைந்து இருபத்தைந்து கல்வியியல் சார்ந்த நூல்களை தமிழில் வெளியிட்டுள்ளமை இத்துறையில் முக்கிய சாதனையாகும்.

இத்தொகுப்பில் அடங்கியுள்ள கட்டுரைகள் பாரதியாரின் கல்விச் சிந்தனைகள் பற்றி பயனுள்ள சங்கதிகளையும் செய்திகளையும் வெளிக்கொணர்

கின்றது. பாரதி படைப்புக்களை அவை எழுந்த கால வழக்கில் வைத்துக்காட்டும் பதிப்பு அவசியமாகும். பாரதியின் கட்டுரைகளைக் கால ஒழுங்கில் தொகுத்து வெளியிட்டதில் சீனி, விசுவநாதனுக்குத் தனியிடமுண்டு. இத்தொகுதியில் காலம் குறித்து இடம்பெறுகின்ற பாரதியின் கட்டுரைகள் யாவும் அவரது தொகுப்பிலிருந்து பெறப்பட்டவையே என்பது இவ்விடத்தில் நினைவுகூரவேண்டியதொரு விடயமாகும். கால அடைவில் ஒரு சிந்தனையாளரின் எழுத்துக்களைத் தொகுத்தளிக்கின்ற போது அவன் குறித்த ஆய்வுகளை மேற்கொள்வதற்கு ஏதுவாக அமையும்.

வரலாற்று சக்தியின் ஆக்கமே மனிதனாவான். குரங்கிலிருந்து மனிதனாக பரிணாமம் அடைந்தது வரையிலான கூர்ப்பின் அடிப்படை உழைப்பாகும். உழைப்பே மனித தோற்றத்திற்கு ஆதாரமாக விளங்கியமையால் மனிதனை "உழைக்கும் விலங்கு" என சமூக விஞ்ஞானிகள் குறிப்பிட்டுள்ளனர். இது குறித்து காரல்மாக்ஸ் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். **"உற்பத்தியில் மனிதர்கள் இயற்கையின்மீது மட்டும் வினையாற்றுவதில்லை. தங்களுக்கிடையிலும் வினைப்புரிந்தும் கொள்கின்றார்கள். ஒரு குறிப்பிட்ட விதத்தில் தமக்குள் கூட்டுறவாக செயற்பட்டும் தம் நடவடிக்கைகளை பரஸ்பரம் பறிமாறிக் கொண்டும் பொருள்களை உற்பத்தி செய்கின்றனர். உற்பத்தியில் ஈடுபடும் போது மனிதர்கள் தங்களுக்கிடையிலான ஒரு குறிப்பிட்ட தொடர்புகளை உறவு முறைகளையும் பெற்றிருக்கின்றார்கள். இத்தகை சமூக தொடர்புகளுக்கும் உறவுமுறைகளுக்கும் உட்பட்டுதான் மனிதர்கள் இயற்கையின்மீது வினையாற்றுகின்றார்கள். அப்போதுதான் உற்பத்தி நிகழ்கின்றது".**[1]

எனவே, மனித உணர்வு என்பது தனிமனிதனுக்கும், இயற்கைக்குமிடையில் நிலவுகின்ற ஒரு உறவாக மட்டுமன்றி, தனி மனிதனுக்கும் ஏனைய சக மனிதர்களுக்கும் இடையில் நடைபெறுகின்ற உறவாகவும் அமைந்துள்ளது.

ஒரு சமூகமாய் வாழும் மக்கள் உயிர்வாழ்வதற்கு உணவு, உடை, உறையுள் என்பவற்றுடன் ஏனைய அடிப்படை வசதிகளும் அவசியமானதாகும். ஆனால் இயற்கை அவற்றினை மனிதர்கள் நுகரும் வகையில் தயாராக வைத்திருக்கவில்லை. அவற்றினைப் பெறுவதற்கும், தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கும் அவர்கள் உற்பத்தியில் ஈடுபட வேண்டியவர்களாகக் காணப்பட்டனர்.

எனவே, மனிதன் சமூகத்திலிருந்து பிரிந்து தனித்து நின்று வாழ முடியாதவன். அவன் பிறந்தது முதல் இறப்பது வரை சமூகம் அவனது ஆளுமையில் தாக்கம் செலுத்துகின்றது. வாழும் சூழல், சமூகம், சகமனிதர்கள் ஆகியவை மனிதனது சிந்தனையை உருவாக்குகின்றன என்பது சமூகவியல் நியதியாகும். அவ்வகையில் கல்வி என்பது

சமூகவியல் நியதியாகும். வாழ்கின்ற மனிதனை உருவாக்குவதில் அது பெரும் பங்கு வகிக்கின்றது. எனவே, கல்வி என்பது மனிதனின் பிறப்புரிமை யாகும். அவ்வுரிமையை மறுப்பது சமூக அநீதியாக ஆகும்.

ஆதி பொதுவுடமை சமூகத்தில் உற்பத்தி *(Production)* நுகர்வுடன் *(Consumption)* இணைந்திருந்தது. அச்சமூகவமைப்பில் மனிதர்கள் கூட்டாக உழைத்து உபரி உழைப்பின் பயனைச் சகலரும் அனுபவித்தனர். பிற்காலப் போக்கில் மனிதன் நேர்த்தியான கருவி களை உபயோகித்துப் பொருட்களை உற்பத்தி செய்ய தலைப்பட்டான். இப் பின்னணியே உபரி தோன்றவும், அதன் பக்கவிளைவாக உழைப்பு பிரிவினை தோன்றவும் அடித்தளமாக அமைந்தது. இதுதொடர்பில் ஜார்ஜ் தாம்ஸன் அவர்கள் பின்வருமாறு கூறுகிறார்.

**"நேர்த்தியான கருவிகளைப் பயன் படுத்துவதன் மூலமாக உபரி உற்பத்தியின் வளர்ச்சி சாத்தியமா யிற்று. இதுதான் உழைப்புப் பிரிவி னைக்கு அடித்தளமாக விளங்கியது. அந்த சமுதாயத்துக்குள்ளே இருந்த சில குறிப்பிட்ட குழுவினர் உழைப்பில் சில துறைகளிலே பயிற்சி பெற்றனர். தங்கள் உற்பத்திப் பொருள்களை யும், சமுதாய உற்பத்திப் பொருள்க ளுடன் சேர்ந்தனர். அந்தப் பொது வான பொருள்களினின்று தனிப்பட்ட உற்பத்திகளுக்குப் பொருட்கள் வழங் கப்பட்டன. உழைப்பு என்பது மேலும் குறைந்துகொண்டே போயிற்று. இப் போது உழைப்பாளி தன் தேவைக ளுக்கு அதிகமாகவே உற்பத்தி செய்ய முடிந்தது. அதன் விளைவாக அவன் தன் உழைப்பைப் பிரித்துப் பார்க்கத் தொடங்கிவிட்டான். அதாவது சமுதா யத்தின் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக இன்னமும் செய்யப் படும் உழைப்பு அதாவது அவசியமான உழைப்பு என்றும் தனக்காகச் செய் யப்படும் உழைப்பு அதாவது உபரி உற்பத்தி, உழைப்பு என்றும் பிரிக்க ஆரம்பித்தான். அதன்பின் உபரி உற் பத்திப் பொருளை தன் விருப்பம்போல் பயன்படுத்திக்கொள்வதற்கு உரிமை கோரினான். இந்த விதமாகத்தான் அவன் செய்த உற்பத்திப் பொருள் சரக்காக *(Commodity)* மாறிற்று. தேவைக்கான உற்பத்தி என்பது இரண்டாம் நிலைக்குத் தள்ளப்பட்டு பரிவர்த்தனைக்காக உற்பத்தி என் பது மேலோங்கியது."**[2]

இவ்வாறாக உற்பத்திக் கருவிக ளையும் உடமைகளையும் தமதாக்கிக் கொண்ட வர்க்கம் தம்மை உழைப்பிலி ருந்து பிரித்துக் கொண்டதுடன், தமக் குக் கீழ்ப்பட்டோரை நசுக்கவும் தொடங் கியது. அவர்களின் சகல உடமைகளை யும் அபகரித்துக்கொண்டதுபோல கல்வி உரிமையும் அபகரித்துக் கொண்டது. கிரேக்க கல்வி மரபு, ரோமானிய கல்வி மரபு கீழைத்தேயத்தில் காணப்பட்ட பிராமணியக் கல்வி மரபு, இந்துக் கல்வி மரபு, பௌத்தக் கல்வி மரபு ஆகிய

பாரம்பரியங்கள் கல்வி என்பது குறிப்பிட்ட வர்க்கத்தின் ஆபரணமாக விளங்கிய வரலாற்றினை எடுத்துக் கூறுகின்றன.

எல்லோருக்கும் கல்வி என்னும் எண்ணக் கருவானது சென்ற நூற்றாண்டின் இறுதியில் ஐக்கிய நாடுளின் மனிதவுரிமை சாசனத்தினால் முன்வைக்கப்பட்டது. 1990 ஆம் ஆண்டு தாய்லாந்து நாட்டில் இடம்பெற்ற ஜொம்ரியன் மகாநாடு முக்கியமானது.

எல்லோருக்கும் கல்வி என்னும் எண்ணக்கருவானது எத்தகைய பின்னணியில் எத்தகைய நலனை அடிப்படையாகக் கொண்டு உருவானது என்பதைப் புற உலகு, மனித சிந்தனை என்ற இரண்டின் பொதுவான விதிகளை ஆதாரமாகக் கொண்டு ஒவ்வொரு காலத்துக் கல்வி சிந்தனைகளுக்கும் சமுதாய இயக்கங்களுக்குமான உறவை அவற்றின் பன்முகப்பாட்டின் அடிப்படையில் நோக்கவேண்டியது சமகாலத் தேவையாகும்.

பாட்டாளி வர்க்கமும் அதன் நேச சக்திகளும் முன்வைத்த முதல் கோரிக்கை "அனைவருக்கும் கல்வி" என்ற கோரிக்கையாகும். கல்வி என்பது குறிப்பிட்ட வர்க்கத்தினருக்குரிய ஆபரணமாக அமையாது. அது சகலருக்கும் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்பது அதன் உள்ளீடாகும். இத்தகைய கோரிக்கைக்காக உழைக்கும் வர்க்கமும் அதன் நேச சக்திகளும் தாபன ரீதியாக ஒன்றிணைந்து முன்வைத்த முதல் போராட்டம் 1838 இல் இடம்பெற்ற சாசன இயக்கப் போராட்டமாகும். பிரஞ்சுப் புரட்சியின் போதும், "அனைவருக்கும் பள்ளி" என்ற கோரிக்கை முதன்மைப் படுத்தப்பட்டிருந்தது.

1984ல் காரல் மார்க்ஸ், ஏங்கல்ஸ் முதலானோர் வெளியிட்ட கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையில் தான் "அனைவரும் பொதுக்கல்வி" எனும் கோரிக்கை வலியுறுத்தப்பட்டிருந்ததுடன், அதனை நடைமுறைச் சாத்தியமாக்குவதற்கான போராட்ட மார்க்கமும் விஞ்ஞானபூர்வமாக தெளிவு படுத்தப்பட்டிருந்தது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் மேற்கு ஐரோப்பிய வாதிகள் மூன்றாம் உலக நாடுகளை தமது காலனித்துவ ஆட்சிக்குட்படுத்தியதுடன், அந்நாடுகளை தமது பொருளாதார வேட்டைக்கான காடாக மாற்றினர். இந்த வகையில் இந்தியா மீது பிரித்தானியர்கள் மேற்கொண்ட கொள்ளையடிப்புத் தொடர்பாக கார்ல்மாக்ஸ் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். "எந்தப் பழைய உலகத்திலிருந்து அது தன்னைப் படைத்துக் கொண்டதோ, அந்தப் பழைய உலகத்தை, தனது தேச எல்லைக்குள் அப்பால் கூடவைத்திருக்க அது (முதலாளித்துவம்) விரும்பவில்லை. எல்லாத் தேசங்களையும் தனது காலனித்துவ அரசியல் ஆதிக்க முறைக்குக் கொண்டுவர ஆக்கிரமிப்பு யுத்தத்தில் இறங்கியது. நவீன துப்பாக்கிகளையும், பீரங்கிகளையும் பயன்படுத்தியது. 18ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தனது அரசியல் இராணுவ கட்டுப்பாட்டுக்குள் இந்தியாவைக்

கொண்டு வந்து சேர்த்தது. இந்திய மக்கள் தமது பழைய உலகத்தை இழந்தனர்.”[3]


பிரித்தானியாவின் பிரதான வர்த்தகக் கம்பனியான கிழக்கிந்திய கம்பெனி, தன் முகவர் ஸ்தாபனங்களை நிறுவிக் கொண்டு, இந்தியாவிலிருந்து தான் பெற்ற பொருட்களுக்கு மிகக் குறைவான பெறுமதியையே திருப்பிக் கொடுத்தது. உதாரணமாக பருத்தியை இந்தியாவிலிருந்து பெற்றுக்கொண்டு, பின்னர் அதனை முடிவுப் பொருளாக்கி இந்தியாவிலேயே அதைச் சந்தைப்படுத்தியது. கைத்தறியந்திரத்தினால் புடவை நெய்தவர்கள் நடுத்தெருவில் விடப்பட்டனர். விவசாய உற்பத்தியில் தன்னிறைவு கண்டுகொண்டிருந்த விவசாயிகளின் உற்பத்தி காலனித்துவ வருகையினால் சீரழிந்து சின்னாபின்னமாக்கப்பட்டன.[4] 1866ல் ஒரிசா மாநிலத்தில் பிரித்தானியரின் ஏகபோக வர்க்கத்தின் காரணமாக, ஒரு மில்லியனுக்கும் மேற்பட்ட மக்கள் பசியினால் இறந்தனர்.[5]

இந்தியாவில் சுயதேவை பொருளாதாரம் சிதைந்ததுடன் தமது பொருளாதார முறையை அறிமுகப்படுத்தி அதனூடாக இந்தியாவின் மீது ஆக்கிரமிப்பு நடவடிக்கையிலும் ஈடுபட்டன. பிரித்தானியரின் இத்தகைய செயல்களை நியாயப்படுத்தும் வகையிலும் அதற்கானதொரு கூலிப் பட்டாளத்தை உருவாக்குகின்ற பணியினை ஆற்றும் வகையிலும்தான் பிரித்தானியர் இந்தியாவில் தமது கல்வி முறையினை அறிமுகம் செய்தனர். மதப்பிரச்சாரம் இவர்களின் அடிப்படையெனக் காட்டிக்கொண்டபோதும் சுதேச மக்களின் வரலாற்று உணர்வையும் பண்பாட்டையும் சிதைப்பதற்கான நடவடிக்கைகளாகவே அச்செயற்பாடுகள் அமைந்து காணப்பட்டன. ஆட்சி அதிகாரத்தில் இருப்பவர்களின் சொந்த தத்துவார்த்தக் கருத்துக்களை நியாயப்படுத்தும் தேவைக்காகவும் ஆளும் வர்க்கத்தின் நுகர்வுத் தேவைப் போட்டிகளுக்காகவுமே இந்த கல்விமுறை திட்டமிட்டு புகுத்தப்பட்டன.

எங்கெல்லாம் ஒடுக்குமுறைகளும் அடக்குமுறைகளும் இடம்பெறுகின்றதோ அங்கெல்லாம் அதற்கெதிரான போராட்டங்களும் இயக்கங்களும் தோன்றுவது தான் வரலாற்றின் நியதி. இக்காலச் சூழலில் பிரித்தானிய காலனித்துவ ஆதிக்கத்தை எதிர்த்து இந்திய தேசிய விடுதலைப் போராட்டம் உச்சநிலை அடைந்திருந்தது. இப்போராட்டத்தில் கல்வி உரிமையின் அவசியமும் உணரப்பட்டு அதற்கான கோரிக்கைகளும் முன்வைக்கப்பட்டன. அந்தவகையில் இந்தியக் கல்விக்கு ஏற்ற வகையிலான கல்வி முறையை முன்வைத்தவர்களில் சுவாமி தயானந்தர், சுவாமி விவேகானந்தர், அரவிந்தர், ரவிந்திரநாத் தாகூர், மகாத்மா காந்தி முதலானோர் குறிப்பிடத்தக்கவர்கள். பாரதி இவர்களின் தொடர்ச்சியாகவும் இவர்களைவிட நீண்ட தூரம் சென்று சமூகமாற்றப் போராட்டத்தில் கல்வியின் அவசியம் குறித்து எடுத்துக் காட்டியதுடன் மாற்றுக் கல்விச் சிந்தனையை முன்வைத்த சமூக விஞ்ஞானியாகவும் எம்முன் நிற்கின்றார்.

(அடுத்த இதழில் முற்றும்)

# வரவு



"மக்கள் மறுமலர்ச்சி அபிவிருத்திச் சங்கம்", மட்டக்களப்பு நடாத்திய சங்க அங்கத்தவர் திரு.செபஸ்தியான் கவுரியல் எழுதிய **'மட்டுநகரின் மருத்துவச் சமூகம்' (பேசப்படாத வரலாறு)** என்ற புதியதொரு புத்தக அறிமுகம் 10.05.2009 அன்று ஓய்வுபெற்ற அதிபர் திரு.லூ.அலெக்சாண்டர் அவர்களது தலைமையில் மட்டக்களப்பு மகாஜனக் கல்லூரி அரங்கில் நடைபெற்றது.

## மட்டுநகரின் மருத்துவச் சமூகம்
## - பேசப்படாத வரலாறு -

தமிழரிடையே உள்ள சாதிய அமைப்பு முறை சில தேவைகளுக்காக முற்காலத்தில் ஏற்படுத்தப்பட்டிருந்தாலும், பிற்காலத்தில் புகுத்தப்பட்ட சாதிய தீண்டாமையே பாகுபாடுகளை உருவாக்கி, மனித உரிமை மறுப்புகளுக்கும் இழிவுபடுத்தல்களுக்கும் எதிரான போராட்டங்களுக்கு வழிசமைத்து சமூக ஒற்றுமையைக் குலைத்திருந்தது.

பாகுபாடுகள், இழிவுபடுத்தல்களுக்கு ஆளாகியிருந்த ஒரு சாதியக் குழுவின் பேசப்படாதிருந்த வரலாறே, செபஸ்தியான் கவுரியல் எழுதிய "மட்டுநகரின் மருத்துவச் சமூகம் - பேசப்படாத வரலாறு" என்னும் நூலில் பேசப்படுகிறது.

சாதியம் இப்போது பார்க்கப்படுவதில்லை என்று சொல்லப்பட்டாலும், அது மனித சிந்தனையில் ஊறிப்போய், அது அடிக்கடி வெளிக்காட்டப்பட்டுக்கொண்டிருக்கிறது என்று நூலாசிரியர் கூறுவதைக் காணலாம். 10.05.2009 அன்று மட்டக்களப்பு மகாஜனக் கல்லூரி கலையரங்கில் நடைபெற்ற இந்நூல் அறிமுக நிகழ்வில் கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் கலாநிதி என் பத்மநாதன் அவர்களும், அருட்தந்தை கலாநிதி சாமிநாதன் அடிகள் அவர்களும் பிரதம அதிதிகளாகவும், பல்கலைக்கழக பேராசிரியர்கள் உள்ளிட்டவர்கள் கௌரவ அதிதிகளாகவும் கலந்து இந்த புத்தக அறிமுக நிகழ்வை சிறப்பித்துள்ளனர்.

துணை ஆயரின் ஆசிச் செய்தியும், பேராசிரியர் கலாநிதி சி.மௌனகுரு அவர்களின் முன்னுரையும், இந்நூலை முழுமையாக வாசிக்கத் தூண்டுவனவாக உள்ளன.

மட்டக்களப்பின் பல சாதியக் குழுக்களின் வரலாறுகள் எழுதப்படாத நிலையில், இப்புத்தகம் ஒரு முன்னோடி முயற்சியாகவும், ஆய்வுக்குரியதொன்றாகவும் கருதலாம்.

இந்நூலின் விலை ரூபா.200/= கிடைக்குமிடம்

**இல.4B, டயஸ் ஒழுங்கை, மட்டக்களப்பு.** தொலைபேசி : **060 – 2650870**



## நூலாசிரியரைப் பற்றி......

மட்டக்களப்பு, செபஸ்தியான் கவுரியல் அவர்கள்,வயது 78, பல வருடங்களாக அரச சேவையில் எழுதுவினைஞராகவும், கணக்காளராகவும், சிரேஷ்ட பிரதிப்பணிப்பாளராகவும் பணியாற்றியவர். ஆங்கில மொழிமூலம் கல்வி பயின்ற இவர், ஒரு எழுத்தாளராக இல்லாவிடினும், மட்டுநகர் மருத்துவச் சமூகத்தைப் பற்றி முழுமையான வரலாறு எழுதப்பட வேண்டும் எனும் நோக்கத்துடன் இந்த நூலினை தமிழில் ஆக்கியுள்ளார். இச்சமூகத்தின் இன்றைய தலைமுறையினர் அனுபவிக்கும் சுதந்திரம் நோகாமல் பெற்றது, அச்சுதந்திரத்தைப் பெற தமது முன்னோர்கள் நடாத்திய போராட்டங்களை, தியாகங்களை, இளைய தலைமுறையினர் தெரிந்துகொள்ள வேண்டும் என்றும், மருத்துவச் சமூகத்திடமிருந்து மறைந்து போய்க்கொண்டிருக்கும் மருத்துவ அறிவை அச்சமூகம் மீளப்பெற வேண்டும் என்பதையும் இந்நூல் மூலம் வலியுறுத்தியுள்ளார்.

## மூக்கறுந்த கடைகள்



மூக்கறுந்த
முன்வரிசைக் கடைகள்.
யார் இவற்றின் மூக்கை அரித்தார்கள்.
வீதி விஸ்தரிப்பாம்.
வண்ணம் பார்த்துப் பார்த்துக்
கட்டிய கடைகளை
கட்டியவனே இடிக்கிறான்.
பெற்ற குழந்தையை
சித்திரவதை செய்வது போல.
கொங்கிறீற் பிளேற்றுகள்
கொங்கிறீற் சுவர்கள்
பாதுகாப்புக்காக
உறுதியாகக் கட்டப்பட்டவை.
இப்போது உடைக்கப்படுகின்றன.
கொங்கிறீற்றை உடைப்பது
என்ன லேசான வேலையா?
உள்ளுக்குள்ளே அழுதுகொண்டு
வெளியே சிரித்துக்கொண்டு
தன் கடையையே
உடைக்கிறான் சொந்தக்காரன்.
இனி அதை மீளக்கட்ட வேண்டும்.
அது வரைக்கும் வியாபாரம் பாழ்.
லேசாக உடைக்கச் சொல்வார்கள்.
உடைத்துப் பார்த்தால் தெரியும்.
வீதியின் குன்று குழிகளையே
நிரப்பத் தெரியாத திணைக்களம்.
வீதி விஸ்தரிப்பாம்.
மக்களின் துன்பங்கள் ஒருபுறம்.
இந்த சோதனைகள் மறுபுறம்.
மத்தளமாகிறான் இந்த மனிதன்.

-மணி-

# எனக்குப் பிடித்த என் கதை

**ஈழத்து மூத்த சிறுகதை எழுத்தாளர்கள் தங்களுக்குப் பிடித்த தாங்கள் எழுதிய கதைகளை இங்கே தருகிறார்கள்.**




யாழ்ப்பாணம் நெடுந்தீவைப் பிறப்பிடமாகக் கொண்ட (30.06.1943ல் பிறந்தார்) **செ.மகேந்திரன் (நெடுந்தீவு மகேஷ்)** அவர்கள் 1960களில் செ.மகேந்திரன் எனும் பெயரில் ஈழநாடு பத்திரிகையில் கவிதைகள் எழுதத் தொடங்கி இடதுசாரிச் சிந்தனைகளால் ஈர்க்கப்பட்டு வர்க்கப் போராட்டம், சாதி ஒழிப்பு சார்ந்த கவிதைகளை தேசாபிமானி, தொழிலாளி, யுவசக்தி, வசந்தம் ஆகியவற்றில் எழுதிவந்தார். தினபதி, சிந்தாமணி, வீரகேசரி, மித்திரன், ஈழநாதம், முரசொலி, உதயன், சஞ்சீவி, திசை உட்பட பல பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் இவரது ஆக்கங்கள் வெளிவந்துள்ளன. 2002இல் இவர் வெளியிட்ட **'மனிதத்தைத்தேடி'** எனும் கவிதைத் தொகுப்பு நூலுக்கு வடக்கு கிழக்கு மாகாணப் பண்பாட்டு அலுவல்கள் அமைச்சு அவ் ஆண்டுக்குரிய இலக்கியப் பரிசொன்றினை வழங்கிக் கௌரவித்தது. 1969இல் **'தினபதி'**யில் வெளியான **'ஊமை'** மூலம் சிறுகதைத் துறையிலும் கால்பதித்து இதுவரை சுமார் 25 சிறுகதைகளை எழுதியுள்ளார். கவியரங்கு, இசை, நாடகம் ஆகியவற்றிலும் ஈடுபாடுடையவர். **'செல்ல மகேந்திரன்', 'வேதாமகேஷ்' 'மாவுறையூரான்'** ஆகிய புனைபெயர்களிலும் ஆக்கங்களை வெளியிட்டுள்ள **'நெடுந்தீவு மகேஷ்'** அவர்கள் ஆசிரியர் – பயிற்றப்பட்ட ஆசிரியர் – ஆரம்பக் கல்வி ஆலோசகர் – வடக்குக்கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தில் ஆரம்பக் கல்வி உதவிக்கல்விப்பணிப்பாளர். (1996/2003) ஆகிய பதவிகளில் பணியாற்றி 2003 இல் ஓய்வுபெற்ற பின் தற்பொழுது வடக்கு கிழக்கு மாகாண கல்வித்திணைக்களத்தில் ஜேர்மன் தொழில்நுட்பக் கூட்டுழைப்பகம் *(GTZ)* கல்வி அமைச்சின் அனுசரணையுடன் தொடக்கிய அடிப்படைக்கல்வித் துறை அலகு *(BESU)* மேற்கொள்ளும் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தும் பணியில் ஆரம்பக் கல்வி பாடநிபுணராகக் கடமையாற்றுகின்றார். ஜேர்மனி, பிரான்ஸ், நோர்வே, டென்மார்க், இத்தாலி, ஒல்லாந்து ஆகிய நாடுகளில் தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான பயிற்சிகளை அவர்களின் அழைப்பின் பேரில் அவ்விடங்களுக்குச் சென்று தங்கி நின்று நடத்திய அனுபவம் மிக்கவர். முன்பள்ளிக் கல்வி, ஆரம்பக்கல்வி ஆகியவை சார்ந்த ஆசிரியர் பயிற்சிகளை யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு, கல்முனை ஆகிய கல்விப் பிரதேச ஆசிரியர்களுக்கு வழங்கியும் வருகின்றார். தனது கதைகளுள் தனக்குப் பிடித்த சிறுகதையான **'நவமணி'** 13.07.1997 வார இதழில் வெளிவந்த **'ஓர் உயிரின் ஓலம்'** எனும் சிறுகதையை இங்கே தருகின்றார்.

சிறுகதை

# ஓர் உயிரின் ஓலம்

-நெடுந்தீவு மகேஷ்-



அன்று அவசர சத்திர சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட அந்த இளைஞன் மயங்கிக் கிடந்தான். இரத்தம் அதிகமாக வெளியேறி விட்டது. குண்டுபாய்ந்த இடத்திலிருந்து இரத்தம் வெளியேறிக்கொண்டிருந்தது. குற்றுயிராய்க் கிடக்கின்றான் என்ற செய்தியே வெளியிற் பரவித் திரிந்தது. வைத்தியர்கள் அவனது உயிரைக் காக்க எடுத்துக்கொள்ளும் முயற்சிகள் சுறுசுறுப்படைந்தன.

இரத்தம் ஏற்றப்பட்டது. உடலிற் தங்கிவிட்ட குண்டுத்துகள்கள் அகற்றப்பட்டன. காயங்கள் தையலிடப்பட்டு மருந்திடப்பட்டன. அந்தச் சத்திரசிகிச்சை அறையில் அவசரம், அவசியம் உணரப்பட்ட வைத்தியர்களின் துரிதமான, சாதுரியமான வைத்திய உதவிகள் ஒழுங்குபடுத்தப்பட்டன. வைத்தியர்களுக்கு உதவியாகத் தாதிமார் ஓடி, ஓடித் தமது சேவையில் கடமையில் உற்சாகமாக ஈடுபட்டனர். ஓர் உயிர், அதன் நிலைப்பு, அதன் வாழ்வு உணரப்பட்ட நிலையில் தம்மை முழுமையாய் அர்ப்பணித்துச் செயற்படும் வைத்தியர்கள், தாதியர்கள் அந்த உயிரின் மீட்புக்காய், அதன் காப்புக்காய் பல மணிநேரம் போராடினார்கள். சிகிச்சை வெற்றிகரமாக நிறைவேறியது.

தனியான ஓர் இடத்தில் மிகவும் கரிசனையுடன் கவனிக்கப்பட வேண்டியவன் அவன். ஏற்பட்ட காயங்கள் குணமாகும் வரை ஏற்ற மருந்துகள், வைத்திய கவனிப்புகள் கிரமமாகக் கொடுக்கப்பட வேண்டும். அனைத்தும் ஏற்பாடாகியது. கட்டிலிற் கண்திறக்காமற் தொய்ந்து கிடந்தான் அவன். மேலும் மேலும் மருந்துகள், உணவுகள் என்று எல்லாமே ஆட்டப் பொம்மைக்குக் கட்டப்பட்ட நூல்கள் போல ரியூப்க

ளில் வடியச் சூழத் தொங்கவிடப்பட்டன. உயிருடன் இருக்கின்றான் என்பதை உணர்த்தி துருத்தி போல் மார்பசைந்து துடிப்பது தெரிந்தது. அவனது தாயைத் தவிர வேறெவரும் அவனருகில் இல்லை.

"ஐயோ! யாரோ என்ர பிள்ளையைச் சுட்டுப் போட்டுப்போயிட்டாங்கள்" ஆற்றாமையும் ஆத்திரமும் தொனிக்க தாய் முணுமுணுத்தாள். தாய்மைத் துடிப்பும், வேதனையும் அவளை ஏதேதோ சொல்லி அழ வைத்தது. உயிர் தப்பி விடுவானா? வைத்தியர்கள் செய்யும் சேவையால் தன் மகன் எழுந்து விடுவானா? இறந்து விடுவானா? என்றெல்லாம் பலவாறாக எண்ணினாள்.

பிரதான வீதியில் ஓடும் வாகனங்களாக அவள் சிந்தனையில் நல்லதும், கெட்டதும், நெருங்கியும், விலகியும் சென்றன.

"அம்மா இவன் உன் மகனா?" வைத்தியரின் குரல் கேட்டது. அவர் வந்துவிட்டார். நோயாளியைப் பார்வையிட்டார். அங்கே தொங்க விடப்பட்டிருந்த குறிப்புத் தாளில் ஏதோ எழுதினார்.

"ஓம் ஐயா... பிள்ளைக்கு ஒண்ணும் ஏற்படாதே?" தாயின் உள்ளம் தவித்தது, பதைபதைத்தது, வைத்தியர் மெல்லச் சிரித்துக் கொண்டார்.

"உயிரைக் காப்பாத்தத்தானே நாங்கள் படிச்சிட்டு வந்தனாங்கள். பயப்படத் தேவையில்லை. மகனுக்கு ஒண்ணுமில்லை. அவன் சுகமாகிவிடுவான்" வைத்தியர் தாயின் வயிற்றில் பால் வார்த்தார்.

"அப்பனே ஆண்டவா?" இறைவனை வேண்டிக்கொண்டாள்.

மகனின் ஆஸ்பத்திரி நாட்கள்... வைத்தியர்களின் அன்பும், உதவியும் தொடர்ந்தன. தாதியர்களின் சேவையும், காப்பும், கணிப்பும் அவன் வேதனைகளைத் தீர்த்தன. அவனது பெரிய காயங்கள் ஆறி விட்டன. விரைவிலேயே குணமடைந்தான்.

வைத்தியரின் வதனத்தில் என்றும் போல் மலர்ச்சி. தன் சேவைக்கு, திறமைக்கு எடுத்துக்காட்டாக ஓர் உயிர் மீண்டும் வாழப்போகிறது. குதூகலத்தோடு அவனைப் பார்த்தார்.

"இன்றைக்கு துண்டு வெட்டிக்கொண்டு போகலாம்"

வைத்தியரின் வார்த்தைகள் அவனுக்கு மகிழ்ச்சியைத் தந்தன. கட்டிலில் நிமிர்ந்து உட்கார்ந்தான். ஆஸ்பத்திரியில் நீண்ட நாள்கள் அடைபட்டுக்கிடந்தவனுக்கு விடுதலை. வீட்டில் தனது உற்றார், உறவினருடன் மீண்டும் உறவாடும் ஆவல்.

அவன் புன்னகைத்தான். தாய் மகிழ்ந்தாள். வீட்டுக்கு மகனைக் கூட்டிச் செல்லும் ஒழுங்குகள், ஆரவாரங்கள். மலர்ந்த முகத்துடன் அவள் எல்லோரையும் பார்த்தாள்.

"ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் மகனைக் கிளினிக்குக்கு கூட்டிவர வேணும்" வைத்தியரின் வேண்டுகோள்.

"ஓம் ஐயா, கூட்டி வாறன்"

மகிழ்ந்தாள் தாய். தனது மகனை உயிர்த்தெழ வைத்த வைத்தியரைக் கூப்பிய கைகளுடன் உளமுருக நோக்கினாள். அவர் தமது சேவையே நோக்காகும் சிந்தனையுடன் அடுத்த கட்டிலில் காயமுற்றிருந்த நோயாளியை நோக்கி நடந்தார்.

இளைஞன் வீட்டுக்கு வந்த ஓரிரு தினங்களில் எஞ்சியிருந்த காயங்களும் ஆறிவிட்டன. உடற்சோர்வு, பலவீனம், களைப்பு என்பவற்றைப் போக்க வீட்டார் எடுத்துக்கொண்ட முயற்சிகள் பல.

இறைச்சி, பால், முட்டை என்று சத்துணவுகளை வாங்கிக் கொடுத்தனர். நெஸ்ரமோல்ட், ஹோர்லிக்ஸ், சஸ்ரஜின் என்றும் பல்வேறு உணவுப் பொருட்களும் வீட்டிலே வந்து குவிந்தன.

அவன் இப்பொழுது மனிதனாக மீண்டும் நடந்தான். உற்சாகமாக உலவினான். தாய் உள்ளம் பூரித்தாள்.

ஓர் உயிரின் மகத்துவமான நிலைப்புக்காக, ஒரு ஜீவனின் வாழ்வுக்காக எத்தனையெத்தனை செயற்பாடுகள்.

வாழ்தல் என்பதும், உயிர் நிலைத்திருத்தல் என்பதும் இலகுவில் நிகழக்கூடியவையல்ல.

வெள்ளிக்கிழமை கிளினிக் நாள்.

வைத்தியசாலையின் முன் விறாந்தையில் சனக்கூட்டம் திரண்டிருந்தது. அங்கே போடப்பட்ட வாங்குகளில் பலர் அமர்ந்திருந்தனர். அந்த இளைஞனும், தாயும் அதனருகில் நின்றிருந்தனர். மகனைக் கரிசனையுடன் கிளினிக்கில் காண்பிக்க கூட்டிவந்திருந்தாள் அவள். வைத்தியர் இன்னமும் வரவில்லை.

சில நிமிட நேரங்களில் அவர் வந்துவிடக்கூடும்.

திடீரெனக் கேட்ட வேட்டுச் சத்தங்கள் அந்த ஆஸ்பத்திரியைத் திடுக்கிட வைத்தன. நாலா திசையும் கலைந்தோடும் மக்கள் வெள்ளம். எங்கே, என்ன நடந்துவிட்டது என்பதை அறியமுடியாதபடி அல்லலோல கல்லோலப்பட்டது.

தலையில் குண்டுகள் பாய்ந்த நிலையில் அந்த இளைஞன் இரத்த வெள்ளத்தில் கிடந்தான். தாய் கதறி அழுதாள்.

"தம்பி, தம்பி" என்று அரற்றினாள்.

அவனிடமிருந்து எதுவிதமான பதிலும் இல்லை.

யார் செய்தார்கள்? ஏன் செய்தார்கள்? எதுவுமே தெரியவில்லை. அவனது உயிர் பிரிந்துவிட்டது. இரத்தம் தோய்ந்த மகனின் தலையை அந்தத் தாய் அணைத்துக் கொண்டு அலறினாள். ஆறுதல் சொல்ல எவருக்குமே ஆற்றல் இருக்கவில்லை.

வைத்தியர் அந்த இடத்தை நோக்கி மெல்ல நடந்துவந்தார். அவர் கண்ட காட்சி உள்ளத்தை உருக்கியது. இதயத்திற் பாறாங் கற்களைப் போட்டு இறுக்கியதைப் போன்ற உணர்வு. எதனையும் அவரால் பேச முடியவில்லை.

"ஐயா, என்ர பிள்ளையைக் காப்பாத்துங்கோ.... என்ர பிள்ளையைக் காப்பாத்துங்கோ"

அந்தத் தாய் வைத்தியரின் காலில் விழுந்து கதறினாள்.

"உயிரைக் காப்பாற்றத்தான் படிச்சனெண்டு சொன்னீங்களே, என்ர பிள்ளையைக் காப்பாத்துங்கோ, காப்பாத்துங்கோ"

அவள் ஓய்வின்றி ஓலமிட்டாள். மகனின் சடலத்தின் மீது விழுந்து புரண்டாள். வேதனை அவ்விடத்தில் நின்றிருந்த அனைவரையும் ஆட்கொண்டது. வைத்தியரின் கண்கள் குளமாயின.

"நான் உயிரைக் காப்பாற்றப் படித்து வந்தேன். ஆனால் உயிரைப் பறிப்பதற்கென்றே படித்தவர்கள் இருக்கையில் என்னால் என்ன செய்ய முடியுமம்மா..."

வேதனையோடு கூறிக்கொண்டே டாக்டர் அவ்விடத்திலிருந்து நடந்து கொண்டிருக்கிறார். ■

**(யாவும் கற்பனை)**


**வரவு** நாச்சியாதீவு பர்வீனின்

**'பேனாவால் பேசுகிறேன்'**




மல்லிகைப் பந்தல் வெளியீடான நாச்சியாதீவு பர்வீனின் **'பேனாவால் பேசுகிறேன்'** நூல் வெளியீட்டு விழா 11.07.2009 அன்று கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் திக்குவல்லை கமால் தலைமையில் நடைபெற்றது.



நாச்சியாதீவு பர்வீன்

**தொடர்பு** : 'மல்லிகைப் பந்தல்'
201/4, ஸ்ரீ கதிரேசன் வீதி,
கொழும்பு - 13.
தொலைபேசி : 011-2320721

**விலை** : 150/-

எழுத்தாளர்களே! / கலைஞர்களே! / ஊடகவியலாளர்களே! / இலக்கிய ஆர்வலர்களே!
நீங்கள் படித்ததை — பார்த்ததை — கேட்டதை — அறிந்ததை இங்கே பகிர்ந்து கொள்ளுங்கள்.

# வல்லூறும் சேவலும்

**வ**ல்லூறு தன்னை வளர்த்து வந்த எசமானிடம் பழகி, அவர் அழைத்தபோதெல்லாம் போய் அவருடைய கை மணிக்கட்டில் அமர்ந்து கொள்வது வழக்கம். ஆனால் சேவல் மட்டும் அவரை அண்டுவதில்லை. அவர் அருகினில் வந்தவுடனே, அது கூச்சலிட்டுக் கொண்டு ஓடிவிடும்.

'சேவல்களாகிய உங்களுக்கு நன்றி என்பதே கிடையாது!' என்று வல்லூறு கூறிற்று. மேலும் அது கோழி வகுப்பையே குறைவாகப் பேசத் தொடங்கிற்று. நீங்கள் அடிமைப் புத்தியுள்ளவர்கள். உங்களுக்குப் பசி வந்தால்தான் நீங்கள் எசமானர்களைத் தேடிப்போவீர்கள். காட்டுப் பறவைகளாகிய எங்கள் குணமே வேறு. எங்களுக்கு மிகுந்த வலிமை உண்டு. எவரையும்விட வேகமாக நாங்கள் பறக்க முடியும். மனிதர்களிடம் இருந்து நாங்கள் விலகி ஓடுவதில்லை. எங்களை அழைக்கும் பொழுது நாங்களாகவே அவர்களிடம் போகிறோம். எங்களை அவர்கள் உணவளித்து வளர்ப்பதை நாங்கள் மறப்பதில்லை.

'நீங்கள் மனிதர்களைக் கண்டு ஓடாமலிருப்பதன் காரணம் அவர்களுடைய மேஜைகளின் மீது வேகவைத்த வல்லூறுகளை நீங்கள் கண்டதில்லை. ஆனால் நாங்களோ, வேக வைத்த கோழிகளையும், குஞ்சுகளையும் அடிக்கடி பார்க்கிறோம் என்று சேவல் கூறிற்று.

"டால்ஸ்டாயின் நீதிக்கதைகளில் இருந்து"
பகிர்பவர் : **தேன்நாடு மூர்த்தி**


## அன்பான வேண்டுகோள்!

**சந்தாதாரர்கள் தங்கள் 2009ம் ஆண்டுக்குரிய சந்தாவைச் செலுத்திப் புதுப்பிப்பதுடன் தங்களுக்குத் தெரிந்த இலக்கிய ஆர்வலர்களில் குறைந்தபட்சம் ஒருவரையாவது சந்தாதாரராகச் சேர்த்து உதவுங்கள். அது 'செங்கதிர்' இன் வரவுக்கும், வளர்ச்சிக்கும் உரமாக அமையும். 2009ம் ஆண்டுக்குரிய ஆண்டுச்சந்தா ரூ.750/- மட்டுமே.**

குறுங்கதை



# துணிவு

— வேல் அமுதன் —

ராஜா தம்பதி திருமண விடயக் கோவைகளுள் நீண்ட நேரம் தேடியும் ஒன்றே ஒன்றை மாத்திரம் எடுக்கக் கூடியதாக இருந்தது! அச் சாதகக் குறிப்பு நல்ல பொருத்தம்.

ஆனால், கைக்கெட்டியது வாய்க்கெட்டும் போலில்லை!

அதற்கு மூல காரணம் கிடைத்த சாதகக் குறிப்பு மூல நட்சத்திரம் என்பதே. மகன் பூரம் நட்சத்திரம் என்பதாலும் மணமகள் மூலம் முதலாம் பாதமென்பதாலும், ராஜா தம்பதிக்கு உண்மையைச் சொன்னால் பயமே பிடித்துவிட்டது!

பத்தாக்குறைக்குப் பக்கத்திலிருந்த பாமினி (இன்னொரு வாடிக்கையாளர்) பிடில் வாசிக்கத் தொடங்கிவிட்டாள். "ஐயா! மூலம் வலு பொல்லாதது. தகப்பனுக்கு நாசம். நோய் நொடி - தீராத வருத்தம் - கஷ்ட நஷ்டம். சொல்லுகிறன் என்று கோபிக்காதையுங்கோ! சிலவேளை... மரணமே வரலாம்!"

சொல்லி வைத்தாற்போல் அந்நேரம் மூல நட்சத்திரப் பெண்ணின் தாய் தந்தையும் வந்து சேர்ந்தனர். தங்கள் பிள்ளையைப் பற்றியே கதை அடிபடுகிறது என அறிந்ததும், மணமகளின் தந்தை சொன்ன கதை பால்வார்த்தது போல் இருந்தது!

மணமகளின் தந்தை சொன்ன கதை:

"நான் பரணி நட்சத்திரம். என்ரை மனிசி மூலம் முதலாம் பாதம். மூலத்தால் ஒருவிதப் பிரச்சினையும் அறவே இல்லை. இப்ப எனக்கு அறுபது வயதாகுது. என்ரை அப்பாவுக்கு எண்பது வயது. எந்தக் குறையும் இல்லாமல் இப்பவும் திடகாத்திரராய் இருக்கிறார். நேரே விடயத்திற்கு வாரேன். மூலத்திற்கு நீங்க ரெடி என்றால், நாங்களும் ரெடி"

-யாவும் கற்பனையல்ல-

# நல்லூர் பிரதேச செயலகத்தின் "கலைஞானம்"

## -கலைஞர் பதிவேடு ஒரு முன்னோடி முயற்சி-

**-அன்புமணி-**

யாழ்.நல்லூர் பிரதேச செயலகம், காத்திரமான இலக்கியப் பங்களிப்புச் செய்து வருவது யாவரும் அறிந்த செய்தி. ஆண்டுதோறும், கலாசார விழாவும் கலைஞர் கௌரவிப்பும் தவறாமல் நடந்து வருகின்றது. இவை எல்லாவற்றிற்கும் மேலாக இம் முறை **'கலைஞானம்'** என்ற பெயரில் நல்லூர் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள கலைஞர்களின் விபரங்களைத் தொகுத்து வெளியிட்டுள்ளார்கள்.

பக்கத்துக்கு ஒருவர் வீதம் 221 கலைஞர்களின் விபரங்கள் புகைப் படத்துடன் இடம்பெறுகின்றன. இதில் எழுத்தாளர், கவிஞர், ஓவியர், நடன மணிகள், நாடகமணிகள் எனப் பல கலைஞர்களும் இடம்பெறுகின்றனர். அந்தவகையில் இது ஒரு ஆவணப் பதிவாகவும் அமைகின்றது. உசாத்துணை நூலாகவும் அமைகின்றது. வடக்கு, கிழக்கிலுள்ள ஒவ்வொரு பிரதேச செயலகமும் இவ்வாறான ஒரு நூலை வெளியிடுதல் மிகமிக அவசியமாகும்.


ஆண்டுதோறும், கலாசாரவிழா நடாத்தி சிறப்புமலர் வெளியிடுகின்ற பிரதேச செயலகர்கள் இதுபற்றிச் சிந்திக்க வேண்டும். தத்தம் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள அனைத்துக் கலைஞர் களின் விபரங்களையும் சேகரித்து, இத்தகைய ஒரு நூலை வெளியிட வேண்டும். இறந்தவர், இறப்பவர் அனைவரது விபரங்களும் இதில் இடம்பெறவேண்டும்.

**'கலைஞானம்'** வெளியீட்டுக்குக் காரணஸ்தர்களான பிரதேச செயலாளர், செந்தில் நந்தனன், கலாசார பேரவைச் செயலாளர் ரஜனி கந்தசாமி, மூத்த எழுத்தாளர் செங்கை ஆழியான் ஆகியோர் பாராட்டுக்குரியவர்கள்.

**✤ மக்களைப் பற்றித் தெரிந்து கொள்வதற்கு இலக்கியம் ஓர் அற்புத வழியாகும். அது மனிதனை அறிவதற்குரிய மூலமாகும்.**

**✤ என்னிடமுள்ள நல்லவை அனைத்திற்கும் நான் பயின்ற நூல்களுக்கே கடமைப்பட்டவனாவேன்.**

**— மார்க்ஸிம் கார்க்கி —**



# செங்கமலம் — 7

எம்.பி.செல்லவேல்

புகையிரதமும் திருகோண மலையை நெருங்கிக்கொண்டிருந்தது. மக்கள் விழித்துவிட்டார்கள் என்ப தைப் பெட்டியில் எழுந்த ஆரவாரம் பறைசாற்றத் தொடங்கியது. இதன் காரணமாக ரகுவின் எண்ணச்சுழல் தடைப்பட, அவன் கண்கள் விழித் துக் கொண்டன. கைக்கடிகாரத்தைப் பார்த்தான். காலை ஆறுமணிக்கு இன் னும் பதினைந்து நிமிடங்களே பாக்கி யாயிருந்தன. நித்திரையில்லாது வெறு மனே மூடிக்கிடந்த கண்கள் இப்போது எரிச்சல் எடுப்பதை உணர்ந்தான். போத் தலில் கொண்டுவந்த நீரைத்தொட் டுக் கண்களில் ஒத்திக்கொண்டான். அது அவன் கண்களுக்குச் சிறிது சுகமாக இருந்தது.

அவ்வேளையில் பக்கத்தில் இருந்த நண்பன் சோம்பல் முறித்த வனாகக் கைகளை மேலே தூக்கிக் கீழிறக்கிய வண்ணம் நித்திரையி னின்று விடுபட்டான். பக்கத்திலிருந்து ரகுவை நோக்கியவன்,

"ரகு! நீ தூங்கவில்லை போல இருக்கு" கணேசன் கேட்டான். "தூக்கமா! என் சொந்தமண்ணில் பழைய ஞாபகங்களை மீட்டிப்பார்ப்ப தில் கிடைத்த சுகத்தில் மூழ்கிக் கிடந்ததால் தூக்கம் எப்படி வரும்?" கணேசனும் எழுந்து கொண்டான். புகையிரதம் ஊதுகுழலை ஊதிக் கொண்டிருந்தது. திருகோணமலைப் புகையிரத நிலையத்தை அண்மித் துக் கொண்டிருந்தது. வேகமும் படிப் படியாகக் குறையப் புகையிரதமும் ஊர்ந்து ஊர்ந்து புகையிரத மேடை யில் நிலைகொண்டது.

மக்கள் எல்லோரும் ஒருவரையொருவர் முண்டியடித்தவண்ணம் ஆரவாரத்துடன் தங்கள் பயணப் பொதிகளுடன் இறங்கிக்கொள்ள ஆரம்பித்தனர். கணேசனும் ரகுவும் இறங்கி புகையிரத நிலையத்தைவிட்டு வெளியேறினர். வெளியே நின்றுகொண்டிருந்த பேருந்தில் ஏறி அவர்களும் அமர்ந்துகொள்ள பேருந்தும் புறப்பட்டது.

புகையிரத நிலையத்திலிருந்து புறப்பட்ட பேருந்து ஓடிச்சென்று திருகோணமலை பிரதான பஸ் நிலையத்தையடைகிறது. பயணிகள் எல்லோரும் முண்டியடித்தபடி இறங்குகின்றனர். தாம் தாம் செல்லவேண்டிய இடத்துக்குப் போகும் பேருந்துகளை அடையாளம் கண்டு அவற்றில் இடமும் பிடித்துக் கொள்கின்றனர்.

ரகுவும் கணேசனும் மூதூர் செல்லும் துறைக்கு விரையும் பேருந்தில் இடம்பிடித்துக் கொள்ள பேருந்தும் விரைகின்றது. "காலை எட்டு முப்பதுக்குத்தான் முதலாவது இயந்திரப் படகு துறையிலிருந்து மூதூர்க் கரையை நோக்கிப் புறப்படும்" கணேசன் ரகுவிற்கு விளக்கினான். பேருந்து துறையை நோக்கி விரைய விரைய ரகுவின் மனமும் சிறகு கட்டிப் பறப்பதுபோல இருந்தது. அவ்வளவு விரைவாக இதயமும் துடித்துக்கொண்டிருந்தது. தனது பிறந்த மண்ணைக் காணப்போகிறோம் என்பதாலோ அல்லது தேடி வந்த அந்த உயிரைச் சந்திக்கப்போகிறோம் என்பதாலோ என்பது புரியவில்லை.

பேருந்து ஆடி ஓடிச் சென்று சரியாக எட்டுமணியளவில் படகுத் துறையை அடைகின்றது. அக்கரை செல்லும் அனைத்து பயணிகளும் இறங்குகின்றனர்.

"இன்னும் முப்பது நிமிடங்கள் இருக்கின்றமையால் நாம் தேநீர் அருந்துவோம் ரகு!" கூறியபடி கணேசன் ரகுவை அங்கிருந்த தேநீர்க் கடையொன்றிற்கும் அழைத்துச் செல்கின்றான்.

சுற்றுமுற்றும் பார்த்தபடி செல்லும் ரகுவுக்கு அங்கு காட்சிதரும் தோற்றம், தனது ஸ்கொட்லாண்ட் விஜயத்தின்போது தான் கண்ட ஒரு இடத்தை ஞாபகமூட்ட அதனை கணேசனுக்கு வெளிப்படுத்தினான். தேனீர் அருந்திய பின் படகில் இருவரும் ஏறிக்கொள்கின்றனர். சரியான நேரத்திற்கு இயந்திரப்படகும் புறப்பட்டது. சிறிது நேரத்தில் மூதூர் நகரின் கரையில் இருவரும் கால்பதிக்கின்றனர். அதேவேளையில் அக்கரையில் அநேக முச்சக்கரச் சிற்றூந்துகள் காத்துக்கிடக்கின்றன. மற்றும் திருமலை நோக்கிப் பயணிப்பதற்காகக் காத்திருக்கும் பயணிகள், விலை கூறி அழைக்கும் சிற்றுண்டி வியாபாரிகள், மீன்வியாபாரிகள், தானிய வியாபாரிகள் அங்கு காட்சி தருகின்றனர். அத்துடன் தேநீர்க்கடைகள், போசனசாலைகள் பலவும் நிறைந்து கிடக்கின்றன.

தான் அங்கு வாழ்ந்த பழைய காலத்தையும், தற்போதைய காலத்தையும் ரகுவின் மனம் ஒப்பிட்டு மீட்டல்

செய்கின்றது. அவ்வேளையில் கணேசன் முச்சக்கரச் சிற்றூந்து ஒன்றை அழைத்தான். அதில் இருவரும் ஏறிக் கொள்ள அது விரைகிறது. மூதூர் நகரினுள் பயணிக்கிறது.

ரகுவின் கண்கள் சுற்றுமுற்றும் துழாவியபடி வந்துகொண்டிருக்கிறது. சிலவீடுகளின் கூரைகள் பிய்த்தெறியப்பட்டுள்ளன. கட்டடங்கள் இடிந்த நிலையில் தோற்றமளிக்கின்றன. இன்னும் சில குடும்பங்கள் இடிந்த வீடுகளில் ஏதோ சிறுபகுதியைத் திருத்திக் குடியிருப்பாக ஆக்கி வாழ்ந்து கொண்டிருக்கின்றன. இப்படியான தோற்றங்கள் ரகுவின் உள்ளத்தை வேதனையில் வருடுகின்றது.

"ரகு! என்ன பார்க்கிறாய். இவையெல்லாம் இவ்வழகிய கிராமத்தில் இனப்பகை ஏற்படுத்திய வடுக்கள். இதற்குத் தூபமிட்டவர்களின் அடாவடித்தனங்களின் விளைவுகள்" கணேசன் ரகுவின் உள்ளத்தைப் புரிந்தவன் போலப் பதிலளிக்கின்றான்.

இஸ்லாமிய மக்கள் வாழும் பகுதியைக் கடந்து தமிழ்மக்கள் வாழும் பகுதிக்கு முச்சக்கரச் சிற்றூந்து சென்றுகொண்டிருப்பதை அங்கு அவன் கண்ட கோவில் ரகுவுக்குத் தெரியப்படுத்துகின்றது.

அங்கும், பாழடைந்த வீடுகள், எரியூட்டப்பட்ட கரி இன்னும் போகாமலே ஒட்டிக்கொண்டிருக்கும் குடிசைகள், முட்புதர் வளர்ந்து மூடிப்போயிருக்கும் இருப்பிடங்கள். இவைதான் அங்கும் காட்சிதருவதை ரகு காண்கின்றான். அவன் உள்ளமும் கனத்துக் குமுறுகிறது.

"இஸ்லாமிய மக்கள் மாத்திரமல்ல, தமிழ் மக்கள் மாத்திரமல்ல ஒட்டுமொத்த மூதூர் நகரமே இனத்துவேஷத்திற்கு இரையாகிப்போயிருக்கிறது ரகு!" கணேசன் மீண்டும் கூறினான்.

"சகோதர மொழிபேசும் இனத்தவர்களும் இங்கு எம்முடன் முன்பு அந்நியோன்னியமாக வாழ்ந்தார்களே! அவர்கள் இப்போதும் இங்கு இருக்கின்றார்களா?" ரகு வினாவினான்.

"குழப்பமான இச்சூழ்நிலையில் அவர்கள் இங்கு இருக்க விருப்பமில்லாமல் இடம்பெயர்ந்து போய்விட்டார்கள். ஆனால் வேறு யாரோ எல்லாம் இப்போது இங்கு அரசியல்வாதிகளின் சூழ்ச்சியால் குடியேறத் தொடங்கிவிட்டார்கள். அதற்கு உறுதுணையாக அதிகாரபீட இயந்திரமும் இருந்துவருகின்றது. தமிழ் மக்களினதும் இஸ்லாமிய மக்களினதும் வயல் நிலங்கள் சூறையாடப்பட்டுள்ளது. அப்பிரதேசங்களுக்குள் செல்ல முடியாது தடையும் விதிக்கப்பட்டுள்ளது." கணேசனும் தன் உள்ளக் குமுறலை வெளிப்படுத்தினான். முச்சக்கரச் சிற்றூந்து இப்போது ஓய்வுக்கு வர இருவரது சம்பாஷணையும் முடிவடைகிறது. குறித்த இடத்திற்கு வந்துவிட்டதை இருவரும் உணர்ந்து கொண்டனர்.

இருவரும் இறங்கிக் கொண்டு சிற்றூந்துக்கான பணத்தைக் கணேசன்

கொடுக்கச் சிற்றூந்தும் அவ்விடம் விட்டு நீங்குகிறது. சிறிய ஒழுங்கை ஒன்றினூடாக கணேசன் வழிகாட்ட ரகுவும் செல்கின்றான். விரைவில் இருவரும் கணேசனின் வீட்டையடைந் தனர். ரகு, கணேசனது வீட்டை கண் ணோட்டம் விட்டான். சீமெந்திக் கற்க ளால் கட்டப்பட்டு ஓடு வேய்ந்த அழ கான சிறிய வீடாக அது அவனுக் குத் தோன்றியது. இருப்பினும் வரும் போது காணப்பட்ட இடிந்து தகர்ந்து போன வீடுகள்மாதிரி அது இருக்க வில்லையென்பது ரகுவுக்குப் புலனா கின்றது.

கணேசன் கேற்றைத் திறந்து கொண்டு உள்நுழைய கேற் திறக் கும் சத்தத்தைக் கேட்டு அங்கிருந்த அவனது வீட்டு நாய் குரைத்துக் குரல்கொடுத்தவண்ணம் ஆக்ரோ ஷத்துடன் அவர்களை நோக்கி ஓடி வருகின்றது. ரகு பயத்துடன் கணே சனின் பின்னால் அவனுடன் ஒட்டிக் கொள்கின்றான். முன்னோக்கி ஓடி வந்த நாயும் கணேசனைக் கண்டதும் குரைப்பதை நிறுத்திச் சந்தோஷத் தைக் காட்டுவதுபோல வாலையும் ஆட்டி ஆட்டி ஒருவித சத்தத்தை ஒலித்தது. அத்துடன் கணேசன் மீது தனது முன் கால்களைத் தூக்கிப் பதித்தவண்ணம் அவன் கைகளை நக்கியது.

கணேசனும் அதன் அன்பை ஏற்றுக்கொள்வது போலவும் அதனை ஆசுவாசப்படுத்துவது போன்றும் அதன் பிடரிப் பகுதியைத் தடவிக்கொடுத் தான். அதுவும் அடங்கிக் கொண் டது. பயத்துடன் நின்ற ரகுவைக் கணேசனின் நண்பன் எனப் புரிந்து கொண்டதோ என்னவோ அவனை நோக்கியும் வாலை ஆட்டி வரவேற் றது. நாய் குரைக்கும் சத்தம் கேட்டு இரு பிள்ளைகளும் ஒரு பெண்ணும் வெளியே வந்தனர்.

பிள்ளைகளில் சிறியது, "அப்பா" எனச்சத்தமிட்டுக் கொண்டு ஓடிவந்து கணேசனைக் கட்டிப்பிடித்தது. கணேசனும் அதைச் சந்தோஷத்து டன் அணைத்து முத்தம் கொடுத்தான். மற்றைய இருவரும் கணேசனது மனைவியும் மூத்தபிள்ளையுமென ரகுவால் விளங்கிக்கொள்ள முடிந்தது.

வீட்டினுள் எல்லோரும் நுழைந்தனர்.

"சரஸ்வதி! இவன்தான் என் பால்ய நண்பன் ரகு. ஏற்கனவே இவ னைப்பற்றி உனக்குக் கூறியிருக்கின் றேன். ஞாபகமிருக்கிறதா?" கணே சன் ரகுவை அறிமுகம் செய்தான்.

"ஆமாங்க" என்று கூறியபடி ரகுவைப் பார்த்துப் புன்னகையுடன் வாருங்கள் என வரவேற்றாள் கணே சனின் மனைவி.

நாயும் இப்போது அவனைப் புரிந்துகொண்டதோ என்னவோ வாலாட்டியபடி ரகுவை வலம் வந்தது. ரகுவும் அதன் பிடரியைத் தடவிக் கொடுக்க அது கீழே பணிந்துவிட்டுப் பின் வெளியே சென்றது.

அழகாக அமைந்த அவனது வீட்டு முன் மண்டபத்தில் கதிரை

யொன்றில் ரகு அமர்ந்தான். அந்த வீட்டு நிலையையும், அவர்களிடமிருந்த குடும்பப் பிணைப்பையும், பாசத்தையும் நினைத்து அவன் மனம் தவித்தது. இப்படியான பிறந்த மண்ணில் கிடைக்கும் பாசப்பிணைப்பையும், வாழ்க்கையையும் இழந்து தனிமரமாகி நிற்கின்றேனே என்றொரு உணர்வு அவனுள் எழுந்து உள்ளத்தை வருத்தியது.

"ரகு! என்ன அமர்ந்துவிட்டாய் வா இதுதான் உனக்குரிய அறை" என்று கூறியபடி ரகுவைக் கூட்டிச் சென்றான் கணேசன்.

"இங்கு கிணற்றில்தான் குளிக்கவேண்டும். பழக்கம் இருக்குமோ தெரியாது நண்பா!" கணேசன் கூறினான்.

"கணேசா நாங்கள் என்ன சீமையில் பிறந்தவர்களா? இந்த மண்ணில்தானே நானும் பிறந்தேன். சிறிய வயதில் ஆற்றில் குளிப்பதும், கிணற்றில் வீழ்ந்து நீந்தி எழுவதும் தரும் சுகத்திற்குக் குளியலறைச் சுகம் ஈடாகுமா? இந்தச் சுகம் எங்கு சென்றாலும் வருமா நண்பா? ரகு தன் பழைய நினைவுகளை மீட்டபடி பதிலளித்தான்.

"சரி! பிரயாணக் களைப்புத் தீரக் குளிப்போம். வயலுக்கு நீர்பாய்ச்சும் இயந்திரம் இருக்கிறது. அதை இயக்கிவிட்டால் நன்றாக நீர் வரும். அதில் நன்றாகக் குளிக்கலாம் நண்பா! சரி! ஆயத்தமாகு. குளிக்கச் செல்வோம்" கூறியபடி கணேசன் அறையை விட்டு வெளியேறினான்.

ரகு தனக்காக ஒதுக்கப்பட்டுள்ள அறையை நோட்டமிட்டான். அழகான கட்டிலில் மெத்தை விரிப்புக் கிடந்தது. அறை தூய்மையாகவும் வேறு எப்பொருட்களைக் கொண்டிராமலும் காட்சியளித்தது. ஒரு மேசை இரு கதிரைகள் போடப்பட்டு இருந்தன. அறையில் மின்சார விசிறி ஒன்று தொங்கிக் கொண்டிருந்தது. நோட்டமிட்டபடி தனது உடைகளைக் களைந்து, உடைகளைத் தொங்கவிடுவதற்காக அங்கு வைக்கப்பட்டிருந்த தாங்கியில் கொழுவினான். சாரம், சேட், துவாய், பற்பசை, பற்தூரிகை என்பவற்றை எடுத்துக்கொண்டான்.

கணேசனும் வர இருவரும் வீட்டிற்கு வெளிப்புறமாக அமைந்த கிணற்றை நோக்கி இருவரும் சென்றனர். கணேசன் இடுப்பில் துவாயைக் கட்டிக்கொண்டு நீர் இறைக்கும் இயந்திரத்தை இயக்கினான். அங்குள்ள தொட்டியில் நீர் பாய்ந்து நிரப்பத் தொடங்கியது.

தொட்டியிலுள்ள நீரைக் கணேசன் சிறிய வாளி ஒன்றால் அள்ளி அள்ளித் தலையில் ஊற்றினான். இதனைப் பார்த்தபடி ரகுவும் தன் பற்களை விளக்கினான். கணேசன் நீராடி முடிந்ததும் அவ்விதமே ரகுவும் நீராடினான்.

"கணேசா! இந்தக் கிணற்று நீர் உடலில் விழும்போது கிடைக்கும் சுகம் இருக்கிறதே! அதைச் சொல்லி அளவிடமுடியாது. எத்தனை வருடங்களின் பின் என் மண்ணின் ஊற்றுநீர் என்னுடலுடன் சங்கமிக்கின்றது. இந்தச் சுகத்தின் அருமையை யார்தான் புரியப்போகிறார்கள்" தன் உள்ளத்து உணர்வுகளைக் கொட்டினான் ரகு!.

**(தொடரும்...)**

**மலையகத்தின் மூத்த படைப்பாளியும் அண்மையில் (11.04.2009) அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற அவுஸ்திரேலிய தமிழ் இலக்கிய கலைச் சங்கத்தின் ஒன்பதாவது எழுத்தாளர் விழாவில் கலந்துகொண்டு தனது பவள விழாவையொட்டிய பாராட்டு விருதும் பெற்றுத் திரும்பியுள்ள தெளிவத்தை ஜோசப் அவர்களின் 'மலையகத்தில் சிறுகதை வரலாறும் வளர்ச்சியும்' எனும் தொடர் கட்டுரை.**



# மலையகத்தில் சிறுகதை வரலாறும் வளர்ச்சியும்

(சென்றமாதத் தொடர்ச்சி....) - (4)

**தெளிவத்தை ஜோசப்**

இந்தக் கதை பேப்பரில் வந்தபோது "முருகா... முருகா" என்றே அச்சாகியிருந்தது. அந்த வரியின் ஜீவனையே கொன்றுவிட்டது இந்தச் சொல் மாற்றம். "என் கழுத்தை நசுக்கித் திருகியதுபோல் இருந்தது" என்றார் ராமையா என்னிடம். மலையகத்தின் தனித்துவமான சொற்கள் பல இப்படித்தான் சிதைக்கப்பட்டன.

சிறுகதையின் வளர்ச்சி ஆரம்பத்திலிருந்தே பத்திரிகையின் வளர்ச்சியுடன் நெருங்கிய தொடர்புடையதாகவே இருந்திருக்கிறது. படைப்பின் நோக்கம் எதுவாயிருந்தாலும் பத்திரிகையின் நோக்கம் விற்பனைதான். ஆகவே, வாசகர்களைக் கவர்வதும் பத்திரிகைகளின் நோக்கங்களில் ஒன்று. இந்தக் கவர்தலுக்காக வெளியாகும் கதைகளுக்கு ஓவியம் வரைவதும் ஒரு தவிர்க்கமுடியாத அம்சமாகிவிட்டது. வெளியீட்டாளர்களின் இந்த அழகுபடுத்தல் கதாசிரியனுக்கும் ஒரு வெற்றியைத் தருகின்றது.

ஒரு எழுத்தாளனின் முதல் வெற்றி அவனுடைய படைப்பு அச்சேறுவது. அடுத்த வெற்றி அச்சேறியதை எத்தனைபேர் வாசித்தார்கள் என்பது. ஆகவே, ஒரு சிறுகதையின் வெற்றி அதற்காகப் போடப்படும் சித்திரத்திலும் இருக்கிறது.

வீரகேசரி, தினகரன், சிந்தாமணி ஆகிய பத்திரிகைகளில் வந்த சிறுகதைகளுக்கும் படங்கள் போடப்பட்டனதான். என்றாலும், மலையகத்துக்கே உரித்தான தனித்துவங்களுடன் ஓவியங்கள் வெளிவருவதில்லை. மலையகம் அந்த அளவுக்கு அன்னியப்பட்டுப்போய் — தனிமைப்படுத்தப்பட்டுப்போய் இருந்திருக்கிறது.

தெளிவத்தை ஜோசப்பின் **'காட்டுப்பூ'** என்னும் கதை **'தேனருவி'**யில் வந்தது. தேயிலைக் காட்டிலே பூத்த ஒரு அழகான பெண்ணைப்பற்றியது இச் சிறுகதை. அழகே உருவான அவள் கூடையுடன் நடந்தாள் என்பதற்குத்தான் ஓவியம் வரைந்திருந்தார்கள். அழகான பெண்ணோவியம். ஆனால், கூடை இருந்தது முழங்கை மடிப்பின் பிடிக்குள் – பெண்ணின் இடுப்பில்.

'முருகம்' முருகாவானது அச்சுப்பிழை என்று சமாளிக்கலாம்! ஆனால் இதை.... எப்படிச் சமாளிப்பது! நூற்றாண்டு காலமாக லயத்தின் இருட்டறைக்குள் பூட்டிச் சிறைவைக்கப்பட்டது போல் மற்றவர்களுக்கு எட்டாமல் இருந்த இம்மக்களை மற்றவர்கள் மத்தியில் கொண்டு வந்ததும், புரியாமல் இருந்த இவர்களுடைய வாழ்க்கையைப் புரியவைத்ததும் மலையகச் சிறுகதைகளே.

இன்று நிலமை எவ்வளவு மாறி இருக்கிறது!

மொழியின் ஜீவன் அதைப்பேசும் மக்களின் வழக்கிலேயே இருக்கிறது. மலையகத்தின் பேச்சு மொழி அதன் ஜீவிதம் குன்றாமல் மலையகக் கதைகளில் உபயோகிக்கப்பட்டிருக்கும் விதம் வியப்புக்குரியது. கொச்சையானது என்றோ தீண்டத்தகாதவர்கள் என்று மற்றவர்களால் கருதப்பட்ட ஒருதாழ்ந்த மக்கள் கூட்டத்தின் வழங்குமொழி என்றோ, அப்படியே எழுதினால் மற்றவர்களுக்குப் புரியுமா என்று மயங்காமல், அலட்டிக்கொள்ளாமல், அவ்வார்த்தைகளை நவீனத் துவப்படுத்த முனையாமல் அப்படியே எழுதி எழுதி அந்த மொழியின் வளத்துக்கு நீர் வார்த்ததை மட்டுமன்றி மற்றவர்களையும் அதனுடன் பரிச்சயம் பட்டுக்கொள்ளச் செய்தமையையும் எப்படி வியக்காமல் இருக்கமுடியும்.

மலையகத்துத் தோட்டங்களைத் தவிர்த்து வேறு எங்குமே உபயோகிக் கப்படாத, சொல்விளங்காத, பொருள்புரியாத எத்தனையோ சொற்கள் இருக்கின்றன.

நூறாண்டு காலமாக தாங்கள் வாழும் இடங்களை தோட்ட மக்கள் 'லயம்' என்றே அழைக்கின்றனர். லயத்தின் அறைகளை 'லயக்காம்பிறா' என்று அழைக்கின்றனர். இந்தச் சொல் எப்படிப்பிறந்தது, அதன் பொருள் என்ன, எதை அடிப்படையாக வைத்து இது வழக்கிற்கு வந்தது என்பதெல்லாம் அவர்களுக்கு ஒரு பிரச்சினையே அல்ல. 'லயம்' என்றால் லயம்தான். ஒருசிலர் 'லயன்' என்றும் 'லைன்' என்றும் 'லாயம்' என்றும் 'லயக்காம்பிறா' என்பதை 'லைன்ரூம்' என்றும் எழுதும் போது அங்கே மலையகம் தெரிவதில்லை. ஒரு அன்னியமே தெரிகின்றது.

அதேபோல் கவ்வாத்து, கொந்தரப்பு, குட்டிச்சாக்கு, பெரட்டுக்களம், பிட்னி, பொட்டணி, அட்டால், மொய், அலுப்புனாத்தி, கிராதி, வாங்கி, பிள்ளை மடுவம்,

பீலி என்று இன்னும் எத்தனையோ இப்பிரதேசத்துக்கே உரிய தனித்துவமான சொற்கள் இருக்கின்றன. மலையகப் படைப்பாளிகள் தங்கள் சிறுகதைகளில் இச்சொற்களை அப்படியே அதன் ஒலி குன்றாமல் ஜீவன் சிதையாமல் எழுதி இடம்பெறச் செய்து அவற்றின் கௌரவத்தை நிலைநாட்டியுள்ளனர்.

எழுத்து மொழியிலும் பேச்சு மொழியிலும் மலையகம் தனக்கே உரிய விஷேட பண்புகளைக் கொண்டுள்ளமையை மலையகச் சிறுகதைகள் உணர்த்தி நிற்கின்றன. சன்னல் என்பதை ஒரு மலையக எழுத்தாளன் யன்னல் என்று எழுதுவதில்லை. பொதுவான சில சொற்களையும் கூட இந்த மக்கள் எப்படிப் பாவிக்கின்றார்களோ அப்படியேதான் எழுத்தில் தருகின்றார்கள். ஆபீஸ் என்பதை ஒப்பீஸ் என்றோ டக்டர் அல்லது டக்டரய்யா என்பதை டாக்டர் என்றோ டொக்டர் என்றோ எழுதுவதில்லை.

பீலி, மொய், லயம், கவ்வாத்து, பிள்ளை மடுவம் போன்ற சொற்கள் கதைகளில் மட்டுமன்றி கதைத் தலைப்பாகவும் இடம்பெற்றுள்ளமை போற்றத்தக்கது.

| | | |
|---|---|---|
| **பீலி மேலே போகிறது** | – தெளிவத்தை ஜோசப் | |
| **மொய்க்காசு** | – கே.கோவிந்தராஜ் | |
| **லயத்துப்பயல்** | – மாத்தளை சோமு | |
| **பிள்ளை மடுவத்திலே** | – பூரணி | |
| **கவ்வாத்து** | – நூரளை சண்முகநாதன் | – (சிறுகதை) |
| | தி.ஞானசேகரன் | (நாவல்) |

தமிழ்ச் சிறுகதையின் தோற்றத்துக்கான முதற்காரணமே பிரசாரம்தான் என்கின்றார் தமிழ்ச்சிறுகதை வரலாறு எழுதிய எம்.வேதசகாயகுமார். பாரதியும், வ.வே.சு.ஐயரும், மாதவய்யாவும் கவிதையிலும், உரைநடையிலும், நாவலிலும் பிரச்சாரம் செய்து பார்த்துவிட்டனர். நாவல் எழுதவும் வாசிக்கவும் நீண்டகாலம் தேவை. கரடுமுரடான ஒரு அதிசயப் பொருளாக கவிதை ஒதுக்கப்பட்ட ஒன்று. பாரதி எத்தனைதான் கவிதையை எளிமைப்படுத்திக் கொடுத்தாலும் கவிதை என்றதுமே வாசிப்பவர்களைவிட 'ஐயோ பாட்டா' என்று ஒதுங்குகிறவர்களே அதிகம். ஆகவே, நீண்ட நெடுந்துயிலில் இருந்துவிட்ட தமிழ்ச்சமுதாயத்தைத் தட்டி எழுப்பவும் அரசியலில் விழிப்புணர்வை ஏற்படுத்தவும், தங்களுடைய கலாசாரம், நாகரிகம் என்பன பற்றிய சுயசிந்தனையை உருவாக்கவும் ஒரு பிரசாரக் கருவியாகவே கவிதைக்கும் நாவலுக்கும் பின் தமிழில் சிறுகதை தோன்றியது என்கிறார் அவர்.

அறுபதுக்குப் பின் எழுந்த மலையகச் சிறுகதைகளும் இவைகளை மையக்கருத்தாகக் கொண்டே பிறந்தன. இப்படி சமூக, அரசியல், பொருளாதார, கலாசார, நாகரீக சிந்தனை ஏதுமின்றி உழைக்கவும் மடியவுமே பிறந்தவர்கள் நாங்கள் என்று நூறாண்டு காலமாகத் தாழ்ந்தே கிடந்துவிட்ட இம்மக்கள் கூட்டத்தை விழிப்படையச் செய்ய வேண்டும் என்பதையே பிரதான நோக்கமாகக் கொண்டெழுந்தவைகளே மலையகச் சிறுகதைகள். போதனை செய்யும் பண்பினைக் கொண்டதாகவே இவைகள் இருக்கவேண்டியது அவசியமாயிற்று. பிரசாரத்தையே நோக்கமாகக் கொண்டு பிரசாரம் செய்வதற்காகவே எழுதத்தொடங்கினாலும் ஒரு தொழிற்சங்கப் பிரசாரகன் போலவோ, அரசியல் கட்சிப் பிரசாரகன்போலவோ அந்தப் பிரசாரத்திற்கு அடிமைப்பட்டு கை கட்டி நின்றுவிடவில்லை மலையகப் படைப் பாளிகள். இலக்கை நோக்கி ஓடும் பந்தயக் குதிரைகள்போல் கண்களுக்குப் பட்டைகட்டிக்கொண்டு ஓடவில்லை. நல்லவை, அல்லவை, அன்பு, கொடுமை, சாதகமானவை, பாதகமானவை என்று சகலத்திலும் தங்களது பார்வைகளைப் பதித்தார்கள். சோகம் நிறைந்த இம்மக்களின் வாழ்விலும் வாழத்துடிக்கும் ஒரு மனிதத்துவத்தைத் தேடினார்கள், காட்டினார்கள். அழுதுவடியும் கதைகள் இவைகள் என்றார்கள் மலையகக் கதைகளை. சகலவிதமான சுரண்டல்களுக்கும் அடிமைத்தனங்களுக்கும் உட்படுத்தப்பட்ட மக்களின் வாழ்க்கையைச் சித்திரிக்கும் சிறுகதைகள் வாசிப்போரை அழுதுவடியத்தான் செய்யும் – செய்யவேண்டும்.

அந்த அழுகையிலும் ஒரு ஆத்திரம், அந்த சோகத்திலும் ஒரு கோபம் முறுக்கிய நரம்பிலிருந்து முண்டிவரும் இசையாய் மிதந்து வருவதை உணராமல் இருக்க முடிகிறதா? சமூகத்தில் மனிதனின் பற்றையும் பாசத்தையும் தோற்றுவித்து அவனை ஒரு ஆக்கபூர்வமான செயற்பாட்டுக்கு இட்டுச்செல்லும் சோகம் இது.

சமூகச் சீர்கேடுகளின் கொடுமைகளை உள்ளத்தில் தைப்பதைப் போல் சொல்வதன்மூலம் அவைகளுக்கெதிரான ஒரு சிந்தனையை உருவாக்கும் முயற்சியில் முன்நின்றவை மலையகச் சிறுகதைகள். கையில் கொடியுடன் நடக்கும் கட்சி அரசியலின் கோஷங்கள் – சுலோகங்கள் இப்படைப்புக்களில் இல்லை என்பதுதான் உண்மை.

1930 ஆகஸ்டில் ஆரம்பமான வீரகேசரியின் முதல் ஆசிரியர் பெரி சுப்பிரமணியம் செட்டியார். அவரைத் தொடர்ந்து ஆசிரியர் பதவியில் அமர்ந்தவர் எச்.நெல்லையா. நடேசய்யரின் தேசபக்தனில் உதவி ஆசிரியராக இருந்தவர். வீரகேசரிக்கு மலையக மக்கள்பால் ஒரு மென்மை இருந்தது ஆச்சர்யமான விஷயம் அல்ல. தோட்ட வட்டாரம் என்று ஆரம்பித்து அதைத் தோட்ட மஞ்சரியாக்கி இன்று குறிஞ்சிப்பரலாக ஒலித்துக்கொண்டிருக்கிறது. **(தொடரும்)**




“மே எண்ட..” அந்த ஆமிக்காரன் அழைத்தான். ஆறுமுகம் தன்னைச் சுதாகரித்துக்கொண்டான். அம்மாவைப் பார்த்தான். அரிக்கன் லாம்பு வெளிச்சத்தில் அவள் குந்தியிருப்பது தெரிந்தது. ஆமிக்காரனின் பின்னால் சென்றான். அவன் அறையினுள் சென்று சலூற் அடித்தான். சிங்களத்தில் முறைப்பாட்டை முழக்கினான். இவர்கள் பெரியவர் என அழைத்தவர் நடுத்தர வயதுடைய ஒரு கொமாண்டர். தன்னைவிடவும் வயதில் குறைந்தவனாக இருந்தான். கொமாண்டர் சீருடையில் இல்லை. நீண்ட காலச்சட்டையும், ‘ரீ’ சேட்டும் அணிந்திருந்தான். ஆனால் அந்த மிடுக்கும் அகங்காரமும் அவனிடம் இருந்தது.

“சிங்கள தன்னவாத.. சிங்களம் தெரியுமா.. கொகே இந்தளா ஆவே.. என்ன பேர்? கொமாண்டர் ஒரு கிண்டலோடு தொடங்கினான். ஆறுமுகத்திற்குச் சிங்களம் ஓரளவு தெரியும். ஆனால் “சிங்களம் தெரியாது. பேர் ஆறுமுகம்” என்றான். “என்ன கொட்டியாத? எங்கிருந்து வந்தது? சொல்லு?” கொமாண்டர் சத்தமிட்டான்.

“வவுனியாவிலிருந்து வந்தனான்” பதிலளித்தான். மே மாத்தயோ...ஓங்கட இஸ்டத்துக்கு இஞ்ச வரேலாது. எங்கட சட்டத்துக்குத்தான்.. நடக்கவேணும்.. தேருணாத.. தெரியுமா?” ஆணவத்தோடு கொட்டினான். ஆறுமுகத்துக்கு அடக்க முடியாத கோபம் பொத்துக் கொண்டு வந்தது. ஆனாலும் பொறுமை காத்தான். “ஏன் இஞ்ச வந்தது..? வேவு பாக்கவா..சொல்லு?” கொமாண்டர் அதட்டலோடு கேட்டான். இனியும் பொறுத்தால் இவன் கதையைச் சோடிச்சிப் போடுவான். “ஹலோ சேர்.. லுக்..” ஆங்கிலத்தில் தொடங்கினான். “இஞ்ச என்ன இருக்கு வேவுபார்க்க? நானும் இந்த நாட்டில்தான் பிறந்தவன். இது என்ர சொந்த ஊர். இந்த மண்ணிலதான் பிறந்து வளர்ந்தனான். என்ர அம்மாவப் பார்க்க வந்தனான். என்னை வரேலாது என்று சொல்வதற்கு நீங்க யார்? என்ர சொந்த ஊருக்கு வாறதற்கு ஏன் உங்களிட்ட அனுமதி கேட்கவேணும்? நாங்க என்ன உங்கட அடிமைகளா? இது என்ன அடிமை வாழ்க்கையா? ஆத்திரத்தைக் கேள்வியாகத் தொடுத்தான்.

“மிஸ்ரர்.. கதைக்கிறதக் கவனமாகக் கதைக்கவேணும். நான் நினைத்தால் உன்ன லொக்கப்பில போடுவன். றிமாண்ட் பண்ணுவன். கனக்கக் கதையாத தேருணாத? கோபத்தோடு கொமாண்டர் சொன்னான். ஆறுமுகம் விஸ்வரூபத்தில் நின்றான். அவனது உள்ளம் பொங்கியது. “நானும் உங்களப்போல அரசாங்க உயர் பதவியில் இருக்கிறன். ஐ ஆம் த டிபியுட்டி டிரக்டர் ஒப் எடியுகேசன். உங்களுக்குத் தெரிந்த சட்டங்கள் எனக்குந் தெரியும். நீங்களும் இந்த நாட்டில்தான் பிறந்தீங்க. நானும் இந்த நாட்டில்தான் பிறந்தனான். என்ன வித்தியாசம், நீங்க சிங்களவர். பெரும்பான்மையாக இருக்கிறீர்கள். நாங்கள் தமிழர் சிறுபான்மையாக (60ம் பக்கம் பார்க்க...)

# சொல்வளம் பெருக்குவோம் (5)

— பன்மொழிப்புலவர் த.கனகரத்தினம் —

சொல்லும், பொருளும் பற்றிச் சிந்திப்போம். ஒரு சொல்லின் பொருள் நிலையாக அமையவேண்டும் என்ற நியதி இல்லை. ஒரு சொல்லின் தொடக்க காலப்பொருளே இன்றுவரை வழங்கவேண்டும் என்னும் நிலையும் எந்த மொழியிலும் இல்லை. ஒரு சொல்லின் பொருள் தொடக்கத்தில் ஒன்றாக இருந்திருக்கும். இன்று வேறொன்றாக இருக்கும்.

**பொன்** என்ற சொல்லை எடுத்துக் கொள்ளுங்கள். தொடக்கத்தில் இது உலோகம் என்னும் பொருளைக் குறிப்பதாக இருந்தது. இரும்பு, செம்பு, வெள்ளி முதலியனவும் பொன் என்றே குறிக்கப்பட்டன. ஐம்பொன் தாலி என்ற வழக்கு இதனை விளக்கும். ஆனால் இன்று **பொன்** என்றால் உலோகங்களில் உயர்ந்த ஒன்றை மட்டுமே குறிக்கின்றது.

நெய் என்ற சொல்லும் தொடக்கத்தில் நீர்ப்பொருளுமல்லாமல் கடினப் பொருளுமல்லாமல் பசையானவற்றைக் குறிக்க வழங்கியது. இன்று தயிரிலிருந்து எடுபடும் நெய்யை மட்டும் குறிக்க வழங்குகிறது. ஆதலாற்றான், சொல் முதலில் உணர்த்திய பொருள் வேறாகவும் இன்று உணர்த்தும் பொருள் வேறாகவும் இருத்தல் இயல்பே.

சொல்லின் தொடக்கப் பொருளை ஆராய்தல் எளிதன்று. சில சொற்களின் தொடக்கப்பொருள். விளங்காமல் நிற்கும். உதாரணமாக **இல், முன், வழி, தலை** முதலிய சொற்களின் தொடக்கப் பொருளைக் கூற முடியுமா? முடியாது. மற்றச் சொற்களின் தொடக்கப்பொருள்கள் இன்ன என்று ஒருவாறு அறியலாம். இதுதான் சொற்பிறப்பு ஆராய்ச்சி. (Etymology) நல்லூர் பிதா ஞானப்பிரகாச சுவாமிகள் இத்துறையில் உழைத்து வந்தார். **தோசை என்பதன் பொருள் தோ+சை.** இரண்டு பக்கமும் சுடப்படும்போது 'சை' என்ற ஓசை எழும். 'தோ' என்பது இரண்டு என்பதைக் குறிக்கும். Biscuits என்பதில் Bi என்பது இரண்டு பக்கம் என்பதைக் குறிப்பது போலாம்.

இவரது ஆராய்ச்சியைப் பின்பற்றி நம்நாட்டு ஹ.சி.தாவீது அடிகளாரும் உழைத்தார்கள். **சொற்பிறப்பு ஆராய்ச்சி பயனற்றது** என்பது இன்றைய மொழிநூலார் கருத்தாகும். இன்று அறிஞருலகம் சொற்பொருள் ஆராய்ச்சி (Sentences)யில் தான் கவனம் செலுத்துகின்றது.

சொற்பொருள் ஆராயும் பொது சொல் உணர்த்தும் பொருள் எவ்வெவ் வாறு வேறுபட்டுச் செல்கின்றது என்று காணல் வேண்டும்.

**தஞ்சைவாணன் கோவை** என்றே இலக்கிய நூலின் பெயர் வழங்கும். 'கோவையுலா அந்தாதிக்கு ஒட்டக்கூத்தன்' என்பது பாடல் ஒன்றின் அடி. **திறப்புக்கோவை** என்றே திறப்புகளின் கூட்டத்தை வழங்கல் வேண்டும். File என்ற ஆங்கிலச் சொல்லுக்கும் கோவை என வழங்கலாம். சமாதானத்திற்கெனினும் கைகோப்போம் என்றே வழங்கல் வேண்டும்.

கைகோர்த்தல் என்பது பிழை. **கைகோத்தல், கைகோப்போம்** என்றே சரியாக வழங்கவேண்டும். 'அத்வல்' என்ற சிங்களத்தொடரை மொழி பெயர்த்தவர்கள் கைகோர்த்தல் என்று பிழையாகப் பாடி மகிழ்ந்தார்கள். இது ஏன் பிழையென்பதைச் சிறிது சிந்திப்போம். கோர்த்தல் என்பதன் பகுதி 'கோர்' என அமையும். கோர் என்றால் கோருதல் என்பது பொருளாகும். எனவே, சமாதானத்திற்கு கை கோர்ப்போம் என்றால் சமா தானத்திற்கு கைகோருவோம் என்றாகும்.

இனி ஊசியில் நூலைக் **கோத்தலா** கோர்த்தலா சரி என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்.

ஊசியில் நூலைக் **கோத்தல்** (ஊசியில் நூலைக் கோ) என்பதுவே சரி. கோர்த்தல் எனக் கூறுவதோ கோர் எனக் கூறுவதோ பிழை.

செய்தி வாசித்தல் என்பதனைச் சேதி வாசித்தல் என்று குறிப்பிடுவது பிழை. (சேதி எனின் அரிதல், அழித்தல் என்ற பொருள் தரும்) **என்ன செய்தி?** எனவே வினவுதல் வேண்டும். என்ன சேதி என்பது பிழையான வழக்கு.

செய்தி என்பதன் பகுதி **செய்.** அதன் விகுதி **'தி' செய்** என்பது நிகழ்வைக் குறிக்கும். எனவே, நிகழ்வனவற்றைச் செய்தி என்று வழங்குவதே சரி. செய்தி, செய்தித்தாள், செய்தி மஞ்சரி எனவே வழங்கும். (சிட்டுக்குருவி சிட்டுக்குருவி சேதி தெரியுமா? எனத் திரைப்படப் பாடலில் சேதி இடம் பெற்றுள்ளது.)

நாடக ஒத்திகையா? நாடக ஒத்திக்கையா சரியான வழக்கு என ஆராயுமிடத்து ஒத்திக்கை என்பதே சரி. கலை நிகழ்ச்சிகளை மேடையேற்றுவதற்கு முன் சரி பிழை பார்த்துத் திருத்தும் நிகழ்ச்சி ஒத்திக்கையாகும். கலாசாரமா கலாச்சாரமா சரி என ஆராயின் கலாசாரம் என்பதே சரி. இது பண்பாட்டைக் குறிக்கும்.

கலா + ஆசாரம் என்ற இரு வடமொழிச் சொற்கள் புணரும்போது 'ச்' மிகாது. கலாசாரம் என்றே அமையும். (கலா என்பது கலைகளைக் குறிக்கும். ஆசாரம் - ஒழுக்கம் என்பதைக் குறிக்கும்) சிலா + ஆசனம் = சிலாசனம், கலா + பவனம் = கலாபவனம் என்பவற்றையும் கவனத்திற் கொள்க. கலாசார அமைச்சு கலாசார நிகழ்ச்சிகள் என்றே வழங்குதல் வேண்டும்.

அருகாமை என்ற சொல்லும் பிழையான முறையில் உபயோகிக்கப்பட்டு வருவதை நாம் அவதானிக்கலாம். அருகாமை என்பதன் பொருள் அண் மித்துச் செல்லாமை - கிட்டிச் செல்லாமை என்பதாகும். இதனை அண்மையில் (பக்கத்தில்) என்ற பொருளில் உபயோகிக்கும்போது **அருகில்** என்றே உபயோகித்தல் வேண்டும். கொழும்புத் தமிழ்ச்சங்கம் சைவமங் கையர் கழகத்துக்கு அருகாமையில் இருக்கிறது என்று உபயோகிப்பது பிழை. **அருகில் இருக்கிறது** என்று எழுதுவதே சரியான வாக்கியமாகும்.

**'எழுதினவன் ஏட்டைக் கெடுத்தான்.**
**பாடினவன் பாட்டைக் கெடுத்தான்'** என்ற நிலை வளரவிடாது தமிழ் காப்போமா?

**(57ம் பக்கத் தொடர்ச்சி...)**

*இருக்கிறம். பெரும்பான்மை என்ற அகங்காரம் உங்களப் பிடித்திருக்கு. யாரும் 'இது நமது நாடு' என்று உணரவில்லை.*

இந்த அடிமை வாழ்க்கை இனியும் வேண்டாம். அரசாங்க உத்தியோகஸ் தர்கள் அரசியல்வாதிகளின் கைப்பொம்மைகளாக இருக்குமட்டும் பொதுமக்கள் அடிமைவாழ்க்கையை அனுபவிக்கத்தான் வேணும். நாங்க பொதுமக்களின் ஊழி யர்கள். இதை உணரவேண்டும். அவர்களுக்குப் பாதுகாப்பாக இருக்கவேணும். நான் 'டிபன்ஸ் மினிஸ்றி' யுடன் தொடர்பு கொண்டு கேக்கிறன். எனக்கும் சில கடமைகள் உண்டு. இந்த நாட்டின் சட்டதிட்டங்களுக்கு மதிப்புக்கொடுக்கவேணும். அந்தச் சட்ட திட்டங்கள் மக்களுக்கு நன்மையைக் கொடுக்க வேண்டும். நான் இங்கு வந்ததைச் சொல்லவேணும் என்பது எனக்குத் தெரியும். அதற்கு நேரம் காலம் இருக்கு. நான் தீவிரவாதியில்லை. அரசாங்க உயரதிகாரி. அதை நீங்க உணரவேண்டும். ஒரு கடமைக்கு உங்களிடம் சொல்லவேண்டும்தான். அதனைக் காலையில் செய்ய லாம் என்றுதான் இருந்தன். இப்போ இரவு பதினொரு மணி. இதுவரை வயதுபோன அம்மா சாப்பிடாமல் வெளியில, ரோட்டில குந்தியிருக்கிறா. இதுதானா நாங்க, நீங்க அரசாங்க உத்தியோகத்தர்கள் செய்யும் கடமை?. நான் யார் என்பதும், எதற்கு வந்தேன் என்பதும் உங்களுக்குத் தெரியும். நீங்க செய்யிறதச் செய்யுங்க" ஆறுமுகம் தக்க பதிலைக் கொடுத்தான். கொமாண்டர் சற்றுத் தடுமாறினான். அவனது முகத் தில் அறிவுபூர்வமான ரேகைகள் படர்வதை அவன் அவதானிக்கத் தவறவில்லை. ஆறுமுகம் விறுவிறு என்று அம்மாவை நோக்கி நடந்தான். ஞானம்பெற்ற புத்தராக கொமாண்டர் அவனையே பார்த்தவாறு நின்றான்.

**முற்றும்**

என்னடாப்பா செல்லத்தம்பி, இந்தக் கருக்கலுக்க முகம் தலையெல்லாத்தையும் துவாயால மூடித்து எங்க போறா? கண் வருத்தம் கிண்வருத்தம் போல....?

ஒரு வருத்தமும் இல்லையா? அப்பேன் முகத்த மூடியிருக்கா? என்ன? சதுர்தியில புற பாக்கப் போடதாமெண்டு சொல்லுகிறாங்களா? இதார்ரா இவன்!

# விளாசல் வீரக்குட்டி



அதுக்காக ஏன் முகத்த மூடவேணும். வானத்த அண்ணாந்து பாக்காமப் போறதானே!

வானத்தப் பாக்கப் போடாண்டு நினைச்சாலும் நம்மளயுமறியாம நம்மட கண்மண்ணாங்கட்டி புறயத்தான மச்சான் பாக்குது. போன வருசமும் ஆவணி மாதச் சதுர்த்திப் புறயப் பாத்ததால தானே ஊட்டில ஒரே கோதாரியும், குழப்படிகளும் வந்து இன்னமும் தீர்ந்தபாடாக் காணல்லெண்டு நீ சொல்லுறா!


அடே செல்லத்தம்பி! நீ சதுர்த்திப்புற பாத்த தாலதானா உனக்கிந்த துன்பதுயரமெல்லாம் வந்த? இதெல்லாத்தையும் மத்தவங்களப்போல நீயும் நம்புறயா மச்சான்? இதெல்லாம் பச்சப் பொய்டா.

நான் ஒருக்கா புத்தகமொண்டில் பாத்த ஞாபகம். என்னெண்டு தெரியுமா?

அந்த நாளையில இந்தப் பிராமணர்கள் தங்களவிட மத்தச் சனங்கள் எல்லாத்தாலயும் முன்னுக்கு வந்திடுவாங்க. அப்படி வர உடப்போடா! எண்டு போட்டுத்தான் சதுர்த்திப் புறையப் பாத்தாச் சனி புடிக்குமெண்டு புரளியக் கிளப்பிப்போட்டு, அவங்கெல்லாம் ஒருவருக்கும் தெரியாமக் கொல்லப்புறத்தில நிண்டு புறயப் பாத்தவங்களாம்.

உண்மையில சதுர்த்தி, ஆவணி ஞாயிறு எல்லாமே பிள்ளையாருக்குரிய சிறப்பான தினங்கள். இந்தத் தினங்களில் துவாயால முகத்த மூடிக்கொண்டு திரியலாமா மச்சான்? நமக்கு நல்லது வாறதும், கெட்டது வாறதும் நம்மட நடத்தைகளாலதானே தவிர இதுகளால இல்ல. நம்பினா நம்பு நம்பாட்டி உடு. நான் வரப்போறன்.

— விதுரன்




4 செங்கதிர்ச் சஞ்சிகைகள் ஒன்றாய்க் கிடைத்தன. மகிழ்ச்சி. உண்மையில் இவற்றின் காத்திர கனதித் தன்மை மிகவும் மெச்சக்கூடியதாயிருக்கிறது. என் சக விரிவுரையாளர் திரு.பொ.சத்தியநாதனும் இக்கருத்தை வலியுறுத்திக் கூறினார்.

எனக்குப் பிடித்த என்கதை வித்தியாசமான, இதுவரை எந்தச் சஞ்சிகையும் செய்யாத புதிய நல்ல முயற்சி. அதிலும் அந்த மூத்த எழுத்தாளர் தொடர்பான குறிப்புரையும் வளரும் இளம் எழுத்தாளர்களுக்கும், மாணவர்களுக்கும் மிகவும் பயன்படும் என்பது எனது நம்பிக்கை.

கவிவலன் எழுதும் ஒரு படைப்பாளனின் மனப்பதிவுகள் கவிதை தொடர்பாக ஆழமாக எழுதப்பட்டுக்கொண்டிருக்கிறது. வாசகர்களுக்கு அதிக பயன்தரும் முயற்சி இது.

அமைப்பில் கச்சிதமாக, அட்டைப்படத்தில் அதிக கவனஞ்செலுத்தி செங்கதிர் தொடர்ந்து வெளிவருவது ஆறுதலைத் தருகிறது. தொடரட்டும் உங்கள் பணி.

இலட்சியம் இல்லாமல் இலக்கியம் இல்லை என்பதற்கமைய இலட்சியத்தோடு இலக்கியத்திற்காக உழைக்கும் உங்கள் உழைப்பு வீண் போகாது. உலகமயமாதல் என்ற சுனாமியிலும் கோரமான அலையில் இலக்கியம், கலை, பண்பாடு என்பன ஆடிக் காற்றுக்கு அம்மியும் பறக்கும் என்பதுபோல் மொழி, மண், மதம், பிரதேசம் என்ற பற்றுக்களை உடைப்பதோடு பயனுள்ள இலக்கிய முயற்சிகளையும் அடித்துச் செல்லும் என்ற ஆதங்கம் எனக்கு ஏற்படுவதுண்டு. இருப்பினும் ஆர்வமுள்ளவர்கள் சலிக்காது, சளைக்காது உழைத்துக் கொண்டிருப்பதைப் பார்க்கும்போது எனக்கும் புது உத்வேகமும் நம்பிக்கையும் பிறக்கிறது. அதற்கு செங்கதிரின் பங்களிப்பும் ஒரு காரணம் எனக் கூறுகிறேன். நன்றி.

**ந.பார்த்திபன்**
**தேசிய கல்வியியல் கல்லூரி, வவுனியா.**

---

செங்கதிர சஞ்சிகையை தவறாது படிப்பவன் நான். கட்டுரைகள், கவிதைகள், சிறு கதைகள் என பலவிதமான அம்சங்கள் அதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இவற்றில் செங்கதிரோன் எழுதும் 'விளைச்சல்' குறுங்காவியம் மிகவும் விறுவிறுப்பாகவும், சுவாரசியமாகவும், சிருங்காரரசம் ததும்புவதாகவும் உள்ளது. இதை ஆசிரியர் தானே அனுபவித்து எழுதுவது படிக்கும்போது நன்கு தெரிகிறது. எவரும் அதை திரும்ப திரும்ப படித்து ரசிக்கக்கூடியவாறு எழுதப்பட்டுள்ளது. மிகவும் அழகான மரபுக் கவிதைகள் மூலம் கம்பீரமான தனது கவித்துவத்தை வெளிப்படுத்தியிருக்கிறார். அதுபோல் சிரிகதை, மிதுனன் எழுதும் விளாசல் வீரக்குட்டி என்பனவும்

படிக்கும்போது உள்ளத்தைத் தொடுபவைகளாக உள்ளன. மேலும், வாகரைவாணன், அலக்தர், கன்னிமுத்து வெல்லபதியான், என்.கே.தயாளகுணசீலன், நெடுந்தீவு மகேஷ், அக்கரைச் சக்தி, ஆரையூர்த் தாமரை, திசிவலிங்கம், கிதுரைராசசிங்கம், பதியத்தலாவ பாறூக், பொன் தவநாயகம், க.ஸ்ரீஸ்கந்தராசா, க.கோணேஸ்வரன், குறிஞ்சித்தென்னவன் ஆகியோரது மரபுக்கவிதைகள் யாவும் மிகவும் சிறப்பாக அமைந்துள்ளன. செங்கதிர் தொடர்ந்து வீச எனது வாழ்த்துக்கள்.

**கவிஞர் கா.சிவலிங்கம்**
இல.06, ஈஸ்வரன் ஒழுங்கை, மட்டக்களப்பு.

---

**■ செங்கதிரே வாழ்க நீடு!**

செங்கதிரே உன்னைப்போல் தரம்மிகுந்த
தகமை எழுத்தாளர்களை யார்தானிங்கே
எங்களுக்கும் இயற்றமிழின் ஆர்வலர்க்கும்
இன்றுவரை யாமறியச் செப்பி வைப்பார்?
பொங்கு தமிழ் உலகமெங்கும் உலா வருகும்
பொறுத்திருந்து பார்த்திடுவோம் தமிழர் சால்பை
மங்காத புகழ்பூத்துக் கதிரவன் போல்
மஞ்சு தவழ் செங்கதிரே வாழ்க நீடு!

'அதிதி பக்கம்' உன்னருமை செப்பி நிற்கும்
அழகு தவழ் பதிப்புகளும் செம்மையாகும்
இதிகாசம் பதி நவீனம் ஒன்றுமட்டும்
இல்லையெனும் குறையிருந்தும் இல்லை; அங்கே
அதி மதுரச்சுவை அந்தோ 'இளையோர் பக்கம்'
அது மட்டும்போதும் இளந்தளிர்களோங்க
பதிதவளும் மலரே செங்கதிரே எம்மண்
படி தவழ்ந்து பெற்ற பெரும் பேறு நீயே!

**என்.கே.தயாளகுணசீலன்** - கிரான்

---

■ செங்கதிர் இதழ் தொடர்ந்து கிடைக்கிறது. நன்றி. பல சிரமங்களுக்கு மத்தியில் கிழக்கிலங்கையிலிருந்து தொடர்ந்து சஞ்சிகை வருவது பிரமிப்பையும் மகிழ்வையும் தருகிறது. வாழ்த்துக்கள்.

**வெ.சக்திதரன்**
53, New Chetty Street, Kotahana, Colombo - 13.

---

■ செங்கதிர் மே-2009 வரையிலான 3 இதழ்கள் கைக்கெட்டின. நன்றி. சஞ்சிகை 2வது ஆண்டில் வீரியத்துடன் தொடர்வதையிட்டு மகிழ்ச்சி.

கடின உழைப்பு பயன்தரும். கிழக்கிலங்கையின் இலக்கியச் செழுமையை பதிவுசெய்வதில் செங்கதிர் கூடிய அக்கறை செலுத்துவதை அவதானிக்க முடிகின்றது. அதுவே தனித்துவமான பாதை. துணை ஆசிரியர் அன்பழகன் குரூஸ் அவர்களுக்கும் எனது வாழ்த்துக்கள். திருக்கோணமலை/மட்டக்களப்பு எழுத்தாளர்களின் நூல்கள் வெளியீடுகள் பற்றிய செய்திகளை நாம் அறிந்துகொள்ளவும் செங்கதிர் வழி அமைக்கும் என எதிர்பார்க்கின்றேன்.

**என்.செல்வராஜா**
தொகுப்பாசிரியர் - நூல்தேட்டம்
48, Halwicks Road, LUTON, Bedfordshire, LU2 9BH, UK.

## "செங்கதிர்" கட்டண விபரம் : (அஞ்சல் செலவு உட்பட)

| | இலங்கை | இந்தியா | வெளிநாடு |
|---|---|---|---|
| ஓராண்டுக் கட்டணம் | 750/- | 500/- | US $ 20 |
| ஆயுள் கட்டணம் | 10,000/- | 5000/- | US $ 100 |
| புரவலர் கட்டணம் | 25,000/- | 12,500/- | US $ 250 |

ஆயுள் கட்டணம் செலுத்துவோருக்கு வாழ்நாள் முழுவதும் "செங்கதிர்" வழங்கப்படும். புரவலர்களுக்கு வாழ்நாள் முழுவதும் "செங்கதிர்" வழங்கப் படுவதுடன் "செங்கதிர்" எதிர்காலத்தில் வெளியிடவுள்ள எல்லா நூல்களும் இலவசமாக வழங்கப்படும்.

## விளம்பரக் கட்டணம்

| | | | | |
|---|---|---|---|---|
| பின் அட்டை வெளிப்புறம் | முழு | 5000 | 1500 | US $ 50 |
| | அரை | 3000 | 1000 | US $ 30 |
| முன் அட்டை உட்புறம் | முழு | 3000 | 1000 | US $ 30 |
| | அரை | 2000 | 750 | US $ 20 |
| பின் அட்டை உட்புறம் | முழு | 2000 | 750 | US $ 20 |
| | அரை | 1500 | 500 | US $ 15 |

## அன்பளிப்பு

அன்பளிப்புச் செய்ய விரும்பும் நலன்விரும்பிகள் (உதவும் கரங்கள்) தாங்கள் விரும்பும் தொகையை ஆசிரியரிடம் வழங்கலாம்.

**வங்கி** : மக்கள் வங்கி (நகரக்கிளை), மட்டக்களப்பு.

**கணக்கு இல** : 113100138588996 (நடைமுறைக்கணக்கு)

**காசுக்கட்டளை** : அஞ்சல் அலுவலகம், மட்டக்களப்பு.

காசோலைகள் / காசுக்கட்டளைகளை த. கோபாலகிருஷ்ணன் என்று பெயரிடுக. அல்லது பணமாக ஆசிரியரிடம் நேரிலும் வழங்கலாம்.

**எழுத்தாளர்கள், கலைஞர்கள், ஊடகவியலாளர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன. அனுப்ப வேண்டிய முகவரி :**

**ஆசிரியர், 'செங்கதிர்'**

இல.19, மேல்மாடி வீதி, மட்டக்களப்பு.

# திருமண சேவை



**தங்கள் சளைக்காத தேடல் அமெரிக்கா, அவுஸ்ரேலியா, கனடா மணமக்கள்தானா?**
**வேல் அமுதனின் இன்றைய கையிருப்பு ஆண் 71, பெண் 65 ஆக மொத்தம் 136 விவரக்கோவைகள்!**



- மேலதிக விபரங்களைச் சுய தெரிவுமுறை முன்னோடி, மூத்த, புகழ் பூத்த, சர்வதேச, சகலருக்குமான தங்கள் திருமண ஆற்றுப்படுத்துநர், தனிநபர் நிறுவுநர், குரும்பசிட்டியூர், மாயெழு வேல் அமுதனிடம் விசாரணைக்கென ஒதுக்கப்பட்ட திங்கள், புதன், வெள்ளி மாலை வேளைகளில் தொலைபேசி இலக்கம் 2360488, 2360694, 4873929 இல் விசாரித்தறிகுக!
- சந்திப்பு முன்னேற்பாட்டு ஒழுங்கு முறையில் திங்கள், புதன், வெள்ளி, சனி, ஞாயிறு நாட்களில்!
- **முகவரி :**
  8.3.3 மெற்றோ மாடிமனை
  (வெள்ளவத்தை காவல் நிலையத்திற்கு முன்பாக நிலப்பக்கம், 33ம் ஒழுங்கை வழி)
  55 ஆம் ஒழுங்கை,
  வெள்ளவத்தை,
  கொழும்பு - 06.

**சுலபமான தெரிவுக்குச் சுயதெரிவு முறையே!**

**மகோன்னத மணவாழ்வுக்குக் குரும்பசிட்டியூர் மாயெழு வேல் அமுதனே!**

# ஹனா கிராபிக்ஸ்
# Hana Graphics

## எமது சேவைகள்

தரமான
சேவையை
மலிவாகப்
பெற்றுக்
கொள்ளுங்கள்...!



கறுப்பு - வெள்ளைப் புகைப்படத்தை வர்ணமாக்குதல்



நீங்கள் விரும்பிய பின்னணியில் உங்கள் புகைப்படத்தைப் பொருத்துதல்.



புகைப்படத்தில் இருப்பவரை ரேகைச் சித்திரமாக்கி நிறந்தீட்டுதல்



வியாபாரம் மற்றும் தொழில் சம்மந்தமான விளம்பரங்களை வடிவமைத்தல்

புகைப்படத்தில் உள்ள உங்கள் முகத்தில் காணப்படும் தேவையற்ற புள்ளிகள், பருக்கள் என்பன நீக்கப்பட்டு அழகாக மாற்றப்படும். மற்றும் அனைத்துவிதமான வடிவமைப்புக்களும் மிகவும் குறைந்த விலையில் செய்து தரப்படும்.

இதைத் தவிர பூப்புனித நீராட்டு விழா, பிறந்தநாள் அழைப்பிதழ்களும் மற்றும் அனைத்துவிதமான அழைப்பிதழ்களும் வடிவமைத்துக் கொடுக்கப்படும்.

கல்யாண மற்றும் பூப்புனித நீராட்டு ஆல்பம் சிறந்த முறையில் வடிவமைத்துக் கொடுக்கப்படும்.

சிங்களத்தில் இருந்து தமிழுக்கு, மற்றும் தமிழில் இருந்து சிங்களத்திற்கும் கடிதங்கள், விபரங்கள் மொழிபெயர்ப்பு செய்து தரப்படும்.

**இல.15, டயஸ் வீதி, மட்டக்களப்பு.**

**தொடர்புகளுக்கு : +94 652224820 / +94 719105237**

**மின்னஞ்சல் : hanags21@yahoo.com**


Sun Printers - 05, Iruthayapuram West, Batticaloa. 065-2222597